# ஆண்டறிக்கை
# 2023



සී/ස හලාවත වැවිලි සමාගම
வரை. சிலாபம் பெருந்தோட்ட நிறுவனம்
**CHILAW PLANTATIONS LTD**

රාජ්‍ය වැවිලි ව්‍යවසාය ප්‍රතිසංස්කරණ කැබිනට් නොවන අමාත්‍යාංශය
அரச பெருந்தோட்ட தொழில்முயற்சிகள் மறுசீரமைப்பு அமைச்சரவை அந்தஸ்து அல்லாத அமைச்சு
NON CABINET MINISTRY OF STATE PLANTATION ENTERPRISE REFORMS

# உள்ளடக்கம்


| | பக்க இல. |
|---|---|
| தூரநோக்கு மற்றும் பணிக்கூற்று | 02 |
| நிதிசார் முக்கிய தகவல்கள் | 03 |
| தலைவரின் மீளாய்வு | 04 - 05 |
| பணிப்பாளர் சபை | 06 - 08 |
| சிரேஷ்ட முகாமைத்துவ உறுப்பினர்கள் | 09 |
| முகாமைத்துவ மீளாய்வு | 10 - 19 |
| நிதி மீளாய்வு | 20 - 23 |
| நிறுவனத்தின் ஆளுமை | 24 |
| அபாய முகாமைத்துவம் | 25 - 27 |
| கணக்காய்வு குழு அறிக்கை | 28 |
| **நிதி அறிக்கைகள்** | |
| பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கை | 29 - 31 |
| பணிப்பாளர்களின் பொறுப்புக்கள் பற்றிய கூற்று | 32 |
| கணக்காய்வாளர் தலைமையகத்தின் அறிக்கை | 33 - 36 |
| முற்றடக்கிய வருமானக்கூற்று | 37 |
| நிதி நிலமைக்கூற்று | 38 |
| உரிமையாண்மை கூற்று | 39 |
| காசுப்பாய்ச்சல் கூற்று | 40 |
| நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் | 41 - 74 |
| பத்து ஆண்டுச் சுருக்கம் | 75 |
| வருடாந்த பொதுக்கூட்டத்துக்கான அறிவித்தல் | 76 |
| பெறுகை (Proxy) படிவம் | 77 |
| நிறுவனத்தின் தகவல்கள் | 78 |

## தூரநோக்கு

தென்னை உற்பத்தியினால் பெறும் நிலைபெறுதகு அபிவிருத்தியின் ஊடாக இலங்கையின் பொருளாதாரத்துக்கான அதி உயர் பங்களிப்பினை வழங்கள்

## பணிக்கூற்று

வரையறுக்கப்பட்ட வளங்களின் பயன்பாட்டினை பயனுள்ள மற்றும் திறமையான முறையில் பயன்படுத்துவதன் மூலம் தென்னை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளை நிலையான அபிவிருத்தி அடையச்செய்வதும், ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கைகள் மூலம் பொதுமக்கள் மற்றும் ஊழியர்களின் வாழ்க்கை தரத்தினை உயர்த்துதல்

## பெறுமதிகள்

- நேர்மை
- தொடர்தண்மை
- வெளிப்படைத்தண்மை
- தலைமைத்துவம்
- பொறுப்பு மற்றும் பொறுப்புகூறல்
- கூட்டு முயற்சி
- அதிகாரமளித்தல்
- புத்தாக்கம்
- நிபுணத்துவம்

# நிதிச் சிறப்பம்சங்கள்

| | 2023 | 2022 | வேறுபாடு % |
|---|---|---|---|
| தென்னை உற்பத்தி (தேங்காய்கள்) “000 | 11,729 | 15,172 | (22.69) |

| சுருக்கப் பெறுபேறு | Rs'000 | Rs'000 | % |
|---|---|---|---|
| வருமானம் | 899,694 | 975,106 | (8) |
| மொத்த இலாபம் | 227,783 | 454,166 | (50) |
| வரி வட்டிக்கு முன் இலாபம் | 126,873 | 421,700 | (70) |
| வரிக்கு முன் இலாபம் | 302,606 | 513,881 | (41) |
| ஆண்டுக்கான இலாபம் (வரிக்கு பின்) | 231,738 | 493,470 | (53) |
| மொத்த முற்றடக்க வருமானம் | 209,549 | 513,971 | (59) |
| மொத்த ஒதுக்குகள் | 2,179,602 | 2,155,053 | 1 |

| நிதி நிலமைகள் | | | |
|---|---|---|---|
| நடை முறை அல்லாத சொத்துக்கள் | 1,590,941 | 1,476,523 | 8 |
| முதிர்ந்த / முதிர்வுறாத பெருந்தோட்டங்கள் | 1,100,977 | 1,039,764 | 6 |
| நடைமுறை சொத்துக்கள் | 1,456,651 | 1,413,509 | 3 |
| இறுப்புக்கள் | 148,934 | 195,288 | (24) |
| குறுங்கால முதலீடுகள் (நிலையான வைப்புக்கள்) | 1,090,243 | 985,661 | 11 |
| மொத்த சொத்துக்கள் | 3,047,593 | 2,890,032 | 5 |
| நடைமுறை பொறுப்புக்கள் | 408,540 | 362,575 | 13 |
| நடைமுறை அல்லாத பொறுப்புக்கள் | 259,450 | 172,404 | 50 |
| கூறப்பட்ட மூலதனம் | 200,000 | 200,000 | - |
| பங்குதாரர்களின் நிதிகள் | 2,379,602 | 2,355,053 | 1 |

| நிதிக் குறிகாட்டிகள் | தடவைகள்/ %/Rs. | தடவைகள்/ %/Rs. | வேறுபாடு % |
|---|---|---|---|
| நடைமுறை வீதம் (தடவைகள்) | 3.57 | 3.90 | (9) |
| விரைவு வீதம் (தடவைகள்) | 3.20 | 3.36 | (5) |
| மொத்த இலாப வீதம் (%) | 25.32 | 46.58 | (46) |
| பங்கொன்றுக்கான உழைப்பு (ரூபா.) | 11.59 | 24.67 | (53) |
| சராசரி உரிமையாண்மை மீதான திரும்பல்கள் - % | 9.79 | 23.08 | (58) |
| மூலதன முதலீட்டின் மீதான திரும்பல்கள் - % | 4.81 | 16.68 | (71) |
| கடன் வீதம் | 0.22 | 0.19 | 18 |
| பங்காளர் நிதி வீதம் % | 78.08 | 81.49 | (4) |
| வட்டி உள்ளடக்கம் (தடவைகள்) | 2.06 | 9.65 | (79) |

# தலைவரின் மீளாய்வு

2023 ஆம் ஆண்டு சிலாபம் பெருந்தோட்டக் நிறுவனத்துக்கு மற்றொரு சவாலான ஆண்டாகும் ஏனெனில் கம்பனி கடந்த மூன்று ஆண்டுகளாக தொடர்ச்சியாக அதிக இலாபத்தை பதிவு செய்ய முடிந்ததுள்ளது. இந்தப் பின்னணியில், 2023 ஆம் நிதியாண்டில் நிறுவனத்தின் முன்னேற்றத்தை சுருக்கமாகக் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

கடந்த மூன்று ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்ட தொடர்ச்சியான வளர்ச்சியை விஞ்சி வெற்றிகரமான ஆண்டை உருவாக்க பொருளாதார மற்றும் சமூக சவால்களுக்கு மத்தியில் நிறுவனத்தை வழிநடத்துவது சவாலாக இருந்தது. நாடு பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டு வந்தாலும், நாட்டின் பொருளாதாரச் சூழலில் அடிக்கடி ஏற்படும் ஏற்ற இறக்கங்கள் காரணமாக இறக்குமதி மீதான கட்டுப்பாடுகள், சந்தை உறுதியற்ற தன்மை போன்றன காணப்பட்டன. இந்த அச்சுறுத்தல்களுக்கு அப்பால் 2023 ஆம் ஆண்டை சிலாபம் பெருந்தோட்ட நிறுவனம் சாதகமான ஒன்றாக மாற்றியமை பாராட்டத்தக்கது.

**விவசாய செயற்பாடு**

**தென்னை உற்பத்தி**

நாட்டில் உரத் தட்டுப்பாடு மற்றும் காலநிலையில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாக கடந்த வருடங்களில் உரப் பயன்பாடு குறைக்கப்பட்டிருந்த போதிலும், நிறுவனம் தென்னையிலிருந்து 756.6 மில்லியன் ரூபா வருமானத்தை ஈட்டியுள்ளது. சிறந்த விவசாய நடைமுறைகள் மற்றும் மூலோபாய முகாமை முறைகள் பின்பற்றப்பட்டதன் விளைவாக, நிறுவனம் அந்த ஆண்டில் தென்னையில் இருந்து உச்ச வருமானத்தை ஈட்ட முடிந்தது. தென்னை உற்பத்தியிலிருந்து ஈட்டப்பட்ட இலாபம் ரூ. 212.2 மில்லியன் இது மொத்த இலாபத்தில் 93% ஆக இருப்பதுடன். இது சிலாபம் பெருந்தோட்ட நிறுவனன வரலாற்றில் ஈட்டிய 3வது அதிகபட்ச இலாபமாகும்

நாடு முழுவதும் பரவிய வெள்ளை ஈ தாக்குதல் முகாமையால் ஒழுங்கமைக்கப்பட்ட தன்னிச்சையான நடவடிக்கை மற்றும் பயிற்சி அமர்வுகளால் கவனமாகவும் சரியான நேரத்திலும் கட்டுப்படுத்தப்பட்டது. வெள்ளை ஈத் தாக்குதலால் முக்கிய பயிரில் எந்த பொருளாதார சேதத்தையும் நிறுவனம் எதிர்கொள்ளவில்லை.

மூடு பயிர்கள் தாபிக்கப்பட்டு முன்ரிமை கொடுத்து முகாமை செய்யப்பட்டு ஆண்டு முழுவதும் 9,700 நாற்றுகள் நடப்பட்டன. புதிதாக நிறுவப்பட்ட புதிய / நடுகை செய்யப்பட்ட பரப்பளவு 158 ஏக்கர்கள் ஆகும். இந்த பருவத்தில், நிறுவனம் தென்னைக் கைத்தொழிலை மேம்படுத்துவதற்காக மூலதனச் செலவினத்தின் கீழ் 928 ஏக்கர் புதிய மற்றும் ஏற்கனவே முதிர்ச்சியடையாத தோட்டங்களை பராமரித்து நிறுவுவதற்கு ரூ. 55.3 மில்லியன் தொகையைச் செலவிட்டது.

மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையிலிருந்து 30 வருட குத்தகைக் காலத்தில் 269 ஹெக்டயார் நிலத்தை கையகப்படுத்திய பிறகு வரையறுத்த சிலாபம் பெருந்தோட்டக் நிறுவனமானது வட மாகாணத்தில் இருக்கும் ஒரே RPC நிறுவனமாக உருவெடுத்துள்ளது. இந்தக் காணிகள் கிளிநொச்சியில் அமைந்துள்ளன. இந்த கையகப்படுத்துதலுடன் வரையறுத்த சிலாபம் பெருந்தோட்ட நிறுவனத்தின் மொத்த நிலப்பரப்பு 5723 ஹெக்டரிலிருந்து 5992 ஹெக்டேராக அதிகரித்துள்ளது.

**விசேட செயற்திட்டங்கள்**

வரையறுத்த சிலாபம் பெருந்தோட்ட நிறுவனத்தின் அனைத்து திறன்களிலிருந்தும் மிக உயர்ந்த உற்பத்தித்திறனை அடைவதற்கான முயற்சிகளின் விளைவாக, ஒரு கூட்டு முயற்சியாக தொடரும் இரண்டு 10 மெகாவாட் சூரிய சக்தி செயற்திட்டங்களை நிறுவுவதற்கு தனியார் துறை முதலீட்டாளரை தேர்ந்தெடுக்க முடிந்தது.

மேலும், தனியார் துறை முதலீட்டாளருடன் கூட்டு முயற்சியாக சர்வதேச சந்தையை மையமாக வைத்து பெறுமதி சேர்க்கப்பட்ட தேங்காய் அடிப்படையிலான ஒருங்கிணைந்த பதப்படுத்தும் தொழிற்சாலையை நிறுவுவதற்கு அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**சொட்டுநீர் நீர்ப்பாசனம்**

நிறுவனத்தின் உற்பத்திக்கு முக்கிய தடைக் காரணியாக தண்ணீர் பற்றாக்குறை அடையாளம் காணப்பட்டுள்ளது. குறிப்பாக, புத்தளம் மாவட்டத்தில் உலர் வலயத்தில் உள்ள தோட்டத்தின் பெரும்பகுதியைக் கொண்ட நிறுவனமாக இருப்பதால், இந்த நிலைமையைப் போக்குவதற்காக, ஒவ்வொரு தோட்டங்களிலும் 25 ஏக்கர் தென்னை நிலத்தில் சொட்டு நீர்ப் பாசன முறைமைகளை நிறுவ ஆரம்பித்தோம். மங்கலஎலிய மற்றும் தம்பன்னி பிரதேச தோட்டங்களின் சொட்டு நீர்ப்பாசனத் திட்டங்கள் 2022 ஆம் ஆண்டு பூர்த்தி செய்யப்பட்டதோடு, பலுகஸ்வெவ பிரதேச தோட்டம் மற்றும் மாதம்பே பிரதேச தோட்டத்தின் திட்டங்கள் 2023 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டன. இதனை நிறைவேற்றுவதில் பல சவால்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது மற்றும் முறையான நீர்ப்பாசன முறைமைகளை கொண்டிருக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் எதிர்வரும் வருடங்களிலும் அதனையே தொடர உத்தேசித்துள்ளோம்.

**இடைப் பயிரச் செய்கை**

முந்தைய ஆண்டு லாபமான ரூ 10 மில்லியனை ஒப்பிடும் போது மரமுந்திரி பயிரிடுவதன் மூலம் 2023 ஆம் ஆண்டில் நிறுவனம்' ரூ 17 மில்லியன் இலாபத்தை பதிவு செய்துள்ளது.

மேலும், வரையறுத்த சிலாபம் பெருந்தோட்ட நிறுவனமானது டிராகன் பழ உற்பத்தி, கறுவாப்பட்டை, ரம்புட்டான், மிளகு மற்றும் மா உற்பத்தியை பிரதான ஊடுபயிராக நிறுவியுள்ளது. இந்த திட்டங்களின் மூலம் நிறுவனம் கணிசமான வருமானத்தை ஈட்டியுள்ளது.

**ஏனைய செயற்திட்டங்கள்**

தயிர், சுவையூட்டப்பட்ட தயிர், நெய் மற்றும் பிற பெறுமதி கூட்டப்பட்ட பால் பொருட்களை உற்பத்தி செய்வதற்காக பலுகஸ்வெவ பகுதி தோட்டத்தில் எருமைமாடு செயற்திட்டம்

நிறுவப்பட்டுள்ளது. பலுகஸ்வெவ பிரதேச தோட்டத்தில் மரமுந்திரி பதப்படுத்தும் நிலையம் மற்றும் தேங்காய் எண்ணெய் ஆலை என்பன நிறுவப்பட்டு இந்த பதப்படுத்தும் நிலையங்கள் வெற்றிகரமாக நடத்தப்பட்டு வாடிக்கையாளர்களுக்கு தரமான பொருட்கள் வழங்கப்பட்டன. மேலும், எங்கள் தயாரிப்புகள் விற்பனை முகவர்கள் மற்றும் எங்கள் சொந்த விற்பனை நிலையம் மூலம் பொது மக்களிடையே விநியோகிக்கப்பட்டன.

**ஊழியர் நலன்புரி மற்றும் கூட்டாண்மை சமூக பொறுப்புக்கள்**

கடந்த வருடங்களில் ஆரம்பிக்கப்பட்ட நலன்புரி செயற்பாடுகளை நிறுவனம் தொடர்ந்து முன்னெடுத்ததுடன், ஊழியர்களின் பிள்ளைகளின் கல்வி மட்டத்தை உயர்த்துவதற்கு குறிப்பிட்ட கவனம் செலுத்தப்பட்டது மற்றும் கல்வியில் தொடர விசேட தேவையுடைய இனங்காணப்பட்ட பிள்ளைகளுக்கு உதவிகள் வழங்கப்பட்டன.

CPL இன் சமூக மேம்பாட்டு முயற்சிகளின் நோக்கத்துடன் கடந்த காலத்தைப் போலவே பின்வரும் நலன்புரி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

1. CPL தயாரிப்புகளை சமூகத்திற்கு சலுகை விலையில் விற்பனை செய்தல்.
2. சாகுபடிக்கு நிலத்தை துணை குத்தகைக்கு விடுதல்.
3. அனைத்து மத ஸ்தலங்களுக்கும் தென்னை நாற்றுகள் விநியோகம் சமூகத்தின் நலனுக்காக மேற்கொள்ளப்பட்டது.
4. நாட்டின் தென்னை மரங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க சமூகத்திற்கு தென்னை நாற்றுகளை விநியோகித்தல்.

பெரும்பாலான அரச நிறுவனங்கள் சிறப்பாகச் செயல்படுவதற்கு கடின நிலையை அனுபவிக்கும் போது, நிறுவனம' மீண்டும் தொடர்ச்சியான இலாபத்தைப் பெற்றுள்ளது. அப்பகுதி மக்களின் முன்னேற்றம், தென்னை கைத்தொழில் மற்றும் சமூகத்தின் முன்னேற்றம் போன்ற அம்சங்களுக்கு முன்னுரிமை அளித்ததன் மூலம் இது அடையப்பட்டது.

2023 ஆம் ஆண்டுக்கான வருடாந்தக் கணக்குகளுக்கான குறைபாடுகளற்ற (தகுதியற்ற) கணக்காய்வுக் கருத்தை இலங்கையின் கணக்காய்வாளர் திணைக்களத்திடமிருந்து கணக்காய்வு ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் முதன்முறையாக கணக்காய்வாளர் நாயகத்திடமிருந்து எங்களால் பெற முடிந்தது.

எங்களின் வெற்றிக்காக அயராத ஆதரவையும் வழிகாட்டலையும் வழங்கிய அரச பெருந்தோட்ட முயற்சியாண்மை மறுசீரமைப்பு அமைச்சரவை சாரா அமைச்சர், கௌரவ ரஞ்சித் சியம்பலாபிட்டிய மற்றும் பணிப்பாளர் சபைக்கு நான் மனப்பூர்வமாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும், தீர்மானம் எடுக்கும் செயற்பாட்டில் விசேட ஆதரவை வழங்கிய அமைச்சின் செயலாளர் கலாநிதி எம்.எம்.எஸ்.எஸ்.பி. யாலேகமவுக்கும் மற்றும் பணியாளர்களுக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பணிப்பாளர் சபையின் ஆதரவு மகத்தானது, இது நிறுவனங்களின் இலக்குகளை அடையவும் எனது பணியை எளிதாக்குவதற்கும் வெகுவாக உதவிபுரிந்து மற்றும் அவர்களின் பங்களிப்புக்காக பணிப்பாளர் சபையிற்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறேன்.

மேலும், நிறுவனத்தின் சிரேஷ்ட முகாமைத்துவம், தோட்ட மேற்பார்வையாளர்கள் மற்றும் நிறுவனத்தின் ஊழியர்கள், விநியோகஸ்தர்கள், கொள்வனவாளர்கள் மற்றும் எமது பயணத்திற்கு ஆதரவளித்த அனைவருக்கும் இதன் மூலம் மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தலைவர் / பி.நி.அ.
வரையறுத்த சிலாபம் பெருந்தோட்ட நிறுவனம்

# பனிப்பாளர் சபை உறுப்பினர்கள்



**திரு. ஜூட் ரூகாந்த பெரேரா**
(B.A, M.A., H.S.D.)
தலைவர்/பிரதான நிறைவேற்று அதிகாரி

திரு. ஜூட் ரூகாந்த பெரேரா அவர்கள் வரை. சிலா. பெருந்தோட்ட நிறுவனத்தின் தலைவர் / பிரதான நிறைவேற்று அதிகாரியாக 01.01.2020 அன்று நியமிக்கப்பட்டார்.

திரு. ஜூட் அவர்கள் கௌரவமிக்க வழக்கறிஞர் குடும்பத்தில் இருந்து வந்தவராவார். இவர் கொழும்பு பல்கலைக்கழகம், அக்வைனாஸ் பல்கலைக்கழக கல்லூரி மற்றும் கௌனிய பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றுள்ளார். இவர் கலைப்பிரிவில் இளமானி பட்டமும், (Master) பட்டமும் பெற்றுள்ளார். இவர் கள சேவைகளுக்காக அமெரிக்காவில் புலமைபரிசில் வெற்றுள்ளார்.

திரு. ஜூட் ரூகாந்த பெரேரா அவர்கள் கேகாலை மாவட்டத்தில் முன்னால் மேயராக காணப்பட்டுள்ளதோடு கேகாலை மாவட்ட நகர சபையை இலங்கையில் சிறந்த நகர சபையாக உயர்த்த முடிந்துள்ளது. கடந்த ஆண்டுகளில் பல அமைச்சுக்களில் ஒருங்கிணைப்பு செயலாளராகவும், ஊடக செயலாளராகவும் பணியாற்றிய அவர் மாநிலத் துறை செயற்பாடுகளிலும் பங்குவகித்துள்ளார்.

2009-2015 காலப்பகுதிகளில் இவர் குருணாகலை பெருந்தோட்ட நிறுவனத்தின் செயற்பாட்டு பனிப்பாளராக கடமையாற்றியுள்ளதோடு, அங்கு அவர் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கி குருணாகல பெருந்தோட்ட நிறுவனம் உயர் இலாபங்களை அடைந்துகொள்ள வழிவகுத்துள்ளார்.

மேலும் இவர் புகழ்பெற்ற தனியார் நிறுவனம் ஒன்றில் சிரேஷ்ட முகாமைத்துவ குழு அங்கத்துவராகவும் கடமைபுரிந்துள்ளார். திரு. ஜூட் ரூகாந்த பெரேரா அவர்கள் ஈர்க்கக்கூடிய முகாமைத்துவ திறன் மற்றும் சிறந்த தலைமைத்துவ திறன்களில் சிறந்த வெளிக்காட்டல்கதை அரச மற்றும் தனியார் துறைகளில் வெளிக்காட்டியுள்ளார்.

இவரது தலைமைத்துவத்தின் கீழ் 2023 டிசம்பர் இறுதிக்குள் வரை. சிலா. பெருந்தோட்ட நிறுவனம் வரலாற்றில் அதி உயர் இலாபத்தை பதிவு செய்துள்ளதோடு, நிறுவனத்தின் விரைவான முன்னேற்றத்தை அவதானிக்கலாம். அதே நேரம் திரு. ஜூட் ரூகாந்த பெரேரா அவர்கள் சர்வதேச சந்தையில் பெறுமதி சேர்க்கப்பட்ட விரிவுபடுத்தும் நோக்குடன் புதிய கருத்திட்டங்களை திட்டமிட்டுள்ளார்.

இவர். சிறந்த படிப்பறிவுள்ள, தோட்டத்துறை குறித்த சிறந்த அறிவுள்ள மற்றும் சிறந்த மேலாண்மை மற்றும் தலைமைத்துவ திறன்களை கொண்ட அனுபவம் வாய்ந்த தொழில் வல்லுனர் ஆவார்.



**திரு. P.H ஆனந்த S விஜேரத்ன**
பனிப்பாளர்

திரு. P.H ஆனந்த S விஜேரத்ன அவர்சள் சிலா. பெருந்தோட்ட நிறுவனத்தின் பனிப்பாளர் சபையின் பனிப்பாளராக 28.12.2023 அன்று நியமிக்கப்பட்டதோடு, இவர் 2021.11.01 அன்று நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் விசேட தர அலுவலராக கடமைப்பொறுப்பேற்ற, திட்டமிடல் சேவை மற்றும் பொதுச்சேவையில் அன்னளவாக 30 ஆண்டுகள் பதவிகளில் இருந்து, 25 ஆண்டுகள் திறைசேரியில் வெவ்வேறு பதவி வகித்துள்ளார். திரு. ஆனந்த விஜேரத்ன அவர்கள் 1994 இல் உதவிப் பனிப்பாளராக அரச சேவையில் இணைந்துள்ளார்.

திரு. ஆனந்த விஜேரத்ன ருஹுனு பல்கலைக்கழகத்தில் வணிக நிர்வாகம் (விஷேடம்) இளங்கலை பட்டம் பெற்றவராவார். கொழும்பு பல்கலைக்கழகத்தில் தேசிய அபிவிருத்தி திட்டமிடலில் முதுகலை டிப்ளோமாவும், தென் கொரியாவில் உள்ள குங் ஹீ பல்கலைக்கழகத்தில் முதுகலைப் பட்டமும் பெற்றுள்ளார். அவர் 1996 இல் இலங்கை பட்டயக் கணக்காய்வாளர் நிறுவகத்தின் நிபுணத்துவம் - பகுதி 1 ஐயும் முடித்துள்ளார்.

1994 இல் இலங்கை திட்டமிடல் சேவையில் இணைந்து கொண்ட அவர், பதுளை மாவட்டத்திழல் உள்ள ரிதீமாலியத்த பிரதேச செயயகத்துக்க இணைத்துக்கொள்ளப்பட்டார். அவர் 1999 இல் வெளிநாட்டு வளத்துறையில் சேர்ந்தார். மற்றும் 2011 இல் தேசிய வரவு செலவுத் துறையின் இயக்குனராக நியமிக்கப்பட்டார். அவர் 2013 இல் நிதி அமைச்சகத்தின் பொது நிறுவனங்களின் துறைக்கு மேலதிக இயக்குனர் ஜெனராலாக நியமிக்கப்பட்டு, 2020 ஆம் ஆண்டில் நிதி மற்றும் மூலதனச் சந்தை மற்றும் நிறுவனச் சீர்த்திருத்தங்களுக்கான அரச அமைச்சகத்தின் பொது பனிப்பாளர் பதவி உயர்த்தப்பட்டு, தற்போது நிதி, பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சகத்தில் அதே திறனில் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றார்.

திரு. ஆனந்த வஜேரத்ன பல அரச நிறுவனங்களில் பனிப்பாளர் சபை உறுப்பினராக செயல்பட்டுள்ளார்.



**திரு. W.A.L விக்ரம ஆரச்சி**
பனிப்பாளர்

திரு. லீலந்த் விக்ரம ஆரச்சி அவர்கள் சிலா. பெருந்தோட்ட நிறுவனத்தின் பனிப்பாளர் சபை உறுப்பினராக 09.04.2024 அன்று நியமிக்கப்பட்டார். மேலும் அவர் இலங்கை நிர்வாக சேவையின் உறுப்பினராகவும், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் இளங்கலை (தொல்லியல்)(கௌரவ) பட்டதாரியாகவும், எம்.பீ.ஏ ஆஸ்திரேலியாவின் ஆஸ்திரேலிய தேசிய பல்கலைக்கழகத்தின் பொது நிர்வாகத்தில், அமைச்சகத்தின் தோட்ட மேலாண்மை கண்காணிப்பு பிரிவின் இயக்குநராக உள்ளார். தோட்டத் தொழில்கள், தோட்டப் பகுதிக்கான புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகார சபையின் (NEVIDA) பனிப்பாளர் சபையிலும் அவர் பணியாற்றுகிறார்.



**திரு. H W W ரத்னபால**
பனிப்பாளர்

திரு. H W W ரத்னபால அவர்கள் சிலா. பெருந்தோட்ட நிறுவனத்தின் பனிப்பாளர் சபை உறுப்பினராக 01.03.2024 அன்று நியமிக்கப்பட்டார். இவர் Ranweli engineers, an C4 CIDA நிறுவனத்தின் பங்குதாரருமாவார். இவர் திறந்த பல்கலைக்கழகத்தில் ஆடை துறையில் தொழில்நுட்ப டிப்ளோமா பட்டம் பெற்றுள்ளார். NIBM இல் சொத்து மேலாண்மை மற்றும் வாடிக்கையாளர் தொடர்பு தொடர்பான பயிற்சிகளையும், பேராதெனிய பல்கலைக்கழகத்தின் சுற்றாடல் ஆய்வுகளுக்கான நிலையத்தினால் நடாத்தப்பட் மனித வள முகாமை பாடநெறியையும் பயின்றுள்ளார்.



**திரு. K L விஜேசிரி**
பனிப்பாளர்

திரு. K L விஜேசிரி அவர்கள் சிலா. பெருந்தோட்ட நிறுவனத்தின் பனிப்பாளர் சபை உறுப்பினராக 01.03.2024 அன்று நியமிக்கப்பட்டார். இவர் வெவ்வேறுபட்ட திறன்களைக் கொண்டவராவார். Panaroma முதலீடு மற்றும் சேவைகள் தனியார் நிறுவனம், Selee சோக்லேட் உற்பத்தி, செனுரா என்டர்பிரைஸஸ் ஆகிய நிறுவனங்களின் உரித்தாளருமாவார். திரு. K L விஜேசிரி அவர்கள் மொறட்டுவையில் உள்ள சிலோன் ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தில் மோட்டார் வாகன தொழில்நுட்ப பாடநெறியையும், கொழும்பு டிரைடொக்ஸ் நிறுவனத்தில் கடல்சார் பொறியியல் பாடநெறியையும் வெற்றிகரமாக முடித்துள்ளார்.



**திரு. சஞ்சீவ அபேகோன்**
பனிப்பாளர்

திரு. சஞ்சீவ அபேகோன் அவர்கள் சிலா. பெருந்தோட்ட நிறுவனத்தின் பனிப்பாளர் சபை உறுப்பினராக 01.03.2024 அன்று நியமிக்கப்பட்டார். ஐக்கிய தேசிய கட்சி அமைப்பில் 30 வருடங்களுக்கு மேலான அரசியல் அனுபவமுள்ளவராவார். தற்போது யட்டியன்தோட்ட மாவட்ட ஐக்கிய தேசிய கட்சியின் அமைப்பாளராக கடமையாற்றுகின்றார். ஒரு அனுபவமிக்க அரசியல் தலைவராக, சுகாதாரம், கல்வி மற்றும் உற்கட்டமைப்பு போன்ற முக்கியமான துறைகளில் தாக்கம் செலுத்தும் திட்டங்களை வெற்றிகரமாக துவக்கி மேற்பார்வையிட்டார். உள்ளூராட்சி சபைத் தேர்தலில் (2011-2016) எதிர்கட்சித் தலைவராக தெரிவு செய்யப்பட்ட அவர், நாடாளுமன்றத் தேர்தலின் போது (2021) ஐக்கிய தேசிய கட்சியில் அதிக சதவீத வாக்குகளைப் பெற்றவர். திரு. சஞ்சீவ தனது விரிவான அரசியல் அனுபவத்தை பயன்படுத்தி சமூகத்தின் முன்னேற்றத்துக்காக நேர்மறையான மாற்றங்களை ஏற்படுத்த ஆர்வமாக உள்ளார்.



**திரு. K G S விஜேசிரி பண்டார**
பனிப்பாளர்

திரு. K G S விஜேசிரி பண்டார அவர்கள் சிலா. பெருந்தோட்ட நிறுவனத்தின் பனிப்பாளர் சபை உறுப்பினராக 01.03.2024 அன்று நியமிக்கப்பட்டார். அவர் பல்துறை வணிகத்தில் 20 வருட அனுபவம் கொண்டவராவார்.



**திரு. W R P S ஜயரத்ன**
பனிப்பாளர்

திரு. W R P S ஜயரத்ன அவர்கள் சிலா. பெருந்தோட்ட நிறுவனத்தின் பனிப்பாளர் சபை உறுப்பினராக 01.03.2024 அன்று நியமிக்கப்பட்டார். அவர் ஒரு தொழில் அதிபரும், ஸப்ரகமுவ மாகாண முன்னால் உறுப்பினரும், வரகாபொல பிரதேச சபை உள்ளூராட்சி மன்ற உறுப்பினரும் ஆவார்.

# சிரேஷ்ட முகாமைத்துவக் குழு

**பிரதான அலுவலகம்**

| | | | |
|---|---|---|---|
| 1 | திரு. ஆர்.டப்.எம்.ஜே.எஸ்.ஆர். பெரேரா | - | தலைவர் / பிரதான நிறைவேற்று அதிகாரி |
| 2 | திரு. ஏ.ஜீ.ஆர்.எம்.எம். ரணவீர | - | பொது முகாமையாளர் (ராஜினாமா திகதி – 31.10.2023) |
| 3 | திரு. பீ. ஹெட்டிஆரச்சி | - | துணை முகாமையாளர் - பெருந்தோட்டம் (Actng.) |
| 4 | திரு. ஆர்.எம்.ஆர்.பீ ரத்நாயக்க | - | உதவி பொது முகாமையாளர் - நிதி |
| 5 | திரு. எச்.பீ.எம்.டபிள்யு ஹேமசந்திர | - | பிரதம உள்ளக கணக்காய்வாளர் |
| 6 | திரு. ஏ.எம்.டீ.எச்.பீ அத்தபத்து | - | உ. பொது முகாமையாளர் - (மனிதவள/நிர்வாகம்) (Actng.) |
| 7 | திரு. ஏ.ஏ அஷோக ஆனந்த | - | உதவி பொது முகாமையாளர் - (தோட்டம்/கருத்திட்டம்) |
| 8 | திரு. டபிள்யு.கே பிரதீப் | - | Snr. முகாமையாளர் (தொ.நுட்ப ரூ அபிவிருத்தி) |
| 9 | திரு ஏ.என்.ஏ.எஸ் கருணாதுங்க | - | விற்பனை முகாமையாளர் |

**தோட்ட அத்தியட்சகர்கள்**

| | | | |
|---|---|---|---|
| 11 | திரு. எம்.ஜீ.சீ. டயஸ் | - | உதவி பொது முகாமையாளர் - தோட்டம் / பெருந்தோட்டம் திவுலபிட்டிய பிரதேச தோட்டங்கள் |
| 12 | திரு. ஜே.எச். பெர்ணான்டோ | - | Snr. அத்தியட்சகர், பளுகஸ்வெவ பிரதேச தோட்டங்கள் |
| 13 | திரு. டீ.எம்.ஜீ.ஏ. திசாநாயக்க | - | அத்தியட்சகர், மாதம்பை பிரதேச தோட்டங்கள |
| 14 | திரு. பி.எம்.யு.பி பஸ்நாயக்க | - | அத்தியட்சகர், சிலாபம் பிரதேச தோட்டங்கள் |
| 15 | திரு. ஏ.எம்.டீ. குணதிலக | - | அத்தியட்சகர், பிங்கிரிய பிரதேச தோட்டங்கள் |
| 16 | திரு. எச்.டீ.எஸ். பெரேரா | - | அத்தியட்சகர், தம்பபன்னி பிரதேச தோட்டங்கள் |
| 17 | திரு. பீ.ஏ.பீ.டீ தர்மசேன | - | அத்தியட்சகர், மங்கள எளிய பிரதேச தோட்டங்கள் |
| 18 | திரு. கே.ஏ.என்.ஐ கருணாரத்ன | - | அத்தியட்சகர், நிகவரடிய பிரதேச தோட்டங்கள் |

## முகாமைத்துவ மீளாய்வு

**தோட்டங்களின் அமைவு**

சிலாபம் பெருந்தோட்ட நிறுவனமபனது, பெருந்தோட்ட நிறுவனங்களின் தென்னை உற்பத்தியில் முன்னோடியா உள்ளது. நிறுவனத்துக்கு சொந்தமான நிலங்கல் முக்கியமாக புத்தளம், குருணாகலை மற்றும் கம்பஹா ஆகிய 3 மாவட்டங்கலில் வியாபித்துள்ளது. அடிப்படை ஆண்டில், கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த பளைத் தோட்டங்களின் 04 அலகுகள், ஜனதா தோட்ட அபிவிருத்தி சபையால் (JEDB) நிர்வகிக்கப்பட்டு, 30 வருட குத்தகை அடிப்படையில் கையகப்படுத்தப்பட்டு, பளைத் தோட்ட வலயம் நிறுவப்பட்டு சிலாப பிரதேசத்தினால் காணிகள் நிர்வகிக்கப்பட்டு, சிலாபம் பெருந்தோட்ட நிறுவனம் வடக்கு மாகாணத்தில் விரிவுபடுத்தப்பட்டது. இதன்படி நிறுவனத்துக்கு சொந்தமான மொத்த காணிகளின் அளவு 5992.74 ஆகும். இதில் பெரும்ாண்மையான நிலம் 54% புத்தளம், மாவட்டத்தில் அமைந்துள்ளது. மொத்த நிலப்பரப்பில்குருநாகல், கம்பஹா மற்றும் கிளிநொச்சி மாவட்டங்கள் முறையே 35%, 7%, மற்றும் 4% ஆகும். 9 பிரதான தோட்ட வலயங்களின் கீழ் 89 தோட்ட அலகுகளாக காணிகள் அமைந்துள்ளன.






## எமது தோட்டங்கள்

| | | | பிரதான பயிர்கள் (ஹெக்) | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| பிரதேச தோட்டங்கள் | தோட்டங் களின் எண்ணிக்கை | பரப்பளவு (ஹெக்டயார் கள்) | தென்னை | மரமுந்திரிகை | ஏனைய பயிர்கள் | பிரதேச சபைப் பிரிவு | நகரம் |
| பிங்கிரிய | 11 | 1,109.74 | 706.95 | 20.00 | 0.81 | பிங்கிரிய,கொபேகனே | வீரபொகுன |
| சிலாபம் | 12 | 645.57 | 485.36 | 49.96 | 9.26 | பல்லம, ஆரச்சிக்கட்டுவ, ரஸ்நாயக்கபுர | பல்லம |
| திவுலப்பிட்டிய | 14 | 414.37 | 403.74 | - | 46.47 | திவுலபிட்டிய, கட்டான, தன்கொட்டுவ | படல்கம |
| மாதம்பே | 12 | 655.86 | 603.65 | 6.07 | 5.24 | நாத்தாண்டிய, சிலாபம், பிங்கிரிய, உடுபத்தாவ, மாதம்பை | உடுபத்தாவ |
| மங்களஎலிய | 11 | 816.64 | 299.79 | 315.64 | - | புத்தளம், முந்தல், மஹ கும்புக்கடவள | முந்தல் |
| நிக்கவரெட்டிய | 14 | 399.92 | 332.87 | 18.20 | - | கொபேகனே, பண்டுவஸ்நுவர | கொபேகன |
| பளுகஸ்வெவ | 1 | 672.22 | 619.16 | - | 0.5 | ஆரச்சிக்கட்டுவ | ஆரச்சிக்கட்டுவ |
| தம்பபன்னி | 10 | 1,008.79 | 393.34 | 405.25 | - | புத்தளம், வனாதவில்லு, கல்பிட்டிய | புத்தளம் |
| பளை | 4 | 269.63 | 37.25 | - | - | கிளிநொச்சி | கிளிநொச்சி |
| **மொத்தம்** | **89** | **5,992.74** | **3,882.11** | **815.12** | **62.28** | | |

நிலப் பயன்பாட்டுத் திட்டம், அதிகபட்ச உற்பத்தித் திறனைப் பெறுவதற்கு மூலோபாய ரீதியாக திட்டமிடப்பட்டு, அதற்கேற்ப பயிர் பல்வகைப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மரமுந்திரிகை, டி மற்றும் ஜேசி மா, றம்புட்டான் டிராகன் புருட் போன்ற பழப் பயிர்களும், கறுவாப்பட்டை மற்றும் மிளகு போன்ற சிறிய ஏற்றுமதிப் பயிரும் பொருத்தமான இடங்களில் பயிரிடப்படுகின்றன. மேலும்,பெரும்பாலான தோட்டங்களில் கால்நடை வளர்ப்பும் மேற்கொள்ளப்படுகிறது.

### தென்னை உற்பத்தி தரவு







2000
1000
0
60
40
20
0
2018 2019 2020 2021 2022 2023
Crop Harvested Nuts in Divulapitiya Area Estaes (1,000 nits)
Nuts/Palm


3000
2000
1000
0
60
40
20
0
2018 2019 2020 2021 2022 2023
Crop Harvested Nuts in Madampe Area Estaes (1,000 nits)
Nuts/Palm


1500
1000
500
0
60
40
20
0
2018 2019 2020 2021 2022 2023
Crop Harvested Nuts in Nikaweratiya Area Estaes (1,000 nits)
Nuts/Palm


6000
4000
2000
0
100
50
0
2018 2019 2020 2021 2022 2023
Crop Harvested Nuts in Palugaswewa Area Estaes (1,000 nits)
Nuts/Palm


1000
500
0
100
50
0
2018 2019 2020 2021 2022 2023
Crop Harvested Nuts in Mangalaeliya Area Estaes (1,000 nits)
Nuts/Palm


1500
1000
500
0
100
50
0
2018 2019 2020 2021 2022 2023
Crop Harvested Nuts in Thambapanni Area Estaes (1,000 nits)
Nuts/Palm


40
20
-
15
10
5
-
2018 2019 2020 2021 2022 2023
Crop Harvested Nuts in Thambapanni Area Estaes (1,000 nits)
Nuts/Palm

**5 வருட பயிர் உற்பத்தி**

| ஆண்டு | பயிர் (காய்கள்) | விலகல் | காய்க்கும் மரங்கள் | காய்கள் / மரங்கள் | இலங்கையில் தென்னை உற்பத்தி (மில்லியன்கள்) | விலகல் |
|---|---|---|---|---|---|---|
| 2018 | 8,132,121 | -30% | 262,517 | 31 | 2,737 | +10% |
| 2019 | 14,993,952 | 84% | 259,808 | 58 | 3,106 | +12% |
| 2020 | 11,943,494 | -20% | 273,429 | 44 | 2,818 | -10% |
| 2021 | 14,715,763 | 23% | 275,267 | 53 | 3,383 | +17% |
| 2022 | 15,172,334 | 03% | 277,190 | 55 | 3,351 | -1% |
| 2023 | 11,697,511 | -23% | 271,411 | 43 | 2,944 | -14% |

**விவசாய வியாபர உபாயங்கள்**

சிலாபம் பெருந்தோட்ட நிறுவனத்தின் ,நிலையான அபிவிருத்தியை உறுதி செய்வதற்காக நிறுவனத்தின் விவசாய நிலை மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதுடன், தோட்டங்களின் தொடர்ச்சியான முன்னேற்றத்திற்கான செயற்பாடுகளுக்கு புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. சில விவசாய வளர்ச்சி உத்திகள் பின்வருமாறு.

1. கீழ் பயிரிடல்கள்,
2. பல்லாண்டுப் பயிர்களுடன் இடைப் பயிரிடல்கள்,
3. வருடாந்த பயிர்களுடன் இடை பயிரிடல்கள்,
4. நீர்ப்பாசன முறைமை அமுல்படுத்தல்கள்
   - சொட்டுநீர் நீர்ப்பாசன முறைமைகள்
   - குழாய் நீர்ப்பாசன முறைமைகள்
   - ஆழ் கிணறுகள் / குழாய் கிணறுகளைத் தாபித்தல்
   - குளங்களை புனர்நிர்மாணம் மற்றும் மீள் நிர்மாணம் செய்தல்.
5. நீடித்த உற்பத்திகளை மேம்படுத்தல்
6. புதிய உற்பத்திகளை இணைத்தல்.

**புதிய தென்னந் தோட்டங்கள்**

ஒரு கொள்கையாக,சிலாபம் பிளான்டேஷன்ஸ் லிமிடெட் புதிய தென்னந்தோப்புகளுடன் நிறுவப்படுவதற்கு மிகவும் பொருத்தமான பிரதேசங்களைக் கண்டறிந்த பின்னர் புதிய தென்னந்தோப்புகளை மேற்கொள்கிறது.

| பிரதேச தோட்டம் | ஆடிப்படை ஆண்டில் நடப்பட்ட தென்னம் நாற்றுக்களின் எண்ணிக்கை | ஆண்டிறுதியில் தென்னை உற்பத்தியின் அளவு (ஹெக்) | ஆண்டிறுதியில் தென்னை மரங்களின் எண்ணிக்கை | மொத்த விளைச்சலிற் தோட்டங்களின் சதவீதம் |
|---|---|---|---|---|
| பிங்கிரிய | 200 | 94.00 | 12,834 | 13 % |
| சிலாபம் | - | 17.68 | 2,614 | 4% |
| திவுலப்பிட்டிய | 640 | 21.50 | 3,741 | 5 % |
| மாதம்பே | 4550 | 60.00 | 9,162 | 10 % |
| மங்களஎலிய | 410 | 43.50 | 3,706 | 17 % |
| நிக்கவரெட்டிய | - | 27.02 | 2,918 | 8 % |
| பளுகஸ்வெவ | 1,500 | 55.00 | 6,767 | 9 % |
| தம்பபன்னி | 2,400 | 20.50 | 7,718 | 12 % |
| **மொத்தம்** | **9,700** | **375.70** | **49,640** | **10%** |

**2. நீண்ட கால மற்றும் குறுகிய கால பயிர்கள் பயிரிடல்**

மண்ணின் பொருத்தத்தை அடையாளம் கண்டு, குறைவாகப் பயன்படுத்தப்பட்ட நிலம் பயிரிடல் நடவடிக்கைளுக்காஹ பயன்படுத்தப்பட்டது. மேலும் பயிர்களை மேலும் பன்முகப்படுத்தக்கூடிய நிலத்தில், முக்கிய பயிரான தென்னையுடன் கூடுதலாக ஊடுபயிர்களும் பயிரிடப்பட்டன. அங்கு, அலகு உற்பத்தித்திறனை அதிகரிக்க அடையாளம் காணப்பட்ட பொருத்தமான நிலங்களை மறுவடிவமைப்பு செய்வதன் மூலம் குறுகிய கால பயிர் சாகுபடி செய்யப்பட்டது.

நிறுவனத்தால் தொடங்கப்பட்ட ஊடுபயிர் சாகுபடி திட்டங்களுக்கு மேலதிகமாக, தனியார் தொழில்முனைவோர் ஆண்டுதோறும் நிறுவனத்தின் பயன்படுத்தப்படாத நிலங்களில் ஊடுபயிர் சாகுபடியை மேற்கொள்ள ஒத்துழைத்துள்ளனர்.

பெருந்தோட்டத் துறையில் கள மட்டத்தில் மனித வளங்கள் இல்லாததாலும், பௌதீக வளங்களை நிர்வகிப்பதில் தற்போதுள்ள சிரமங்களாலும், சிலாபம் பெருந்தோட்ட நிறுவனத்திற்குச் சொந்தமான பயன்படுத்தப்படாத நிலங்களுக்கும், ஊடுபயிர் சாகுபடி செய்யக்கூடிய நிலங்களுக்கும் புத்துயிர் அளிக்க, வெளிப்புற தொழில்முனைவோருக்கு குறுகிய கால ஊடுபயிர் சாகுபடிக்கான வசதிகளை வழங்கும் செயல்முறை இன்னும் நடந்து வருகிறது. அதன்படி, 2023 ஆம் ஆண்டுக்கு, முன்னர் வழங்கப்பட்ட 1005 ஏக்கர் நிலத்திற்கு கூடுதலாக, ஊடுபயிர் சாகுபடிக்காக வருடாந்திர குத்தகை அடிப்படையில் 917 ஏக்கர் நிலம் தனியார் தொழில்முனைவோருக்கு வழங்கப்பட்டது.

தென்னை நிலங்களிலும், உள்நாட்டு.்.பயன்படுத்தப்படாத நிலங்களிலும் ஊடுபயிர்களை பயிரிட தனியார் தொழில்முனைவோருக்கு வாய்ப்பளிப்பதன் மூலம், நமக்கு எதிராக வளர்ந்து வரும் தொழிலாளர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக, தென்னை தோட்டங்களை நடுதல் மற்றும் பராமரித்தல் அந்த தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ளது.

| பிரதேசம் | மரமுந்திரிகை (ஹெக்) | மிளகு (ஹெக்) | ரம்புட்டாண் (ஹெக்) | ரகன் புருட் (ஹெக்) | கருவா (ஹெக்) | மா (ஹெக்) | மரக்கறி (ஹெக்) |
|---|---|---|---|---|---|---|---|
| தம்பபன்னி | 405.25 | - | - | - | - | - | 4 |
| மங்களஎலிய | 316.04 | - | - | - | - | - | - |
| பிங்கிரிய | 20.00 | - | - | - | 0.81 | - | - |
| நிக்கவரெட்டிய | 18.20 | - | - | - | - | - | - |
| சிலாபம் | 49.96 | - | - | - | 1.60 | 6.87 | - |
| மாதம்பே | 6.07 | - | - | 3.64 | - | 1.6 | - |
| திவுலப்பிட்டிய | - | 16.06 | 20.00 | - | 9.61 | - | - |
| பளுகஸ்வெவ | - | - | - | 0.5 | - | - | - |
| **மொத்தம்** | **815.52** | **16.06** | **20.00** | **4.14** | **12.02** | **8.47** | **4** |

### 3. தென்னை சாகுபடிக்கான நீர்ப்பாசன திட்டங்கள்

புத்தளம் மற்றும் குருநாகல் மாவட்டங்களில் அமைந்துள்ள பெரும்பாலான தோட்டப் பிரிவுகள் வருடாந்திர மழைப்பொழிவை 1750 மி.மீட்டருக்கும் குறைவாகப் பெறுகின்றன, மேலும் சில ஆண்டுகளில் 1000 மி.மீட்டருக்கும் குறைவாக ஆண்டு மழைப்பொழிவைப் பெறும் தோட்டங்களும் புத்தளம் மாவட்டத்தில் அமைந்துள்ளன. தொடர்ச்சியான வளர்ச்சி மற்றும் பழ உற்பத்திக்கு நீர் ஒரு கட்டுப்படுத்தும் காரணியாக செயல்படுவதால், தோட்டங்களில் தேங்காய் உற்பத்தியை சீராகப் பராமரிக்கவும், உற்பத்தித் திறனை படிப்படியாக அதிகரிக்கவும் புதிய தொழில்நுட்பத்தின் படி தேங்காய் சாகுபடிக்கான நீர் வழங்கல் உத்திகளை சிலாபம் பிளாண்டேஷன்ஸ் லிமிடெட் தொடங்கியது.

2022 ஆம் ஆண்டில், பலுகஸ்வேவ எஸ்டேட்டில் உள்ள ரெஜினா மற்றும் ஜசிந்தா ஆகிய வயல் எண் 4 இல் முறையே 25 ஏக்கர் பரப்பளவில் 03 சொட்டு நீர்ப்பாசன அமைப்புகள் நிறுவப்பட்டன, மங்களஎலியா எஸ்டேட் மற்றும் தம்பபன்னி எஸ்டேட் ஆகியவை ஒவ்வொன்றிலும் 25 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டன. அடிப்படை ஆண்டில், மாதம்பே எஸ்டேட்ஸ் பிராந்தியத்தின் கல்வாகரா எஸ்டேட்ஸ் பிரிவில் சூரிய சக்தியைப் பயன்படுத்தி 25 ஏக்கர் சொட்டு நீர்ப்பாசன திட்டம் தொடங்கப்பட்டது, இது மேலும் விரிவடைந்தது.



### 4. உற்பத்திகளுக்கு பெறுமதி சேர்த்தல்

நுகர்வோருக்கு தரமான தயாரிப்புகளை வழங்குவதை இலக்காக கொண்டு, சிலாபம் பெருந்தோட்ட நிறுவனம் தனது உற்பத்திகளின் பெறுமதியை அதிகரிப்பதற்கும் அதன் பெறுமதியை அதிகரிப்பதற்குமான செயல்முறைகளில் ஈடுபட்டுள்ளது.

தேங்காய் எண்ணெய் உற்பத்தி,

- தென்னம் பாணி உற்பத்தி,
- தயிர் உற்பத்தி,
- எருமை பால் தயிர் உற்பத்தி,
- பசும்பால் தயிர் உற்பத்தி,
- பதப்படுத்தப்பட்ட கரிம முந்திரி உற்பத்தி,
- விதை தேங்காய் உற்பத்தி



பலுகஸ்வெவ தோட்டத்தால் முக்கிய பெறுமதி சேர்க்கப்பட்ட பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன. தேங்காய் எண்ணெய், முந்திரி பதப்படுத்துதல், எருமை பால் மற்றும் தயிர் உற்பத்தி ஆகியவை பலுகஸ்வெவ தோட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்றன. தேங்காய் எண்ணெய் உற்பத்தியில் மிக உயர்ந்த தரமான வெள்ளை கொப்பரை மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. பலுகஸ்வெவ தோட்டத்தில் உள்ள எருமை திட்டத்திலிருந்து பெறப்பட்ட பாலைப் பயன்படுத்தி எருமைப்பால் மற்றும் தயிர் தயாரிக்கப்படுகின்றன, அதே நேரத்தில் உள்;ர் விவசாயிகள் மற்றும் தோட்டத் தொழிலாளர்களால் நிர்வகிக்கப்படும் பசுக்களிடமிருந்து புதிய பால் பெறப்படுகிறது. இந்த பொருட்கள் செயற்கை இனிப்புகளைப் பயன்படுத்தாமல் மிகவும் ஆரோக்கியமான முறையில் தயாரிக்கப்படுகின்றன.

தேங்காய் பானம் உற்பத்தியில், தண்ணீர் அல்லது சர்க்கரை பயன்படுத்தாமல், இனிப்பு தேனை மட்டுமே பயன்படுத்தி பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன. பிங்கிரியா, மாதம்பே மற்றும் சிலாபம் தோட்டங்களில் தரமான தேங்காய் பானம் தயாரிக்கப்படுகிறது.

**சேதன சான்றுப்படுத்தப்பட்ட மரமுந்திரிகை**

**We Have Won Organic Certification for Cashews**







மரமுந்திரி பயிரிடல் திட்டம் 2002 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது, மேலும் நிறுவனம் தற்போது சுமார் 800 ஹெக்டேர் பரப்பளவில் முந்திரி தோட்டத்தைக் கொண்டுள்ளது. சிலாபம் பெருந்தோட்ட நிறுவனம் , 2020 ஆம் ஆண்டில் மரமுந்திரி பயிரிடல் மூலம் சாதனை அறுவடையை அடைந்து இலங்கையில் மர முந்திரி உற்பத்தியில் முன்னணியில் இருந்தது.

பின்னர், முந்திரி உற்பத்தி மற்றும் முந்திரி வருமானத்தில் ஆண்டுதோறும் ஏற்பட்ட சரிவு காரணமாக, சிலாபம் பெருந்தோட்ட நிறுவனம் முந்திரி அறுவடை செய்யும் முறையை மாற்றியது. முந்திரி பழங்களை பராமரிக்கும் பணி முந்திரி அறுவடைக்கு மாற்றப்பட்டது. முந்திரி பருவத்திற்கான முந்திரி மரங்களை குத்தகைக்கு எடுக்கும் செயல்முறை அடிப்படை ஆண்டில் செயல்படுத்தப்பட்டது. அங்கு, முந்திரி மரங்கள் நிறுவனத்தால் முன்னரே தீர்மானிக்கப்பட்ட குறைந்தபட்ச விலையில் குத்தகைக்கு விடப்பட்டன. இந்த குத்தகை செயல்பாட்டில் பொருத்தமான வாங்குபவர்கள் செய்தித்தாள் விளம்பரம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இது மிகவும் வெற்றிகரமான முறையாக செயல்பட்டது.

வரை. சிலாபம் பெருந்தோட்ட நிறுவனம் நீண்ட காலமாக பயிரிடப்பட்ட 800 ஹெக்டேர் முந்திரி தோட்டம் 30 தோட்ட அலகுகளில் ஒரு கரிம சாகுபடியாக பராமரிக்கப்படுகிறது. இதில், 2021 ஆம் ஆண்டில், 06 முந்திரி தோட்டங்களின் மிகப்பெரிய தோட்ட அலகுகள் "கரிம" பிராண்டைப் பெற்றன. பின்னர், ஆண்டுதோறும் அந்தத் தோட்டங்களின் தரத்தைக் கட்டுப்படுத்துவதன் மூலம், அவர்கள் ஒவ்வொரு ஆண்டும் "சேதன" சான்றிதழைப் பெற முடிந்தது.



**கால்நடை முகாமை**

- எருமை மாடு தொடர்பான முகாமை.
- செம்மறியாடு தொடர்பான முகாமை.
- ஆடு தொடர்பான முகாமை.

சிலாபம் பெருந்தோட்டங்களின் நிலப் பாவனை மற்றும் உற்பத்தித்திறனை அதிகப்படுத்துவதற்கு ஆரம்பத்திலிருந்தே கால்நடை வளர்ப்பை மேற்கொண்டன. ஆடு முகாமைத் திட்டம் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கப்பட்டது, இந்த திட்டங்களின் மூலம் மேலதிக வருமானம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அத்தோடு களை முகாமை மற்றும் காபன்: நைதரசன் விகிதத்தைப் பராமரிக்க சேதன உரம் வழங்குதல் எதிர்பார்க்கப்படுகின்றது

சிலாபம் பெருந்தோட்ட நிறுவனம், அதன் தொடக்கத்திலிருந்தே தென்னை தோட்டங்களுக்குள் நிலத்தை அதிகபட்சமாகப் பயன்படுத்தி, பயிர்செய்கைகள் பாதிக்கப்படாமல் பார்த்துக் கொள்ளும் வகையில் கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டுள்ளது.




அதன்படி, மேற்கண்ட கால்நடை வளர்ப்புத் திட்டங்கள் மூலம் ஆண்டுதோறும் கூடுதல் வருமானம் பெறப்படும், அத்துடன் களை கட்டுப்பாடு மற்றும் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான கரிம உரங்களின் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு பங்களிப்பு செய்யப்படும். மேலும், இது மண்ணின் C:N விகிதத்தை உகந்த மட்டத்தில் பராமரிக்க உதவுகிறது.







**தயாரிப்பு சந்தைப்படுத்தல்**

தென்னை பயிர்செய்கைகளில் கவனம் செலுத்தும் ஒரு தோட்ட நிறுவனமாக, சிலாபம் பெருந்தோட்ட நிறுவனம், பயிர்கள் மற்றும் உற்பத்தி இரண்டையும் பல்வகைப்படுத்துவதன் மூலம் தேங்காய் சாகுபடி தொடர்பானவை உட்பட பல்வேறு தயாரிப்புகளை சந்தைக்கு வழங்குகிறது.

- **தென்னை பயிர்செய்கை தொடர்பான உற்பத்திகள்**

  தென்னை, கொப்பரா, தென்னம் பாணி, தேங்காய் எண்ணெய், தேங்காய் நாற்று மற்றும் ஏனைய தேங்காய் தொடர்பான உற்பத்திகள்

- **மர முந்திரிகை பயிர்செய்கை தொடர்பான உற்பத்திகள்**

  பதனிடப்பட்ட மரமுந்திரி, தோல் நீக்கப்படாத மரமுந்திரி, ஏனைய மர முந்திரியுடன் தொடர்பான உற்பத்திகள்

- **பால் உற்பத்திகள்**

  கொழுப்பு நீக்கிய பால், யோகட், நெய், மற்றும் ஏனைய உற்பத்திகள்

- **ஏனைய பயிர்செய்கைகள் தொடர்பான உற்பத்திகள்**

  ஏனைய ,இடை பயிர்செய்கை - மதிப்புமிக்க மரம், இலவங்கப்பட்டை, மிளகு, ரம்புட்டான், டிராகன் பழம் ஆகியவை அடங்கும்.

- **பிற தயாரிப்புகள் மற்றும் சேவைகள்**

நிறுவனத்தின் முக்கிய பயிரான தேங்காய் மற்றும் அதனுடன் தொடர்புடைய கொப்பரா ஆகியவை ஆண்டு முழுவதும் விற்பனைக்கு வழங்கப்படுவதால், இது முக்கியமாக “பொல் போலா” டெண்டர் நடைமுறை மூலம் விற்கப்படுகிறது.

அதன்படி, வாரத்தின் திங்கள் முதல் வியாழன் வரை, ஒரு நாளைக்கு 02 எஸ்டேட் மண்டலங்களில் தேங்காய்கள் விற்கப்படுகின்றன, மேலும் வெள்ளிக்கிழமைகளில், பிரதான அலுவலகமான “பொல் போலா” டெண்டர் நடைமுறையால் இது செய்யப்பட்டுள்ளது, இதன் மூலம் எந்தவொரு தேவைக்கும் ஏற்ப வாங்குபவர்களுக்கு போதுமான பொருத்தமான தேங்காய்களை வழங்குவதற்கான விற்பனை வழிமுறை உள்ளது.

தோலுடன் மரமுந்திரி, பெறுமதிமிக்க மரம், தேங்காய் ஓடுகள் மற்றும் பிற பொருட்கள் முக்கியமாக டெண்டர் நடைமுறையைப் பின்பற்றி விற்கப்படுகின்றன, மேலும் விற்கப்படும் பொருட்களின் மதிப்பின் படி டெண்டர் நடைமுறை தீர்மானிக்கப்படுகிறது.

சிலாபம் பெருந்தோட்ட நிறுவனம், தீவின் பல பகுதிகளை உள்ளடக்கிய தேர்ந்தெடுக்கப்பட்ட விற்பனை முகவர்கள் மூலமாகவும், சிலாபம், ராஜகடலுவ மற்றும் கொழும்பில் அமைந்துள்ள எங்கள் நிறுவனத்தின் விற்பனை நிலையங்கள் மூலமாகவும், முக்கியமாக எங்கள் மதிப்பு கூட்டப்பட்ட தயாரிப்புகளை நுகர்வோருக்கு விற்பனை செய்கிறது. இந்த விற்பனை வழிகள் மூலம், எங்கள் தயாரிப்புகள் தீவின் பல பகுதிகளிலும் பிரபலப்படுத்தப்பட்டு ஊக்குவிக்கப்படுகின்றன.

பல அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்களின் நலச் சங்கங்களை ஒருங்கிணைப்பதன் மூலம், எங்கள் மதிப்பு கூட்டப்பட்ட தயாரிப்புகளின் சந்தைப்படுத்தல் செயல்முறைகளை சந்தைப்படுத்தல் துறை செயல்படுத்துகிறது. இந்த செயல்முறைகள் மூலம், எங்கள் தயாரிப்பு நுகர்வோர் நேரடியாக வாங்கும் திறனைப் பெறுகிறார்கள்.

பல அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்களின் நலச் சங்கங்களை ஒருங்கிணைப்பதன் மூலம், எங்கள் மதிப்பு

கூட்டப்பட்ட தயாரிப்புகளின் சந்தைப்படுத்தல் செயல்முறைகளை சந்தைப்படுத்தல் துறை செயல்படுத்துகிறது. இந்த செயல்முறைகள் மூலம், எங்கள் தயாரிப்பு நுகர்வோர் நேரடியாக வாங்கும் திறனைப் பெறுகிறார்கள்.

சிலாவ் பிளாண்டேஷன்ஸ் லிமிடெட், நாடு முழுவதும் பொது மற்றும் தனியார் நிறுவனங்களால் ஏற்பாடு செய்யப்படும் வர்த்தக கண்காட்சிகள், மாநாடுகள் மற்றும் பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்கிறது. சிலாவ் பிளாண்டேஷன் தயாரிப்புகளை விளம்பரப்படுத்தவும் சந்தைப்படுத்தவும் முக்கிய வர்த்தக அரங்குகளை வழங்குவதன் மூலம் விற்பனைத் துறை நிறுவனத்தை பிரதிநிதித்துவப்படுத்துகிறது. கூடுதலாக, அவர்கள் தயாரிப்புகள் மற்றும் உற்பத்தி செயல்முறைகள் பற்றிய தகவல்களை சாத்தியமான வாடிக்கையாளர்கள் மற்றும் பொதுமக்களுக்கு, குறிப்பாக குழந்தைகளுக்கு வழங்குகிறார்கள்

இந்த சந்தைப்படுத்தல் நடவடிக்கைகள் மூலம், சிலாவ் பிளாண்டேஷன்ஸ் லிமிடெட் அதன் அனைத்து தயாரிப்புகளுக்கும் அதிக சந்தை மதிப்பை அடைவதை நோக்கமாகக் கொண்டுள்ளது, அதே நேரத்தில் ஒரு போட்டி சந்தையில் எங்கள் நிலையைத் தக்க வைத்துக் கொள்ள முயற்சிக்கிறது.

**சுற்றுச்சூழல் காரணிகளின் விளைவுகள்**
**வருடாந்திர மழைப்பொழிவு முறை**

சிலாவத் தோட்ட நிறுவனம் வறண்ட காலநிலை மண்டலத்திற்குள் கணிசமான அளவு நிலத்தை சொந்தமாகக் கொண்டுள்ளது. வறண்ட மண்டலத்தில் தென்மேற்கு பருவமழையிலிருந்து பெறப்படும் மழைப்பொழிவு சீரான பயிர் வளர்ச்சியைத் தக்கவைக்க போதுமானதாக இல்லை, அதே நேரத்தில் வடகிழக்கு பருவமழை மழைக்காலங்களில் சில பயனுள்ள மழைப்பொழிவை வழங்குகிறது. பருவமழைக்கு இடைப்பட்ட காலங்களில் பெய்யும் மழைப்பொழிவு மாறுபடும். சில நேரங்களில், ஆண்டு முழுவதும் வறண்ட காலநிலை நீடிக்கும் போது, அடுத்தடுத்த பருவமழை தீவிரமாகவும் சராசரியை விட அதிகமாகவும் இருக்கலாம். இருப்பினும், ஆண்டு முழுவதும் தென்னை மரத்தின் தொடர்ச்சியான வளர்ச்சி முறை காரணமாக, குறுகிய காலத்தில் மழைப்பொழிவின் மாறுபாடு மண்ணின் ஈரப்பதத்தின் நிலையான அளவைப் பராமரிப்பதை விட குறைவான முக்கியத்துவம் வாய்ந்தது. குறிப்பாக, புத்தளம் மாவட்டம் மற்றும் சுற்றியுள்ள தோட்டங்களில், வருடாந்திர மழைப்பொழிவு குறைவாக இருப்பதால் பயிர்களுக்கு நீர் பற்றாக்குறை நீண்ட காலத்திற்கு ஏற்படுகிறது. இதன் விளைவாக, இது மரங்களின் உற்பத்தியையும் கட்டுப்படுத்துகிறது.

**அதிக விளைச்சல் தரும் விதை தேங்காய் உற்பத்தி**

2012 ஆம் ஆண்டு பலுகஸ்வேவ தோட்டத்தில் தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தின் (CRI) தொழில்நுட்ப ஆதரவுடன் அதிக விளைச்சல் தரும் விதை தேங்காய் உற்பத்தி தொடங்கியது, கர மகரந்தச் சேர்க்கை மூலம் ஊசுஐஞடு 98 மேம்படுத்தப்பட்ட தேங்காய் வகையை உருவாக்குவதில் கவனம் செலுத்தியது. இந்த விதை தேங்காய் உற்பத்தி அடிப்படை ஆண்டிலும் தொடர்ந்தது.

2013 உள்ள கினியாமா எஸ்டேட்டில் 58 ஹெக்டேர் பரப்பளவில் ஒரு விதை தேங்காய் நாற்றங்கால் நிறுவப்பட்டது. “கப்ருவான“ வகை “கோலா குந்திரா“ மற்றும் “சென்ராமன்“ தென்னை வகைகளைக் கலப்பதன் மூலம் உருவாக்கப்பட்டது. அடிப்படை ஆண்டில், கர மகரந்தச் சேர்க்கை நடவடிக்கைகளுக்காக சுமார் 300 “கொல குந்திரா“ மரங்களைத் தேர்ந்தெடுப்பதன் மூலம் “கப்ருவான“ விதை தேங்காய்களின் உற்பத்தி தொடங்கியது. அடிப்படை ஆண்டின் பிற்பகுதியில் விதை தேங்காய் அறுவடை செயல்முறை தொடங்கியது. 2024 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் தேங்காய் நாற்றுகள் வெளியீடு தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.ஆம் ஆண்டில், தேங்காய் ஆராய்ச்சி நிறுவனத்துடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம், “கப்ருவான“ தென்னை வகையை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டு, பிங்கிரியா பகுதி தோட்டத்திற்குள்

**சுற்றுச்சூழல் வெப்பநிலை**

தென்னை பூக்களில் உற்பத்தியாகும் மகரந்தத்தின் நம்பகத்தன்மையைப் பராமரிப்பதில் சுற்றுச்சூழல் வெப்பநிலை ஒரு முக்கிய காரணியாகும். தென்னை தாவர செயல்பாட்டிற்கான உகந்த வெப்பநிலை சுமார் 29°ஊ ஆகும். சுற்றுச்சூழல் வெப்பநிலை அதிகரிக்கும் போது, மகரந்தத்தின் நம்பகத்தன்மை குறைகிறது. சாத்தியமான அல்லது பகுதியளவு செயல்படும் மகரந்தத்தில் ஏற்படும் இந்த குறைவு மகரந்தச் சேர்க்கை செயல்முறையை எதிர்மறையாக பாதிக்கிறது, இதன் விளைவாக, மகசூல் அதிகரிக்கிறது.

கடுமையான வறண்ட காலநிலையின் போது, நீராவி மூலம் நீர் இழப்பு தென்னை மரங்களின் ஆரோக்கியத்தில் சரிவுக்கு வழிவகுக்கும். புத்தளம் மாவட்டம் மற்றும் அருகிலுள்ள தோட்டங்களில், இத்தகைய கடுமையான வறண்ட நிலைமைகள் தேங்காய்கள் உதிர்தல் மற்றும் தேங்காய் கொத்துகள் உடைதல் உள்ளிட்ட குறிப்பிடத்தக்க பிரச்சினைகளை ஏற்படுத்தும், இது பயிர் விளைச்சலை மோசமாக பாதிக்கும்.

**பெருந்தோட்ட வலயங்களின் ஆண்டு மழை வீழ்ச்சி**




| | 2018 | 2019 | 2020 | 2021 | 2022 | 2023 |
|---|---|---|---|---|---|---|
| Bingiriya | 1,393.34 | 920.00 | 1,226.74 | 1,980.12 | 1,068.42 | 1,661.86 |
| Chilaw | 1,724.50 | 1,633.93 | 1,357.39 | 1,963.45 | 646.59 | 2,044.68 |
| Divulapitiya | 2,470.67 | 1,597.50 | 1,921.33 | 2,708.33 | 1,576.33 | 2,769.67 |
| Madampe | 2,011.67 | 1,934.67 | 1,436.33 | 1,991.33 | 1,697.00 | 1,685.00 |
| Mangalaeliya | 650.20 | 1,404.83 | 872.60 | 1,918.40 | 1,125.60 | 1,573.33 |
| Nikaweratiya | 1,690.00 | 1,423.00 | 1,273.00 | 2,306.00 | 1,278.00 | 1,825.00 |
| Palugaswewa | 1,786.50 | 1,569.20 | 1,371.00 | 2,108.10 | 1,278.92 | 2,256.60 |
| Thambapanni | 1,517.79 | 1,785.14 | 903.82 | 2,268.56 | 1,420.56 | 2,111.40 |

**மண்**

புத்தளம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களுக்குள் உள்ள பல நிலங்கள் கடற்கரை எல்லைக்கு அருகில் அமைந்துள்ளன. இதன் விளைவாக, இந்தப் பகுதிகளில் உள்ள மண்ணில் மற்ற மாவட்டங்களுடன் ஒப்பிடும்போது அதிக சதவீத மணல் உள்ளது. இந்த மணல் மண் விரைவாக காய்ந்துவிடும். இருப்பினும், இந்த வகை மணல் மண் தென்னை சாகுபடிக்கு மிகவும் பொருத்தமானது. மாறாக, குருநாகல் மற்றும் கம்பஹா மாவட்டங்களில் உள்ள மண் மணல் கலந்த களிமண் முதல் சிவப்பு-மஞ்சள் பாட்ஸோலிக் மண் வகைகள் வரை உள்ளன.
















**சமூகப் பொறுப்புக்கள்**

பொருளாதார முன்னேற்றத்திற்காக மாறில வளங்களை வெற்றிகரமாகப் பயன்படுத்துவது சிலாபம் பிளாண்டேஷன்ஸ் லிமிடெட்டின் குறிப்பிடத்தக்க சாதனையாகும். நாட்டில் பல்வேறு பொருளாதார சவால்கள் இருந்தபோதிலும், சிலாபம் பிளாண்டேஷன்ஸ் லிமிடெட் அதன் வளங்களை திறம்பட பயன்படுத்துவதும் நிர்வகிப்பதும் அதன் முன்னேற்றத்திற்கு முக்கிய காரணிகளாக இருந்து வருகிறது. நிறுவனத்தால் பெறப்பட்ட பொருளாதார நன்மைகள் அனைத்து ஊழியர்களிடையேயும் தாராளமாக விநியோகிக்கப்படுகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது, இது ஒரு குறிப்பிடத்தக்க சாதனையாகும்.

சிலாபம் பிளாண்டேஷன்ஸ் லிமிடெட் அதன் வருடாந்திர உடல் மற்றும் நிதி வளர்ச்சியிலிருந்து பெறப்பட்ட நன்மைகளில் பெருமை கொள்கிறது, அவை நாட்டில் உள்ள நுகர்வோருக்கு வழங்கப்படுகின்றன. எங்கள் தரமான தயாரிப்புகள் மூலம், அவர்களின் வாழ்க்கைச் செலவுக்கு நாங்கள் சிறிது நிவாரணம் வழங்குகிறோம், இது எங்களுக்கு ஒரு அதிர்ஷ்டமான விளைவாகும்.

**நிலையான வேளாண்மை**

சிலாத் தோட்ட நிறுவனம், தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் வெளிப்புற விவசாயிகள் தோட்டத்திற்கு தீங்கு விளைவிக்காமல் கால்நடை மேலாண்மை நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான வாய்ப்புகளை வழங்கியுள்ளது. இந்த நடவடிக்கைகளிலிருந்து நிறுவனம் நேரடி நிதி நன்மைகளைப் பெறவில்லை என்றாலும், கால்நடைகளின் நிலம் இயற்கையாகவே மிதிக்கப்படுவது மற்றும் உரம் மற்றும் சிறுநீர் குவிவது போன்ற தற்செயலான விளைவுகள், மண்ணின் ஊட்டச்சத்து மற்றும் கரிம அளவை மேம்படுத்த பங்களித்துள்ளன. இது மறைமுகமாக இருந்தாலும், ஒரு நன்மை பயக்கும் விளைவாகக் கருதப்படலாம்.

மேலதிகமாக, தென்னை சாகுபடிக்கு கரிம உரங்களைப் பயன்படுத்துதல், ரசாயன களைக்கொல்லிகளைக் குறைவாகப் பயன்படுத்துதல், நைட்ரஜன் நிலைப்படுத்தும் உறைப் பயிர்களைப் பராமரித்தல், தென்னை ஓலைகளை தழைக்கூளமாகப் பயன்படுத்துதல் மற்றும் பியூரேயா போன்ற உறைப் பயிர்களின் வளர்ச்சி ஆகியவை மண்ணின் தரம் மற்றும் வளத்தை மேம்படுத்துவதற்கு பங்களித்துள்ளன

உயிரியல் அமைப்பு பாதுகாப்பு மற்றும் “காடு வளர்ப்பு“ மேலாண்மை

சிலாபம் பெருந்தோட்ட நிறுவனம், இயற்கையாக நிகழும் இரண்டு இடங்களை சாகுபடிக்கு பயன்படுத்தப்படாத பாதுகாப்பு பகுதிகளாக பராமரிக்கிறது. இந்த பகுதிகள் அதிக பல்லுயிர் பெருக்கத்தையும் ஆதரிக்கின்றன.



வனப் பாதுகாப்புத் துறையால் அங்கீகரிக்கப்பட்ட ஐந்தாண்டு “வன மேலாண்மை“ திட்டத்தின்படி, தேர்ந்தெடுக்கப்பட்ட தோட்டப் பிரிவுகளில் ஆண்டுதோறும் அறி மரங்கள் அகற்றப்படுகின்றன. மரங்களை அகற்றுவதற்கான அங்கீகரிக்கப்பட்ட சுற்றளவு 90 செ.மீ. என்றாலும், நடைமுறையில், 120 செ.மீ.க்கு மேல் சுற்றளவு கொண்ட அறி மரங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட முறையில் அகற்றப்படுகின்றன. 2019 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் இருந்து அங்கீகரிக்கப்பட்ட “வன மேலாண்மை” திட்டம் 2020 ஆம் ஆண்டு தொடங்கி செயல்படுத்தப்பட்டது. இந்தக் காலகட்டத்தில், மரங்களையும் பாதுகாக்கப்பட்ட மரங்களையும் அகற்றுவது திட்டமிட்டபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது, மேலும் வயல்களில் ஐந்து மடங்கு மரங்களை மீண்டும் நடுதல் பராமரிக்கப்பட்டுள்ளது.

**பணியாளர் நன்மைகள்**

மனித, பௌதீக மற்றும் உயிரியல் வளங்களை திறம்பட நிர்வகிப்பது நிறுவனத்தின் வளர்ச்சிக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியுள்ளது. ஊழியர்களின் அர்ப்பணிப்பு மற்றும் தொழில்முறை வளர்ச்சி மிகவும் பயனுள்ளதாக உள்ளது. நிறுவனம் தொடர்ந்து செயல்திறன் அடிப்படையிலான போனஸ், தேங்காய் அறுவடையின் போது கூடுதல் கொடுப்பனவுகள் மற்றும் தேங்காய் விற்பனையின் அடிப்படையில் தோட்ட அதிகாரிகள் மற்றும் தொழிலாளர்களுக்கு 2% மாதாந்திர ஊக்கத்தொகையை வழங்குகிறது. கூடுதலாக, ஆண்டு இறுதியில் அனைத்து நிரந்தர ஊழியர்களுக்கும் லாபப் பகிர்வு வழங்கப்படுகிறது.

ஆண்டுதோறும், நிறுவனம் மானிய விலையில் தேங்காய்களை வெளியிடுகிறது, தோட்டத் தொழிலாளர்கள் உட்பட அனைத்து ஊழியர்களுக்கும் காப்பீட்டை வழங்குகிறது, காப்பீட்டு கோரிக்கைகளை ஈடுகட்டுகிறது மற்றும் குறைந்த வட்டி விகிதத்தில் இடர்கால கடன்களை வழங்குகிறது. தோட்டத் தொழிலாளர்களுக்கான வருடாந்திர பொழுதுபோக்கு பயணங்களுக்கான ஆதரவும் பிற நலன்புரி நடவடிக்கைகளுடன் வழங்கப்படுகிறது. இந்த முயற்சிகள் ஊழியர்களின் உந்துதலை மேம்படுத்துவதில் முக்கிய காரணிகளாகும், மேலும் நிறுவனத்தின் உற்பத்தித்திறன் மற்றும் ஊழியர் விசுவாசத்திற்கு கணிசமாக பங்களிக்கின்றன.

**சமூகத்தில் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல்**

சிலாபம் பெருந்தோட்ட நிறுவனம் அதன் வணிக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதே வேளையில் சுற்றியுள்ள சமூகத்துடன் இணக்கமான உறவுகளைத் தொடர்ந்து உருவாக்குகிறது. ஆண்டுதோறும், உள்;ர் கோயில்கள் மற்றும் மதத் தலங்களால் கோரப்படும் ஏராளமான வசதிகளை நாங்கள் வழங்குகிறோம். வீடுகளுக்கு தென்னை மரங்களை வழங்குவதன் மூலமும், மத ஊர்வலங்கள் மற்றும் திருவிழாக்களுக்கு கொப்பரை வழங்குவதன் மூலமும், ஏழை மற்றும் பாதிக்கப்படக்கூடிய குடும்பங்களுக்கு நாங்கள் ஆதரவளிக்கிறோம், இதன் மூலம் சமூக நலனுக்கு தீவிரமாக பங்களிக்கிறோம்.

ஒரு தோட்ட நிறுவனமாக, சுற்றுச்சூழல், சமூக மற்றும் பொருளாதார சமநிலை மூலம் நிலையான வளர்ச்சியை அடைவதே எங்கள் ஒருங்கிணைந்த இலக்காகும். பொருளாதார ரீதியாக சாத்தியமான விவசாய நடைமுறைகளில் சிறந்து விளங்குவதன் மூலமும், எங்கள் ஊழியர்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதன் மூலமும் நாட்டின் வளர்ச்சிக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பாளராக இருப்பதை நாங்கள் நோக்கமாகக் கொண்டுள்ளோம். ஒரு முன்னணி விவசாய நிறுவனமாக முன்னேறுவதும், நாங்கள் சேவை செய்யும் சமூகங்களை தொடர்ந்து ஆதரிப்பதும் மேம்படுத்துவதும் எங்கள் உறுதிப்பாடாகும்.

# நிதி மீளாய்வு

இந்த ஆண்டு அறிக்கையின் ஒரு பகுதியாக இருக்கும் நிறுவனத்தின் நிதி அறிக்கை, நிறுவனத்தின் நிதி செயல்திறன் மற்றும் நிதி நிலை ஆகியவற்றை வெளிப்படுத்துகின்றது. நிதி மீளாய்வு நிறுவனத்தின் நிதிச் செயல்பாட்டின் செயலாற்றுகை பற்றி விவாதிக்கிறது.

சிலாபம் பெருந்தோட்டக் நிறுவனம் யின் அறிக்கையிடல் நிதியாண்டு, வெளிச் சூழலின் பல பாதகமான தாக்கங்கள் காரணமாக மற்றொரு சவாலான ஆண்டாக அமைந்தது. நிதியாண்டில் அறிவிக்கப்பட்ட அதிக உற்பத்திச் செலவு மற்றும் சாதகமற்ற நிலைமை ஆகியவை நிறுவனத்தின் விவசாய நடவடிக்கைகளில் தாக்கத்தை ஏற்படுத்தியது. இத்தகைய பாதகமான தாக்கங்கள் இருந்தபோதிலும், 2023 ஆம் நிதியாண்டில் நிறுவனம் ஒரு நல்ல நிதி நிலையை அடைய முடிந்தது.

**ஒரே பார்வையில் நிறுவனம் யின் நிதிச் செயலாற்றுகை** — **ரூபா. மில்**

| | | 2023 | 2022 | வேறுபாடு மில் | % | முக்கிய அம்சங்கள் |
|---|---|---|---|---|---|---|
| தேங்காய்கள் மில்லின் | | 11.7 | 15.1 | (3.4) | (23%) | முந்தைய ஆண்டில் வறண்ட மற்றும் அசாதாரண காலிநிலை நிலவியது |
| நி.வி.ச. (நிகர விற்பனைச் சராசரி) ரூ. | | 64.20 | 57.61 | 6.59 | 11% | |
| உற்பத்திக் கிரயம் (ஒரு காயிற்கானது) ரூ. | | 45.67 | 29.22 | 16.45 | 56% | தேங்காய் உற்பத்தி குறைவு மற்றும் உற்பத்தி செலவு அதிகரிப்பு காரணமாக |
| வருமானம் | ரூ. மி. | 900 | 975 | (75) | (8%) | தேங்காய் உற்பத்தி குறைவதே இதற்கு முக்கிய காரணம் |
| விற்பனைக் கிரயம் | ரூ. மி. | 672 | 521 | 151 | 29% | உற்பத்திச் செலவில் அதிகரிப்பு மற்றும் அதிக ஆரம்ப இருப்புக்கள் மற்றும் குறைந்த இறுதி இருப்பு உற்பத்திச் செலவுக்கு ஏற்ப சரிசெய்தல் |
| பிற வருமானம் | ரூ. மி. | 94 | 181 | (87) | (48%) | ஏனைய வருமானத்தின் குறைவு குறிப்பு இல 21 ஐ பார்க்கவும் |
| நிருவாக மற்றும் பொது செலவீனங்கள் | | 205 | 229 | (24) | (10%) | செயல்திறன் ஊக்கத்தொகை செலுத்துவதற்கான ஏற்பாடுகளில் குறைவு. |
| நிதி வருமானம் | ரூ. மி. | 237 | 136 | 101 | 74% | நிலையான வைப்பு இருப்பு மற்றும் வட்டி விகிதம் அதிகரிப்பின் காரணமாக |
| நிதிச் செலவீனம் | ரூ. மி. | 62 | 44 | 18 | 41% | அரசாங்க குத்தகை வாடகை 48 % ஆண்டு மொத்த உள்நாட்டு உற்பத்தி பணமதிப்பிழப்பு அடிப்படையில் அதிகரித்துள்ளது. |

**வருமானம்**

முந்தைய ஆண்டின் 975.1 மில்லியனுடன் ஒப்பிடுகையில் மதிப்பாய்வுக்கு உட்பட்ட ஆண்டில் நிறுவனம் ரூ. 899.6 மில்லியனைப் பதிவு செய்துள்ளது, இது முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூ. 75.5 மில்லியன் குறைந்துள்ளது. பயிர்கள் வீழ்ச்சியால் தென்னையின் வருமானம் குறைந்ததே இந்த குறைவுக்கு முக்கிய காரணமாகும்.

2023 இல் அறுவடை செய்யப்பட்ட மொத்த தேங்காய்கள் 11,728,576 ஆகும், 2022 இல் பதிவு செய்யப்பட்ட 15,172,334 தேங்காய்களுடன் ஒப்பிடும்போது, இது 23% வீழ்ச்சியைக் காட்டுகிறது. கடந்த காலத்தில் நிலவிய வறண்ட மற்றும் அசாதாரண காலநிலையே இந்த வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாகும்.

தெங்கு ஆராய்ச்சி நிறுவனம் வெளியிட்ட அறிக்கையின்படி, 2023ல் தேசிய அளவிலான தேங்காய் உற்பத்தி 12% குறைந்துள்ளது. பெரும்பாலான சிலாபம் பெருந்தோட்டக் நிறுவனம் தென்னந்தோப்புகள் உலர் காலநிலை மண்டலத்திற்குள் அமைந்துள்ளமையினாலாகும்.

பெருந்தோட்டத் கைத்தொழில் வறட்சியினால் பாதிக்கப்பட்டுள்ளமையும், வறட்சியின் தாக்கங்களைத் தணிப்பதற்காகவும் எமது காணிகளில் இயன்றளவு மழை நீரை சேகரித்து சேமித்து வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதும் மண்ணின் ஈரப்பதத்தைப் பாதுகாக்க ஒரு ஆதாரமாகப் பயன்படுத்தப்படுகிறது, அதே நேரத்தில் UP மற்றும் NP களில் உள்ள இளம் நாற்றுகள் மற்றும் தேவையான இடங்களில் முதிர்ந்த பனைகளுக்கு நீர்ப்பாசனம் செய்ய தண்ணீரைப் பயன்படுத்தலாம். அதற்கு மேலதிகமாக எமது தென்னங் காணிகளில் சொட்டு நீர் பாசன முறைகளை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தேங்காய் வருமானம் மொத்த வருமானத்தில் 84.1% வருமானமாக இருப்பதுடன் வருமானத்தின் முக்கிய அங்கமாகவும் இருக்கின்றது, இது முன்னைய ஆண்டின் ரூ. 882.2 மில்லியனுடன் ஒப்பிடுகையில் இவ் ஆண்டின் வருமானம் ரூ. 756.6 மில்லியன் ஆகும். 2023 ஆம் ஆண்டில் மரமுந்திரியின் வருவாய் இரண்டாவது மிக உயர்ந்த வருவாய் ஆதாரமாக இருப்பதுடன்

இது மொத்த வருவாயில் 7.1% ஆகும், அதாவது ரூ.64 மில்லியன்கள் ஆகும்.

நாற்றுக்கள், கால்நடைகள், பிற பல்லாண்டு பயிர் மற்றும் செயற்திட்டங்கள் போன்ற பிற மூலங்களிலிருந்தான பங்களிப்பு ரூ. 79 மில்லியன் ஆகும், இது மொத்த வருவாயில் 8.8மூ ஆகும்.




**விற்பனைக் கிரயம்**

மதிப்பாய்வுக்கு உட்பட்ட ஆண்டிற்கான விற்பனைக் கிரயம் ரூ. 671.9 மில்லியனாக இருப்பதுடன், இது முந்தைய ஆண்டில் ரூ. 520.9 மில்லியனாக இருந்தது, இது முந்தைய நிதியாண்டுடன் ஒப்பிடும்போது ரூ. 151 மில்லியன் அதிகரிப்பாகும்.

விற்பனை கிரய உள்ளடக்கம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

**விற்பனைக் கிரயத்தின் உள்ளடக்கம்**

| | 2023<br>ரூ. மி. | 2022<br>ரூ. மி. | அதிகரிப்பு / (குறைவு)<br>ரூ. மி. |
|---|---|---|---|
| தேங்காய் மற்றும் கொப்பரா | 544.4 | 462.2 | 82.2 |
| மரமுந்திரிகை | 47.2 | 5.9 | 41.3 |
| கால்நடை | 14.9 | 11.8 | 3.1 |
| நாற்றுக்கள் | 26.3 | 10.0 | 16.3 |
| எண்ணை ஆலை | 17.0 | 13.6 | 3.4 |
| மரமுந்திரிகை பதப்படுத்தல் | 13.3 | 9.8 | 3.5 |
| ஏனையவைகள் | 8.8 | 7.6 | 1.3 |
| மொத்தம் | **671.9** | **520.9** | **151** |

**விற்பனைக் கிரயம் அதிகரிப்பதற்கான முக்கிய காரணங்களை பின்வருமாறு கோடிட்டுக் காட்டலாம்**

- **தெங்கு உற்பத்தியின் விற்பனைக் கிரயம் அதிகரிப்பதற்கான பிரதான காரணங்கள்**

2022 இன் 443 மில்லியன் ரூபாயுடன் ஒப்பிடுகையில் 2023 ஆம் ஆண்டுக்கான மொத்த தேங்காய் உற்பத்திக் கிரயம் 536 மில்லியன் ரூபாயாக இருந்ததுடன், இது 93 மில்லியன் ரூபாயாக அதிகரித்துள்ளது. எவ்வாறாயினும், உற்பத்திச் செலவுக்கு ஏற்றவாறு ஆரம்ப மற்றும் இறுதி இருப்புச் சீராக்கத்தின் பின்னர், 2023 ஆம் ஆண்டுக்கான விற்பனைக் கிரயம் ரூ. 544 மில்லியன் ஆகும். அது கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| | 2023 | ரூ. மி.<br>2022 |
|---|---|---|
| உற்பத்திக் கிரயம் | 536 | 443 |
| ஆரம்ப இருப்புச் சீராக்மக் | 51 | 70 |
| இறுதி இருப்புச் சீராக்கம் | (43) | (51) |
| விற்பனைக் கிரயம்ய | 544 | 462 |

தேங்காய் உற்பத்தி செலவு அதிகரிப்பதற்கான முக்கிய காரணங்களை பின்வருமாறு கோடிட்டுக் காட்டலாம்.

- பொதுக் கட்டணங்கள் 2022 இல் ரூ. 285.9 மில்லியனிலிருந்து 2023 ஆம் ஆண்டில் ரூ. 321.5 மில்லியனாக 35.6 தொகையால் அதிகரித்தன. இந்த பொதுக் கட்டணங்கள் அதிகரிப்பதற்குப் பங்களித்த முக்கிய காரணிகள் பின்வருமாறு

- தோட்ட ஊழியர்களின் சம்பளம் 3.2 மில்லியன் ரூபாவால் அதிகரித்துள்ளது. CPL/CESU புதிய கூட்டு உடன்படிக்கையின்படி தோட்ட நிர்வாகமற்ற ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு மற்றும் முகாமைத்துவ சேவை சுற்றறிக்கைகளின்படி தோட்ட நிர்வாக ஊழியர்களுக்கு வருடாந்த சம்பள அதிகரிப்பை வழங்கியதன் காரணமாக இந்த அதிகரிப்பு பிரதானமாக அமைந்தது.
- முக்கியமாக எரிபொருள் விலைகள் மற்றும் உதிரி பாகங்கள் போன்றவற்றின் அதிகரிப்பு காரணமாக தோட்டத்தின் மேற்பார்வை வாகனங்களுக்கான செலவு 2022 இல் 19.1 மில்லியனிலிருந்து 2023 இல் 22.7 மில்லியனாக அதிகரித்துள்ளது.
- மின் கட்டண உயர்வு காரணமாக மதிப்பீட்டிற்கு உட்பட்ட ஆண்டில் மின்சாரத்திற்கான செலவு 5.8 மில்லியன் ரூபாய் அதிகரித்துள்ளது.
- பணியாளர் நலன், நீர் வழங்கல், அஞ்சல் மற்றும் நிலையான, காப்பீடு, பாதுகாப்பு, மருத்துவம் போன்றவற்றுக்கான செலவுகள் ரூ.7.9 மில்லியன் அதிகரித்துள்ளது.
- முக்கியமாக புதிதாக வாங்கப்பட்ட சொத்து ஆலை மற்றும் உபகரணங்களின் மீதான ஒதுக்கீடு காரணமாக தேய்மானத்திற்கான ஒதுக்கீடு ரூ.6.1 மில்லியன் அதிகரித்துள்ளது.

- நாட்டில் நிலவும் உரப் பற்றாக்குறையின் காரணமாக 2022 ஆம் ஆண்டில் ஒரு குறிப்பிட்ட பகுதியில் மட்டுமே உரப் பயன்பாடு மேற்கொள்ளப்பட்டதால், முதிர்ச்சியடைந்த தோட்டங்களுக்கு உரமிடுவதற்கான செலவு 2022 இல் ரூ. 6.1 மில்லியனிலிருந்து 2023 இல் ரூ. 57 மில்லியனாக அதிகரித்துள்ளது.
- அறுவடைக்கான செலவு 2022 இல் ரூ. 82.9 மில்லியனில் இருந்து ரூ. 2023 ஆம் ஆண்டில் 87.8 மில்லியன்கள் அதிகரிப்புக்கு பறித்தல் செலவு அதிகரிப்பு மற்றும் போக்குவரத்து போன்றவற்றின் செலவுகள் அதிகித்தமை காரணமாக அமைந்தன.

- **மரமுந்திரிகை விற்பனைக் கிரயம்**

கீழே விவரிக்கப்பட்டுள்ளபடி, தொடர்புடைய ஆண்டில் உற்பத்திச் செலவுக்கு ஏற்ப அதிக ஆரம்ப இருப்பு மற்றும் குறைந்த இறுதி இருப்பு சீர்செய்தல் காரணமாக மரமுந்திரி விற்பனைச் செலவு ரூ. 41.3 மில்லியன் வரை அதிகரித்துள்ளது.

| | 2023 | ரூ. மி.<br>2022 |
|---|---|---|
| உற்பத்திக் கிரயம் | 18.6 | 26.3 |
| ஆரம்ப இருப்புச் சீராக்கம் | 29 | 8.6 |
| இறுதி இருப்புச் சீராக்கம் | (.4) | (29) |
| விற்பனைக் கிரயம் | 47.2 | 5.9 |

- இதே ஆண்டில் தென்னங் கன்றுகளில் அதிகமாக வளர்ந்தமற்றும் பொருத்தமற்ற தென்னை மரங்களுக்குஏற்பாடு செய்ததன் விளைவாக, தென்னை நாற்றுக்களின் விற்பனைச் கிரயம் 16.3 மில்லியன் ரூபாவினால் அதிகரித்துள்ளது.

**மொத்த இலாபம்**

2022 இல் பதிவு செய்யப்பட்ட ரூ. 454.1 மில்லியனுடன் ஒப்பிடுகையில் மதிப்பாய்வு ஆண்டின் கீழ் மொத்த இலாபம் ரூ. 227.8 மில்லியனாக இருந்தது.பயிர் வீழ்ச்சியினால் தென்னைப் பகுதியிலிருந்து கிடைக்கும் மொத்த இலாபம் குறைந்ததாலும், அதிகமாக வளர்ந்த தென்னங் கன்றுகளின் புத்தக இருப்புத் தொகையை பதிவளித்தமையினால் தென்னங்

கன்று நாற்றுமேடைகளிலிருந்து கிடைக்கும் மொத்த இலாபம் குறைந்ததாலும் இந்தக் வீழ்ச்சி ஏற்பட்டது.

**ஏனைய தொழிற்பாட்டு வருமானம்**

முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும்போது, ஏனைய தொழிற்பாட்டு வருமானம் 2022 இன் ரூ. 181.5 மில்லியனில் இருந்து 2023 ல் ரூ. 94 மில்லியனாக குறைந்துள்ளது, இது முந்தைய ஆண்டை விட 48% சதவீத குறைவாகும். உமி மற்றும் மட்டை விற்பனையில் ரூ. 1.2 மில்லியன் குறைவு, தென்னை மரங்கள் விற்பனையில் ரூ.10.2 மில்லியன் குறைவு, அரி மரங்கள் விற்பனையில் ரூ. 13 மில்லியன் குறைவு, சாகுபடிக்காக குத்தகைக்கு எடுக்கப்பட்ட நிலத்தின் வருமானம் ரூ. 4.8 மில்லியன் குறைந்துள்ளது. மற்றும் உப்பு நீக்கும் தொட்டி.'.நிலம் புனரமைப்பிற்கான வருமானம் ரூ. 64.2 மில்லியன் குறைந்தமை, முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும்போது ஏனைய வருமானங்களில் இந்த சாதகமற்ற மாறுபாட்டிற்கு முக்கிய காரணங்களாக அமைந்துள்ளன.

பிற வருமான ஆதாரங்களின் விவரங்கள் நிதிநிலை அறிக்கையில் குறிப்பு எண் 21 இல் காட்டப்பட்டுள்ளன.

**நிருவாக மற்றும் பொதுச் செலவுகள்**

2023 ஆம் ஆண்டிற்கான நிர்வாகச் செலவுகள் ரூ 205 மில்லியன் ஆகும், இது 2022 ஆம் ஆண்டில் ரூ 229 மில்லியனாக இருந்தது, இது ரூ 24 மில்லியனாக குறைந்துள்ளது. 2023 நிதியாண்டில், நடைமுறையில் இருந்த லாப மட்டத்தில் பணியாளர் ஊக்கத்தொகை செலுத்துவதற்கான ஒதுக்கீடு குறைந்ததன் காரணமாக இந்த குறைவு ஏற்பட்டது.

**நிதி வருமானம்**

நிதி வருமானம், முக்கியமாக வங்கிகளில் குறுகிய கால வைப்புத்தொகையிலிருந்து கிடைக்கும் வட்டி வருமானம் மற்றும் ஊழியர்களின் கடனுக்கான வட்டி வருமானம் என்பவற்றை உள்ளடக்குகின்றது.

2022 ஆம் ஆண்டோடு ஒப்பிடும் போது, நிதி வருவாய் ரூ. 135.8 மில்லியனில் இருந்து ரூ. 237.3 மில்லியனாக அதிகரித்துள்ளது. ஒப்பிடுகையில் இது 75% அதிகமாகும். இந்த அதிகரிப்புகள் முக்கியமாக வருடத்தில் குறுகிய கால முதலீட்டின் அதிகரிப்பு மற்றும் நிலையான வைப்புகளின் வட்டி விகிதங்களின் அதிகரிப்பு போன்றன இதற்கான காரணமாகும்.

**நிதிக் கிரயங்கள்**

நிதிச் செலவு முக்கியமாக துநுனுடீ குத்தகைச் சொத்துகளின் மீதான வட்டி மற்றும் தற்செயலான குத்தகை வாடகையை பிரதிபலிக்கிறது. 2023 ஆம் ஆண்டில், இது ரூ. 55.7 மில்லியனாக உள்ளது, இது முந்தைய ஆண்டின் ரூ. 41.8 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 33% அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது, இது மொத்த உள்நாட்டு உற்பத்தி தேய்வின் அடிப்படையில் ஆண்டுதோறும் அதிகரிக்கும்.

(2022 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 7.9% உடன் ஒப்பிடும்போது 2023 ஆம் ஆண்டிற்கான மொத்த உள்நாட்டு உற்பத்தி தேய்வு 48% ஆக இருந்தது)

அதோடு, JEDB பளை தோட்டங்களில் (பளை எஸ்டேட், முகமாலை அயனங்கால் தோட்டம், விசுவலிங்கம் தோட்டம் மற்றும் காசிபள்ளைக்கானி தோட்டம்) புதிய குத்தகை சொத்துக்களுக்கான நிதிச் செலவில் ரூ. 3 மில்லியன் நிதிச் செலவு ஏற்பட்டது.

**வரிக்கு முந்திய இலாபம்**

மதிப்பாய்வின் கீழ் உள்ள ஆண்டில், நிறுவனம் வரிக்கு முந்தைய இலாபமாக / (PBT) ரூ. 302.6 மில்லியன் தொகையைப் பதிவு செய்துள்ளது. இது முந்தைய ஆண்டின் இலாபமான ரூ. 513.8 மில்லியனுக்கு எதிராக அடையப் பெற்றுள்ளது. அறுவடை செய்யப்பட்ட பயிர் 23% வருமானம் குறைவடைந்தமை, நாற்றுக்கள் விற்பனை மூலம் கிடைக்கும் இலாபம் குறைவடைந்தமை மற்றும் ஆண்டு முழுவதும் பல்வேறு வருமானங்கள் குறைவடைந்தமை ஆகியவை இந்த வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாகும்.




**வரிவிதிப்பு**

முந்தைய நிதியாண்டில் பதிவு செய்யப்பட்ட ரூ. 20.4 மில்லியனுடன் ஒப்பிடுகையில், மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில், நிறுவனம் ரூ.70.8 மில்லியன் வரி விதிப்பைச் செய்துள்ளது. (வருமான வரி கணக்கீட்டிற்கு குறிப்பு எண் 24 ஐப் பார்க்கவும்)

**பங்கிலாபம்**

சிலாபம் பிளான்டேஷன்ஸ் லிமிடெட், மே 2008 இல் நிர்வாகத்தை மீண்டும் அரசாங்கத்திற்கு எடுத்துக்கொண்ட பின்னர், திறைசேரி / கோல்டன் பங்குதாரருக்கு மொத்த பங்கிலாபத்தொகையாக 630 மில்லியன் ரூபாயை வழங்கியுள்ளது.

2008 முதல் 2023 வரை நிறுவனம் ஈட்டிய இலாபத்துடன் ஒப்பிடுகையில் இது குறிப்பிடத் தக்க அளவு அதிகமாகும். இவ்வாறு சிலாபத் தோட்டங்கள் திறைசேரிக்கு 1992 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டின் இறுதி வரை 792 மில்லியன் ரூபாவை பங்கிலாபமாக வழங்கியுள்ளது.

**மனித வளங்களின் சேவை அங்கிகாரம்**

ஒரு நிறுவனத்தில் மனித வளம்தான் மிக முக்கியமான சொத்து என்பதை உறுதியாக அறிந்திருப்பதால், நிறுவனம் 2023 ஆம் ஆண்டில் ஊழியர்களுக்கு செயல்திறன் ஊக்கத்தொகையாக ரூ.29.5 மில்லியன் செலுத்தியது. இது ஊழியர்களை சிறப்பாகச் செயல்பட ஊக்குவிக்கும் என்பதில் சந்தேகமில்லை.

மேலும், PED சுற்றறிக்கை எண் ........ இன் படி CPL இன் அனைத்து ஊழியர்களுக்கும் உபகாரக் கொடுப்பனவாக 2023 ஆம் ஆண்டில் ரூ. 12.9 மில்லியன் வழங்கப்பட்டது, இது முந்தைய ஆண்டில் செலுத்தப்பட்ட ரூ. 14.6 மில்லியன்களோடு ஒப்பீடு செய்யும் போது குறைவாகும்.

**பங்கொன்றுக்கான உழைப்பு**

நிதியாண்டில், நிறுவனம் ஒவ்வொரு அலகுப் பங்குக்கும் (இபிஎஸ்) ரூ. 11.59 இலாபம் ஈட்டியுள்ளது, இது முந்தைய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட ரூ.24.67 ஆக இருந்தது.

**நடைமுறை விகிதம்**

2023 ஆம் ஆண்டிற்கான நடைமுறை விகிதம் முந்தைய ஆண்டின் 3.9 மடங்குகளுடன் ஒப்பிடுகையில் 3.57 மடங்கு ஆகும். ஆண்டுக்கான தற்போதைய விகிதமான 3.57 என்பது, குறுகிய கால பணப்புழக்கத் தேவைகளைப் போதுமான அளவு பூர்த்தி செய்ய நிறுவனத்திற்கு உதவும் ஒரு பொருளுண்மையான நிலையாகும்.







**நடைமுறையல்லாச் சொத்துக்களில் முதலீடு**

2023 ஆம் ஆண்டில், நிறுவனம் ரூ. 59.3 மில்லியன் (2022: ரூ. 54.5 மில்லியன்) புதிய / கீழ் தோட்டங்கள், முதிர்ச்சியடையாத தோட்டங்களின் முகாமை மற்றும் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களில் (2022: ரூ. 70.8 மில்லியன்) முதலீடு செய்துள்ளது.

2023 ஆம் ஆண்டின் இருப்புநிலை திகதியின்படி, நடைமுறையல்லாத சொத்துக்களின் (ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள், குத்தகை உரிமை, உயிரியல் சொத்து, குத்தகை சொத்துக்களை மேம்படுத்துதல் போன்றவை) நிகர புத்தக மதிப்பு ரூ. 1,590.9 மில்லியன் (2022 : ரூ. 1,476.5 மில்லியன்).

**ஒப்புரவு**

ஒப்புரவில் குறிப்பிட்ட மூலதனம் ரூ 200 மில்லியன் மற்றும் ஒதுக்கம் ரூ 2,179.6 மில்லியன்கள் ஆகும். ஒதுக்கங்களின் கலவை கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| | 2023 | ரூ. மில் 2022 |
|---|---|---|
| நிறுத்திவைத்த உழைப்புக்கள் | 1,844.7 | 1833.5 |
| அரிமர இருப்பு மற்றும் வாகன மீள்மதிப்பீட்டு ஒதுக்கங்கள் | 334.9 | 321.5 |
| **மொத்த ஒதுக்கங்கள்** | **2,179.6** | **2,155.0** |

**திரவத்தன்மை நிலைமை**

| | 2023 | ரூ. மில் 2022 |
|---|---|---|
| மொத்த நடைமுறைச் சொத்துக்கள் | 1,457 | 1,414 |
| மொத்த நடைமுறை பொறுப்புக்கள் | 409 | 363 |
| நிகர தொழிற்படு முதல் | 1,048 | 1,051 |
| நடைமுறை விகிதம் | 3.57 | 3.9 |

2023 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிறுவனத்தின் நிகர செயல்பாட்டு மூலதனம் முந்தைய நிதியாண்டில் பதிவு செய்யப்பட்ட ரூ. 1,051 உடன் ஒப்பிடும் போது ரூ. 1,048 மில்லியனாக இருந்தது.

**பங்காளர்களின் நிதி விகிதம்**

மூலதனக் கட்டமைப்பில் உள்ள பங்குதாரர்களின் நிதியானது 2022 இல் ரூ. 2,355 மில்லியனில் இருந்து 2023 இல் ரூ. 2,380 மில்லியனாக 1% அதிகரித்துள்ளது. மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் பங்குதாரர்களின் நிதியானது மொத்த சொத்துக்களில் 78% க்கு சம்மாகும்.

**கடந்த 5 வருடங்களில் பங்காளர் நிதி**




**காசுப் பாய்ச்சல்**

**நிகர தொழிற்பாட்டு காசுப் பாய்ச்சல்**

முந்தைய நிதியாண்டில் ரூ. 431.6 மில்லியன் நிகர உட்பாய்ச்சலுக்கு எதிராக 2023 ஆம் ஆண்டில் அதன் செயல்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து ரூ. 311.8 மில்லியன் நிகர சாசு உட்பாய்ச்சல்களை பதிவு செய்துள்ளது. நிறுவனத்தின் ஆண்டின் சிறந்த செயல்திறன், தொடர்புடைய ஆண்டில் சாதகமான இயக்க பணப்புழக்கத்தை பதிவு செய்ய வழிவகுத்தது.

**முதலீட்டு செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்பட்ட பணம்**

முந்தைய ஆண்டின் ரூ. 201.7 மில்லியன் நிகர காசு வெளிப் பாய்ச்சலுடன் ஒப்பீடு செய்யும் போது முதலீட்டு நடவடிக்கைகளின் காசுப் பாய்ச்சல் நடப்பு ஆண்டில் ரூ. 107.7 மில்லியன் நிகர காசு வெளியேற்றத்தைப் பதிவு செய்துள்ளது.

மதிப்பாய்வுக்கு உட்பட்ட ஆண்டில், நிறுவனம் ரூ. 69.3 மில்லியன்களை கள அபிவிருத்திக்காகவும், ரூ.45.5 மில்லியன்களை ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களில் முதலீடு செய்துள்ளது, இதன் விளைவாக முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்து நிகர பண வெளிப் பாய்ச்சலை உருவாக்கியது.

**நிதிச் செயற்பாடுகள்**

நிதியளிப்பு நடவடிக்கைகளின் பணப்புழக்கங்கள் மதிப்பாய்வுக்கு உட்பட்ட ஆண்டில் ரூ.138.2 மில்லியன் நிகர பண வெளிப் பாய்ச்சலைக் காட்டுகின்றன. திறைசேரிக்கு செலுத்தப்பட்ட பங்கிலாபத் தொகை ரூ. 130 மில்லியன், குத்தகை வாடகை நிலுவை ரூ. 9 மில்லியன் திறைசேரிக்கு செலுத்தப்பட்டதன. இக் கொடுக்கல் வாங்கல்கள் நிதி நடவடிக்கைகளின் நிகர பண வெளிப் பாய்ச்சலுக்கு முக்கிய காரணங்களாகும்.

**குறுங்கால வைப்புக்கள் மற்றும் வங்கி நிலுவை**

மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டின் இறுதியில் வங்கிகளில் காசு மற்றும் காசுக்குச் சமமான மற்றும் குறுகிய கால வைப்புத்தொகை ரூ. 1,134 மில்லியனாக இருந்ததுடன், அதேசமயம் 2022 ல் இது ரூ. 1,053 மில்லியனாக இருந்தது, இது முந்தைய ஆண்டை விட 8மூ சதவீத அதிகரிப்பாகும்.

# நிறுவனத்தின் ஆளுகை

சிலாபம் பெருந்தோட்ட நிறுவனத்தின் பணிப்பாளர் சபையானது, நேர்மை, நிறுவன ரீதியான நடுநிலைப் போக்கு, வெளிப்படைத்தன்மை, நம்பகத்தன்மை ஆகிய கொள்கைகளின் அடிப்படையில் செயற்படுகின்றது. இது நிறுவனத்தின் ஆர்வம் கொண்டுள்ளவர்களுடன் சிறப்பான தொடர்புகளை கட்டியெழுப்புவதற்குப் பெரும் பங்களிப்புச் செய்தது.

நிறுவனத்தின் நடவடிக்கைகள் நெறிமுறை தரங்களுடனும், பங்குதாரர்களின் சிறந்த நலனுடனும் நடாத்தப்படுகின்றன. நியதிச்சட்ட தேவைப்பாடுகள் மற்றும் நிறுவனத்தின் ஸ்தீரத்தன்மை என்பனவும் வர்த்தகப் பெறுமதி அதிகரிக்கும் முறையில் உருவாக்கப்பட்ட கொள்கைகள், செயலொழுங்குகள், நடைமுறைகள், சரியான கட்டமைப்புக்கள் மற்றும் தகவல்கள் என்பன மேற்படி தொடர்புகளை உறுதிப்படுத்துவதில் சிறந்த பங்களிப்பை பங்களிப்புச் செலுத்தின.

**பணிப்பாளர் சபை உறுப்பினர்கள்**

நிறுவனத்தின் பணிப்பாளர் சபை நிறுவனத்தின் செயலாற்றுகைக்குப் பொறுப்பாகவுள்ளதுடன் இறுதியில் அது தொடர்பில் பொறுப்புக் கூறுவதற்கும் கடமைப்பட்டுள்ளன.

**பணிப்பாளர் சபை உறுப்பினர்கள்**

நிறுவனத்தின் பணிப்பாளர் சபை நிறுவனத்தின் செயலாற்றுகைக்குப் பொறுப்பாகவுள்ளதுடன் இறுதியில் அது தொடர்பில் பொறுப்புக் கூறுவதற்கும் கடமைப்பட்டுள்ளன.

**பொறுப்பு**

நிறுவனத்தின் அடிப்படைக் கொள்கைகளையும் உபாய முறைக் குறிக்கோள்களை உருவாக்குவதற்கும் அவற்றை நடைமுறைப்படுத்துவகற்கும் பணிப்பாளர் சபை கடமைப்பட்டுள்ளது. நிறுவனத்தின் நிதித் தகவல்களின் நம்பகத்தன்மை மற்றும் உள்ளக நிர்வாக முறையின் வெற்றி என்பவற்றுக்கான இறுதிப் பொறுப்பையும் பணிப்பாளர் சபை கொண்டுள்ளது.

**ஆக்க அமைவு**

2023 ஆம் ஆண்டின் பணிப்பாளர் சபையானது தலைவர் மற்றும் நிறைவேற்று பணிப்பாளர் உட்பட 7 பணிப்பாளர்களை கொண்டிருந்தது.

**பணிப்பாளர் சபை கூட்டங்கள்**

பணிப்பாளர் சபை கூட்டங்கள் மாதாந்த அடிப்படையிலேயே இடம்பெறுகின்றன. இக்கூட்டத்தில் நிறுவனத்தின் உபாய முறை வழிமுறைகள், வருடாந்த வரவு செலவு திட்ட மீளாய்வு, அனைத்து செயற்பாடுகளினதும் முன்னேற்றம், மூலதனச் செலவுகள் என்பன தொடர்பாக மீளாய்வு செய்யப்படுகின்றன.

ஒவ்வொரு கூட்டங்கள் இடம் பெறுவதற்கு முன்னர் அது தொடர்பான விபரங்கள் பணிப்பாளர் சபை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டன.

2023 ஆம் ஆண்டில் 11 தடவைகள் பணிப்பளார் சபை கூட்டங்கள் இடம்பெற்றுள்ளன.

**பணிப்பாளர் சபை கூட்டங்கள்**

பனிப்பாளர் சபையானது 3 நிறைறேற்றுத் தரமற்ற பனிப்பாளர்களை கொண்டது.

நிறைவேற்றுத் தரமற்ற பனிப்பாளரான திரு. எச்.ஜீ சுமனசிங்க அவர்கள் பனிப்பாளர் சபை கூட்டத்தின் தலைவராக செயல்பட்டு, வருடத்தில் 3 மீளாய்வுகளை நடத்தியுள்ளார். கணக்காய்வுக் குழு திணைக்களத்தின் அலுவலர் கணக்காய்வு சபை கூட்டத்தின் கண்காணிப்பாளராக செயல்பட்டார்

நிறுவனத்தின் தலைவர், முகாமையாளர், உதவிப் பொது முகாமையாளர், மற்றும் கணக்காளர் ஆகியோர் அழைப்பின் பேரில் கணக்காய்வு சபை கூட்டத்தில் பங்கேற்றனர். பிரதான உள்ளக கணக்காய்வாளர் கூட்டத்தின் அழைப்பாளராக செயல்பட்டார்.

**சட்டத் தேவைப்பாடுகளுக்கு இணங்க செயற்படுதல்**

சங்கத்தின் நியதிச் சட்ம், சங்கத்தின் யாப்பு மற்றும் அரசாங்கத் தொழில் முயற்சிகள் தொடர்பில் ஏற்புடையதாகும் ஏனைய சட்டதிட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு இணங்கிய வகையி செயற்படுவதற்கு பணிப்பாளர் சபை இயன்றவரை அனைத்து முயற்சிகளையும் செய்கின்றது.

இலங்கை தரக்கட்டளை நியமங்களின் அடிப்படையிலும் 2007 ஆம் ஆண்டு 07 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் தேவைகளுக்கு இணங்கியதாகவும் நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்கள் யாவும் தயாரிக்கப்பட்டுள்ளன என்பதை பணிப்பாளர் சபை உறுதியளிக்கின்றது.

## அபாய முகாமைத்துவம்

கைத்தொழில் மற்றும் விவசாயம் சார்ந்த செயற்பாடுகளில் ஈடுபடும் போது ஒவ்வொரு நிறுவனங்களுக்கும் (அமைப்புகளுக்கும்) அபாய முகாமைத்துவம் என்பது மிக மிக அவசியமான விடயமாகும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் பருவநிலை மாற்றம் என்பது நாம் நேர்கொள்ளவேண்டிய சவால்களில் முக்கியமான ஒன்றாகும். வானிலை மாற்றங்கள்களால் தொடர்ச்சியாக மேற்கொண்டு வரும் சில விவசாய நடைமுறைகளை திட்டமிட்டபடி செயல்படுத்த முடியாத சூழலை நிலைகள் உருவாகலாம். விலை தலம்பல்கள், சந்தை தலம்பல்கள் என்பன நாம் கவனம் செலுத்த வேண்டிய முக்கிய விடயங்களாக அமைகின்றது. இந்த அபாயங்களை குறைப்பது நிறுவனமொன்றுக்கு மிக முக்கியமான விடயமாகும். அடையாளம் காணப்பட்ட இந்த இடர் மதிப்பீடுகள் மற்றும் அவற்றை தணிக்கும் உத்திகள் என்பன நிறுவனத்தின் முன்னேற்றத்துக்கு மிக முக்கியமாகும்.

**அபாயக்கட்டுப்பாட்டு உபாயமுறைகள்:**

| அபாயக் காரணி | அபாயம் பற்றிய மதிப்பீடு | அபாயக் கட்டுப்பாட்டு உபாய முறைகள்: |
|---|---|---|
| காலநிலை மாற்றங்கள் | தெங்கு, மரமுந்திரிகை மற்றும் ஏனைய பெரும்போக பயிர்களின் விளைச்சல்கள் பல மாதங்களாக தொடர்கின்ற எதிர்பாராத மற்றும் நீண்ட வரட்சியின் காரணமாக மோசமான காலநிலை நிலைமைகளினால் எதிர்பாராதவித தளம்பல் நிலைமையை கொண்டுள்ளன.<br><br>அதிக வீரியத்துடன் பெய்யும் மழை, மழை காலத்தில் வெள்ளப்பெருக்கு நிலையை ஏற்படுத்துவதோடு இது விவசாய நடைமுறைகளுக்கும், விளைச்சல்களுக்கும் அச்சுருத்தல் விடுக்கின்றது. | பாரிய கிடங்குகளில் புதைக்கப்பட்ட சிதைவுகளின் வழியினூடாக அதிகரித்த மண் ஈரலிப்புத் தன்மை பாதுகாப்பு பணியை பொறுப்பேற்றலும் பெருந்தோட்ட மண்ணினுள் மழை நீரை சேகரிப்பதற்கான அதிக வடிகால்களும் அதிக நிழலுக்காக, உயரம் குறைவான கிளிசீரியா போன்ற மரங்களை நடுதலும் காப்பு பயிர்களான பூரேரியா போன்ற மரங்களும் நடப்பட்டு வருகின்றன.<br><br>மழை நீரை சேமிப்பதற்காக அதிக தேக்கங்களை புனரமைக்கப்படுகின்றன. அத்தகைய சேகரித்த நீர் தேக்கங்களின் அருகிலுள்ள மண்ணின் ஈரத்தன்மையை பேணுவதனூடாக பனை மரங்களின் வேர்களுக்கு நீரூட்டுதலின் பின்னர் நீர்ப்பாசனத்திற்கு பயன்படுத்தப்பட முடியும்.<br><br>பயிர்கள் எதிர்நோக்கியுள்ள நீர்த் தேவையை பூர்த்தி செய்வதற்காக நீர்ப்பாசனத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.<br><br>தேவைப்படும் போது காப்பீடு பெற்றுக்கொள்ளல் |
| உற்பத்திகளுக்கான சேதம் | மற்றொரு காரணம், 50 வயதுக்கு மேற்பட்ட முதிர் நிலை தாவரங்களின் சதவீதம் அதிகரிப்பதனால் முதிர்ந்த, வயது கூடிய மற்றும் பலனற்றதாக மாறுதல்<br><br>இதற்கு மேலதிகமாக ஏதாவது கண்ணுக்கு புலப்படாத பூச்சி, நோய்கள் மற்றும் மரங்கள், பெருந்தோட்டங்களுக்கான இயற்கை காரணங்களாளும். | வயது முதிர்ந்த மரத்தொகையை பதிலீடு செய்வதற்கு புதிய மற்றும் கீழ் பயிர்ச்செய்கைகளை மேற்கொள்ளல்<br><br>தென்னை நிலங்களில் பொருத்தமான இடைப்பயிர்ச் செய்கைகளை அறிமுகம் செய்தல்.<br><br>பலுகஸ்வெவ தோட்டம் மற்றும் திவுலபிடிய தோட்டங்களில் இரண்டு பூச்சிநாசினி ஆய்வுகூடங்களை தாபித்தல்.<br><br>ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை உத்திகள்<br><br>பூச்சி மற்றும் நோய்கள் முகாமைத்துவம் தொடர்பாக ஊழியர்களுக்கு அடிக்கடி பயிற்சியளித்தல் |
| பொருள் சுழற்சி | உணவுக்காக பெறப்படும் தேங்காய்கள், அதனுடன் தொடர்பான உற்பத்திகள் என்பவற்றுக்கு பதிலீடுகள் சந்தையில் காணப்படுவதனால் நுகர்வோரின் கேள்வி குறைவடைந்து விலையின் வீழ்ச்சி மற்றும் நிலையற்ற விற்பனை காரணமாக தோட்டங்களில் உள்ள பாரியளவு தேங்காய்கள் குவிக்கப்படுதல், மற்றும் இதற்கான மாற்றுநடவடிக்கைகள் எடுக்கப்படாவிடின் தேங்காய்கள் கெட்டுப்போகும் வாய்ப்பு உருவாக்கும்.<br><br>பாம் எண்ணெய் போன்ற நெருங்கிய போட்டி பதிலீடுகளின் விலை குறைவாக உள்ளதனால் நுகர்வோர்கள் ஈர்க்கப்பட்டு | தோட்ட மட்டத்தில் தேங்காய்களை விற்பனை செய்வதற்காக நிர்வாகத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு வழிமுறையின் மூலம் அறுவடை செய்யப்படுகிறது, கூடுதலாக, தோட்ட ”பொல் போல” க்கு கூடுதலாக, நிறுவன அளவிலான “பொல் போலா“வும் செயல்பாட்டில் உள்ளது<br><br>தென்னை மற்றும் தென்னை சார்ந்த பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளை நுகர்வோர்க்கு விற்பனை செய்வதற்காக விற்பனை முகவர்களை நிறுவனம் அறிமுகம் செய்துள்ளது.<br><br>பெறுமதி சேர்க்கப்பட்ட பொருட்களைத தயாரிப்பதற்கு கவனம் செலுத்துதல்<br><br>இவ்விரண்டு ஏல விற்பனைகளிலிலும் விற்கப்படாத காய்கள் கொப்பராவாக மாற்றப்படுவதேதாடு அதன் |

| அபாயக் காரணி | அபாயம் பற்றிய மதிப்பீடு | அபாயக் கட்டுப்பாட்டு உபாய முறைகள்: |
|---|---|---|
| | தேங்காய்கான கேள்வி மற்றும் விலைகளில் தாக்கம் செலுத்துகின்றன. | ஒரு பகுதி ஏலவிற்பனை மூலமும் ஏனைய அல்லது பிரதான பகுதி பலுகஸ்வெவ எண்ணெய் ஆலையில் தூய எண்ணெய்யாகவும் மாற்றப்படுகின்றது.<br>விற்பனை நிலையங்கள் மூலமாக தேங்காய்களைவ நுகர்வோர்க்கு விநியோகிக்கவும், விஷேடமாக அரச உத்தியோகத்தர்களுக்கு விநியோகிக்கவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. |
| கடன் இடர் | கொள்வனவாளர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய கடன் தொகை கிடைப்பதற்கான தாமதப்படுத்தப்படுவதற்கான நிகழ்தகவு அல்லது உரிய விதிகள் மற்றும் கட்டுப்பாடுகள் மீறப்படுவதற்கான சாத்தியக்கூறு. | கொள்வனவாளர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய தொகைகளை வசூலிப்பதற்காக உண்ணிப்பான கண்காணிப்பு செயல்முறையை ஏற்படுத்தல்<br>நீண்ட காலமாக செலுத்தப்படாத கட்டணங்களுக்கு அல்லது அது தொடர்பாக பதில் எதுவும் தராத கொள்வனவாளர்களுக்கு எதிராக அதிகாரமுள்ள சட்ட தலையீடுகளை ஏற்படுத்தல்<br>அரச குத்தகை கட்டணங்களை கூர்ந்து கண்காணித்து அவற்றை தாமதமின்றி செலுத்துதல்<br>கொள்வனவாளர் செலுத்த வேண்டிய பணம் தொடர்பான விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளை நிறுவனம் அறிமுகப்படுத்துதல் |
| முகாமைத்துவ ஆளணி | குறைவான ஊக்கம், குறைவனா தொழில் சார்ந்த அறிவின் விளைவாக குறைந்த உற்பத்தி திறன் மற்றும் வெளியிடுகளில் தாக்கத்தை ஏற்படுத்தகின்றன.<br>சிறந்த ஊதியம் அல்லது உயர் பதவிகளுக்கு ஏனைய கைத்தொழில்களுக்கு அல்லது நிறுவனங்களுக்கு ஊழியர்கள் வெளியேறுகின்றமை | செயலமர்வுகள் மற்றும் பயிற்சித்திட்ட பாடநெறிகள்<br>நிதிசார் ஊக்குவிப்புகள் மற்றும் நலனோம்புகை நடவடிக்கைகள் என்றவகையில் ஊழியர் நலன்களை மேம்படுத்தல்<br>அதிகமான கலந்துரையாடல்கள் ஊடாக தொழிற் சங்கங்களுடன் சிறந்த தொடர்புகளை பேணுதல்.<br>ஊழியர்களுக்கு உரித்தான நலன்கள் தொடர்பில் அனைத்து ஒழுங்குறுத்துகை தேவைப்பாடுகளுடனும் இயைந்து செல்வதை உறுதிப்படுத்தல்.<br>சாத்தியமான வகையிலும் பொருத்தப்பாட்டுக்கு தக்கதாகவும் சிரேட்ட பதவிநிலைகளுக்கு உள்ளிருந்து பதவி உயர்வுகளை உறுதிப்படுத்தல் |
| ஆதன ஆபத்துகள் | தீ, கொள்ளை, மற்றும் இயந்திரசாதனங்கள் உபகரணங்களின் சீர்குலைவு.<br>மின்னல், வெள்ளம், பூச்சிகள் கிருமிநாசனிகள் விலங்குகள் மற்றும் காரணிகளினால் ஏற்படுகின்ற இயற்கை அனர்த்தங்கள்<br>வெவ்வேறு தரப்பினர்களால் நிலத்தை சுவீகரிப்பதற்கான முயற்சிகள் | அனைத்து உறுவசத்சொத்துக்கறுக்குமான விரிவான காப்புறுதி காப்பை பெற்றுக்கொள்ளுதல்.<br>ஒரு இடத்திலிருந்து மற்றுமொரு இடத்திற்கு ஆதனங்களை நகர்த்துவது தொடர்பாக கடுமையான நடைமுறைகளை பின்பற்றுதல்.<br>வெளியில் இருந்து நமது நிலங்களுக்குள் தீ பரவுவதை தடுக்க தீ இடைவெளிகளை ஏற்படுத்துதல் மற்றும் ஏனைய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை தாபித்தல்.<br>தடுப்பு பராமரிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை / தீ பயிற்சிகள் போன்றவற்றை அடிக்கடி மேற்கொள்ளல்<br>நல்ல விவசாய முறைகளை பின்பற்றுதல் அனைத்து நிலங்களிலும் கணக்கெடுப்பு திட்டங்கள் தயாரிக்கப்பட்டு சட்டவிரோத ஆக்கிரமிப்புகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றது. |

| அபாயக் காரணி | அபாயம் பற்றிய மதிப்பீடு | அபாயக் கட்டுப்பாட்டு உபாய முறைகள்: |
|---|---|---|
| புகழுரு ஆபத்து | வேலைவாய்ப்பு, வியாபாரம் மற்றும் நிறுவனம் ஒன்றின் ஏனைய நடைமுறைகள் தொடர்பான கொள்கைகள், நடைமுறைகள், தர நிலைகள், விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் பற்றிய அறிவு போதியதாக இன்மை.<br><br>நுகர்வோர் அல்லது சந்தை தேவைகள் மற்றும் தரநிலைகளை பூர்த்தி செய்யாத உற்பத்திகள்<br><br>செயலாற்றுகை, இலக்குகள் மற்றும் தராதரங்கள் தொடர்பான குறைவான அறிவு. | ஊழியர்கள், வங்கியாளர்கள், வாடிக்கையாளர்கள், ஒழுங்குறுத்துகையாளர்கள் போன்ற பல்வேறு பங்குதாரர்களுடன் வினைத்திறன் மிக்க தொடர்பாடலை உறுதிப்படுத்தல்.<br><br>உற்பத்தி மற்றும் தயாரிப்பு செயன்முறை மற்றும் உடன்பாட்டு தராதரங்களில் தரத்தை உறுதிப்படுத்தல்.<br><br>நிறுவனத்தின் செயலாற்றுகையை தொடராக இலக்குப்படுத்தப்பட்டதாக இருக்கின்றது என்பதை உறுதிப்படுத்துவதற்கு மாதாந்த அடிப்படையில் வரவு செலவுத் திட்ட செயன்முறை மற்றும் வரவு செலவுத் திட்ட கட்டுப்பாட்டு பொறிமுறை என்பவற்றை உரியமுறையில் கொண்டிருத்தல்<br><br>பொருட்கள் சேவைகளின் உற்பத்திதிறன் பற்றி நுகர்வோர்களின் கருத்துக்களை பெற்றுக்கொள்ளல். |
| மூலதன முதலீட்டு இடர் | எதிர்பார்க்கப்பட்ட இலாபத்தை அடைய முடியாத இடர் மற்றும் முதலீட்டுக்கான விரும்பிய பெறுவனவுகளை பெற்றுக்கொள்ள இயலாமை | முதலீட்டு மற்றும் எதிர்பார்க்கப்பட்ட மீளப்பெறல் கால அளவை அடிப்படையாக கொண்டு மூலதனச் செலவை அங்கீகரிக்கப்பதற்கு கடுமையான ஒப்புதல் நடைமுறை ஒன்றை ஏற்படுத்துதல். |
| உள்ளீட்டு பொருள் அபாயம் | நாட்டில் நிலவும் தற்போதைய சூழ்நிலையில் உரம், எரிபொருள் பற்றாக்குறை மற்றும் தட்டுப்பாடு | கரிம உரம் (இயற்கை) போன்ற பதிலீட்டு (மாற்று) உள்ளீடுகளுக்கு மாறுதல்.<br><br>உள்ளீட்டு பயன்பாட்டை கூர்ந்து கண்காணித்தல் |
| உணவுப்பாதுகாப்பு அபாயம் ஊழியர்கள் / சமூகம் | நாட்டில் நிலவும் தற்போதைய சூழ்நிலை உணவு தட்டுபாடுகளை ஏற்படுத்தலாம் | பணியாளர்களுக்கு குறுங்கால பயிரிடல்களுக்காக பயிர்நிலங்கள் அல்லது பயிர் விதைகளை வழங்குதல்<br><br>வெளித்தரப்பினர்களுக்கு குத்தகை அடிப்படையில் விவசாய நிலங்கள் வழங்குதல் |

# கணக்காய்வுக் குழு - 2023

சிலாபம் பெருந்தோட்ட நிறுவனத்தின் கணக்காய்வுக்குழு, அதன் இயக்குனர் குழுவின் மேற்பார்வை செயல்பாடுகளை எளிதாக்குவதில் முக்கிய பங்கு வகிக்கின்றது. சிலாபம் பெருந்தோட்ட நிறுவனத்தின் கணக்காய்வுக்குழு 3 நிறைவேற்று தரமற்ற பனிப்பாளர்களை கொன்டுள்ளனர்.இதில் ஒரு திறைசேரி பிரதிநிதியும் அடங்குவர். அவர்களுள் ஒருவர் நிதி மேலாண்மை திறன்களை கொண்டிருக்க வேண்டும்.

குறைந்தது 3 மாதங்களுக்கு ஒரு தடவையாவது கணக்காய்வுக் குழு குழுமப்படுவதோடு சரியான நடவடிக்கைகளை பெற்றுக்கொள்வதற்காக கூட்டத்தின் அறிக்கையுடன் அதன் பரிந்துறைகள் பனிப்பாளர் சபைக்கு அறிக்கைப்படுத்த வேண்டும்.

2023ஆம் ஆண்டில், சிலாபம் பெருந்தோட்ட நிறுவனத்தின் கணக்காய்வுக்குழுவில் 3 நிறைவேற்றுத்தரமற்ற உறுப்பினர்கள் இருந்தனர். மேலும் குழுவின் தலைவர் திறைசேரி பிரதிநிதியாக காணப்பட்டார். எஞ்சிய குழு உறுப்பினர்கள் பெருந்தோட்ட அமைச்சின் மூத்த கூடுதல் செயலாளர் மற்றும் இலங்கை துறைமுக அதிகார சபையின் மூத்த பணியாளர் அதிகாரியாவார். கணக்காய்வுக் குழு தனது விருப்பப்படி தலைவர், பொது முகாமையாளர், மற்றும் நிறுவனத்தின் உயர் தர அதிகாரிகளை கூட்டத்தில் கலந்துகொள்ள அழைப்புவிடுத்துள்ளது. அரசுக்கு சொந்தமான நிறுவங்களுக்கான நிறுவன ஆளுகை குறித்த வழிகாட்டல்களின் கீழ், தேசிய கணக்காய்வாளர் அலுவலகத்தின் பிரதிநிதியும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டார். கூட்டத்தின் நிமிடங்கள் நிறுவனத்தின் பனிப்பாளர் செயளாளர் மூலம் பராமரிக்கப்படும்.

கணக்காய்வுக் குழு பின்வரும் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காகசு பனிப்பாளர் சபைக்கு உதியளிக்கின்றது.

- **நோக்கம்**

- இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய நிதிக்கூற்றுக்களை தயாரித்தல், வெளிப்படுத்துதல், முன்வைத்தல்
- நிறுவனம் மற்றும் நிறுவனத்தின் சட்டங்கள், பிற ஒழுங்குமுறைகள் மற்றும் தேவைகளுக்கு ஏற்ப நிதி அறிக்கைகளுக்கு இணங்குதல்
- இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைய நிறுவனத்தின் உள்ளகக்கட்டுப்பாடுகள், இடர் முகாமைத்துவ வழிமுறைகளை செயல்படுத்துதல்.

- **கூட்டங்கள்**

2023ஆம் ஆண்டில், குழுவானது தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் பிரதிநிதிகளுடன் 3 3 கூட்டங்களில் சந்தித்து உள்ளக கணக்காய்வு அறிக்கை மற்றும் கணக்காய்வு தலைமை அறிக்கை தொடர்பாக ஆலோசித்துள்ளது. பின்வரும் தினங்களில் இக்கூட்டங்கள் இடம்பெற்றுள்ளன.

கணக்காய்வுக் குழு உறுப்பினர்கள் கூட்டம் இடம்பெற்ற திகதி மற்றும் பங்குபற்றிய விபரம்

| | 13.06.2023 | 15.11.2023 | 18.12.2023 |
|---|---|---|---|
| திரு. எச்.ஜீ சுமனசிங்ஹ | ✓ | ✓ | ✓ |
| திருமதி. அருனி எஸ் ரனசிங்ஹ | ✓ | ✓ | ✓ |
| திரு. என் ராஜசிங்ஹ | ✓ | ✓ | ✓ |

**ஒருங்கிணைத்தல்**

2023ஆம் ஆண்டு இடம்பெற்ற கணக்காய்வுக் குழு கூட்டத்தில் 3நிறைவேற்றுத்தரம் அற்ற பனிப்பாளர்களை கொண்டிருந்தது. குழுவானது நிறவனத்தில் தலைவர், பொது முகாமையாளர், மற்றும் நிறுவனத்தின் சில மேலதிகாரிகளை அழைத்திருந்தது.

**கணக்காய்வுக் குழுவின் உள்ளடக்கம்**

நிதி அறிக்கையிடல், உள்ளக கணக்காய்வு, இடர் முகாமை, வெளியக கணக்காய்வாளர்களுடனான உறவு, இணக்கம், அறிக்கையிடல் பொறுப்பு, தொடர்புடைய தரப்பினருடனான பரிவர்தனைகள் என்பவற்றில் குழு உறுப்பினர்கள் விஷேடமாக கவனம் செலுத்தினர்



**திரு. எச்.ஜீ சுமனசிங்ஹ**
தலைவர்
கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு
சிலா. பெருந்தோட்ட நிறுவனம்

# பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கை

சிலா/ பெருந்தோட்ட நிறுவனத்தின் 2023 டிசம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றினையும் ஆண்டறிக்கையையும் கணக்காய்வாளர் தலைமையகத்தின் அறிக்கையையும் நிறுவனம் சார்பாக சமர்ப்பிப்பதில் பணிப்பாளர் சபை பெருமகிழ்ச்சி அடைகின்றது

**சட்ட நிலை**

வரையறுக்கப்பட்ட சிலாபம் பெருந்தோட்ட நிறுவனமானது 1987 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க அரச கூட்டுத்தாபனத்தாபனங்கள் அல்லது அரசுக்கு சொந்தமான தொழில் முயற்சிகளை பொதுக் கம்பனிகளாக்கும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க 1982 ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கூட்டிணைக்கப்பட்டு சட்ட நியதிப்படுத்தப்பட்ட (2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் மீளப் பதிவு செய்யப்பட்டது) ஒரு பொறுப்பு வரையறுக்கப்பட்ட நிறுவனமாகும்.

நிறுவனத்தின் பதிவுசெய்யப்பட்ட பிராதான அலுவலகம் இல. 165, புத்தளம் வீதி, சிலாபம் மற்றும் கொழும்பு அலுவலகம் இல. 55/75, வோக்ஷோல் தெரு, கொழும்பு 02 இலும் அமைந்துள்ளன.

தோட்டங்கள் புத்தளம், குருணாகலை, கம்பஹா மாவட்டங்களில் அமைந்துள்ளதோடு இவை கீழ்வரும் 08 தோட்டங்களின் கீழ் பரிபாளிக்கப்படுகின்றன.

- பளுகஸ்வெவ தோட்டம்
- சிலாப பிரதேச தோட்டங்கள்
- தம்பபன்னி பிரதேச தோட்டங்கள்
- மங்கள எளிய பிரதேச தோட்டங்கள்
- திவுலபிட்டிய பிரதேச தோட்டங்கள்
- மாதம்பை பிரதேச தோட்டங்கள்
- பிங்கிரிய பிரதேச தோட்டங்கள்
- நிக்கவரடிய பிரதேச தோட்டங்கள்

இதற்கு மேலதிகமாக மீளாய்வாண்டின் போது பளை, முகமளை அயனன்னைக, விசுவலிங்கம், மற்றும் காசிப்பளைகாணி தோட்டங்கள் சிலா. பெருந்தோட்ட நிறுவனத்தினால் 30 வருட கால குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

**பிரதான செயற்பாடுகள்**

வரை. சிலாபாம் பெருந்தோட்ட நிறுவனத்தின் பிரதான செயற்பாடபானது தென்னை பயிர்ச்செய்கை, தேங்காய் உற்பத்தி மற்றும் விற்பனை, மரமுந்திரிகை, ஏனைய விவசாய உற்பத்தி மற்றும் பாற்பண்ணை என்பனவாகும்.

**நிதிக்கூற்று**

இலங்கை கணக்கீட்டுக் கொள்கைகளான (SLFRs/LKAS) கு அமைய தயாரிக்கப்பட்ட 2023 டிசம்பர் 31 முடடிவடைந்த ஆண்டுக்கான நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்களாவன, ஆண்டறிக்கையின் பக்கம் 41 முதல் 74 வரை குறிப்பிடப்பட்டுள்ளன.

**கணக்காய்வாளரின் அறிக்கை**

கணக்காய்வாளர் தலைமையகத்தின் கணக்காய்வாளர் கூற்றானது நிறுவனத்தின் நிதிக் கூற்றுக்களில் பக்கம் 33 - 36 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

**கணக்கீட்டுக் கொள்கைகள்**

நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதில் ஏற்று நடை முறைப்படுத்தப்பட்ட குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகள் பக்கம் 41 முதல் 51 களில் இணைக்கப்பட்டுள்ளன. அத்துடன் முன்னைய வருடங்களுடன் ஒப்பிடும்போது ஏற்று நடைமுறைப்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளில் மாற்றங்கள் எதுவுமில்லை.

**தொடர்ந்து செல்லும் எண்ணக்கரு**

எதிர்காலத்தில் அதன் இயக்கங்களைத் தொடர்வதற்கு போதிய வளங்களை நிறுவனம் கொண்டுள்ளதையிட்டு பணிப்பாளர் சபையானது திருப்தியடைகின்றது. இதற்கமைய நிதிக்கூற்றுகள் தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவுக்கு அமைவாகத் தயாரிக்கப்படுகின்றன.

**பணிப்பாளஉ சபை உறுப்பினர்கள்**

2023 இல் நிறுவனத்தின் பணியாற்றிய பணிப்பாளர் சபை உறுப்பினர்களின் பெயர்கள் கீழ்வருமாறு

**முன்னைய பனிப்பாளர் சபை உறுவப்பினர்கள்**

| | |
|---|---|
| **திரு. ஆர்.டப்.எம்.ஜே.எஸ்.ஆர் பெரேரா** (31.12.2019 முதல்) | தலைவர்/பி. நி. அதிகாரி |
| **திரு. எச்.ஜீ சுமனசிங்க** (26.07.2022 முதல் 28.12.2023 வரை) | பனிப்பாளர் கூ திறை. பிரதிநிதி |
| **திருமதி. அருனி எஸ் ரணசிங்க** (26.10.2022 முதல் 09.04.2024 வரை) | பனிப்பாளர் |
| **திரு. என்.கே.கே ராஜசிங்க** (05.02.2020 முதல் 01.03.2024 வரை) | பனிப்பாளர் |
| **திரு. அஜந்த முனமலே** (05.02.2020 முதல் 01.03.2024 வரை) | பனிப்பாளர் |
| **திரு. ஐ.எஸ்.ஜே.பீ குணவர்தன** (05.02.2020 முதல் 01.03.2024 வரை) | பனிப்பாளர் |
| **திரு. டப்.டப்.ஏ.என்.டீ.ஏ பிரனாந்து** (05.02.2020 முதல் 01.03.2024 வரை) | பனிப்பாளர் |
| **திரு. கே.பீ.ஜீ சிசிர குமாரத்ன** (16.11.2022 முதல் 01.03.2024 வரை) | பனிப்பாளர் |

**தற்போதைய பனிப்பாளர் சபை உறுப்பினர்கள்**

| | |
|---|---|
| **திரு. ஆர்.டப்.எம்.ஜே.எஸ்.ஆர் பெரேரா** (31.12.2019 முதல்) | தலைவர் / பிரதான நிறைவேற்று அதிகாரி |
| **திரு. ஆர்.டப்.எம்.ஜே.எஸ்.ஆர். விஜேரத்ன** (28.12.2023 முதல்) | பனிப்பாளர் கூ திறைசேரி பிரதிநிதி |
| **திரு. எல். விக்ரம ஆரச்சி** (09.04.2024 முதல்) | பனிப்பாளர் |
| **திரு. கே.எல் விஜேசிரி** (01.03.2024 முதல்) | பனிப்பாளர் |
| **திரு. எச்.வீ.டப். ரத்னபால** (01.03.2024 முதல்) | பனிப்பாளர் |
| **திரு. டப்.ஆர்.பீ ஜயரத்ன** (01.03.2024 முதல்) | பனிப்பாளர் |
| **திரு. கே.ஜீ.எஸ்.டப் பண்டார** (01.03.2024 முதல்) | பனிப்பாளர் |
| **திரு. எஸ் அபேகோன** (01.03.2024 முதல்) | பனிப்பாளர் |

**கணக்காய்வுக் குழு**

சபையின் பின்வரும் பணிப்பாளர்கள் கணக்காய்வுக் குழுவில் கடமையாற்றிய வருடத்தின்போது மூன்று மதிப்பீடுகளை நடத்தினர்

| | |
|---|---|
| திரு. எச்.ஜீ சுமனசிங்க | தலைவர் (AMC) |
| திருமதி. அருணி ஷானிகா ரணசிங்ஹ | உறுப்பினர் (AMC) |
| திரு. என்.கே.கே ரணசிங்ஹ | உறுப்பினர் (AMC) |
| திருமதி. சுசிலா விஜேரத்ன (தேசிய கணக்காய்வு அலுவலகம்) | கண்காணிப்பாளர் |

**செயல் நிறைவேற்றுகை மீளாய்வு**

ஆண்டின் போது நிறுவனத்தில் செயல் நிறைவேற்றுகை பற்றிய மீளாய்வும் முக்கியமான முகாமைத்துவ மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களும் தலைவரின் மீளாய்வு பக்க இல. 04-05 மற்றும் முகாமைத்துவ மீளாய்வு மற்றும் நிதி மீளாய்வு பக்க இல. 10 முதல் 23 கீழ் வழங்கப்பட்டுள்ளன.

**வருமானம்**

2023 ஆம் ஆண்டுக்கான நிறுவனத்தின் வருமானம் ரூபா. 899.7 மில்லியன்களாகும் (2022 - ரூபா. 975.1 மில்.) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 7% குறைந்துள்ளது. விளைச்சல் குறைந்ததனால் நடப்பாண்டின் தென்னை மூலமான வருமானம் குறைந்தமையே இந்த வருமான வீழ்ச்சிக்கு காரணமாகும்.

தென்னை விளைச்சல் 2022 ஆம் ஆண்டில் 15,172,334 ஆக இருந்து 2023 ஆம் ஆண்டில் 11,728,576 ஆக 23 சதவீத வீழ்ச்சியை காட்டுகின்றது. ஊசுஜ இன் அறிக்கையின் படி தேசிய அளவிலான விளைச்சல் வீழ்ச்சியானது 12% பதியப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் நிலவிய வறண்ட மற்றும் அசாதாரண காலநிலையே இவ்விளைச்சல் வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாகும். அத்தோடு எமது நிறுவனத்தின் பெரும்பாலான தென்னம் தோட்டங்கள் உலர் காலநிலை மண்டலத்திற்குள்ளேயே அமைந்துள்ளன.

தரவுகளுக்கமைய ஒவ்வொரு 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை தென்னை விளைச்சலில் வீழ்ச்சி குறிப்பிடப்பட்டுள்ளதோடு 2023 ஆம் ஆண்டிலும் அவ்வாறான தென்னை விளைச்சல் வீழ்ச்சிப் போக்கொன்றை நாம் அனுபவித்துள்ளோம். அத்தோடு விளைச்சல்களில் ஏற்ற இறக்கம் ஏற்பட்டுள்ளது.

(பொதுவாக, தென்னை விளைச்சல் வீழ்ச்சி அடையும் போது அதற்கமைவான விற்பனை விலை அதிகரிக்கும், என்றாலும், நாட்டில் நிலவும் பொருளாதார் நிலைமைகள் காரணமாக இந்நிலை காணப்படவில்லை)

வருமானம் தொடர்பான தரவுகள் நிதிக்கூற்றுக்களில் குறிப்பு 19 இல் வழங்கப்பட்டுள்ளது.

**ஏனைய செயற்பாட்டு வருமானம்**

ஆண்டுக்கான ஏனைய செயற்பாட்டு வருமானம் ரூபா. 94.0மில். (2022 - ரூபா. 181.5 மில்.). குளங்களை தூர்வார்தல், நிலங்களை புனரமைப்பல் என்வற்றாலான வருமானம் 64.2 மில் ரூபாவால் குறைந்தமை, தென்னை நாற்றுக்கள் விற்பனை மூலமான வருமானம் ரூபா. 10.2 மில்லியன்களால் குறைந்தமை, அரிமர விற்பனை வருமானம் 13 மில்லியன் ரூபாய்களால் குறைந்தமை என்பன இச்சாதகமற்று வேறுபாட்டுக்கு பிரதான காரணமாகும். நாட்டில் நிலவிய பாதகமான பொருளாதார நிலைமைளும் இவ்வீழ்சிக்கு பிரதான காரணமாகும்.

ஏனைய வருமானம் தொடர்பான தகவல்கள் நிதிக்கூற்றுக்களில் குறிப்பு இல. 21 இல் வழங்கப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டின் வட்டி வருமானமானது முன்னைய ஆண்டின் ரூபா. 135.9 மில்லியன்களுடன் ஒப்பிடும் போது ரூபா. 237.4 மில். ஆகும். குறிப்பிடத்தக்க நிதிச் செயன்திறன்களால் குறுங்கால வைப்புகள் அதிகரித்தமை, மற்றும் நிலையான வைப்புகளுக்கான வட்டி வீதம் அதிகரித்தமை என்பன இச்சாதகமான வட்டி வருமான அதிகரிப்புக்கு காரணமாகும்.

**நிதிப் பெறுபேறு**

நடப்பாண்டு மீளாய்வில் நிறுவனத்தின் வரிக்கு முன் இலாபமானது ரூபா. 513.9 மில்லியன்களும் வரிக்கு பின் இலாபம் ரூபா. 231.8 மில்லியன்களும் ஆகும். இது முன்னைய ஆண்டு நிறுவனத்தின் வரிக்கு முன் இலாபமாக ரூபா. 513.9 மில்லியன்கள் மற்றும் வரிக்கு பின் இலாபமாக ரூபா. 493.5 மில்லியன்களாகவும் காணப்பட்டது. தென்னை மூலமான வருமான வீழ்ச்சியும், தென்னை உற்பத்தி கிரய அதிகரிப்பும் ஏனைய இதர வருமான வீழ்ச்சியும் நடப்பாண்டின் வரிக்கு முன் இலாபம் வீழ்ச்சியடைவதற்கு மிக முக்கிய காரணமாகும்.

வரி ஏற்பாடு செய்யும் அளவு நடப்பாண்டில் அதிகரித்தமை வரிக்கு பின் இலாபம் குறைவதற்கு பிரதான காரணமாகும்.

2023 நிதியாண்டின் வரிக்கு பின்னரான நிறுவனத்தின் மொத்த முற்றடக்கிய வருமானம் ரூபா. 209.5 மில். ஆகும் (2022 - ரூபா. 514 மில்)

**நிலையான சொத்துக்கள்**

2023 ஆம் ஆண்டில் நிறுவனமானது ரூபா. 69.3 மில். (2022 - ரூபா. 54.5 மில்) கீழ் / புதிய பயிர்ச்செய்கையின் கீழ் முதிர்வுறாத பயிர்ச்செய்கைகள் முகாமைத்துவத்திலும், மற்றும் ரூபா. 45.5 மில். களை ஆதனம், பொறி, உபகரணங்களிலும் முதலீடு செய்தது. (2022 – ரூபா. 70.8 மில்).

நடைமுறை அல்லாத சொத்துக்களில் தேறிய புத்தகப் பெறுமதியானது (ஆதனம், பொறி, உபகரணங்கள், குத்தகை உரிமை, உயிரியல் ஆதனங்கள் etc...) 2023 இல் ஐந்தொகை தினத்தில் ரூபா. 1591 மில். (2022 - ரூபா. 1476.5 மில்) ஆகும். இது தொடர்பான தகவல்கள் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களில் குறிப்பு 4 – 8 மற்றும் 11.1 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

**குறுங்கால முதலீடுகள்**

நிறுவனத்தின் 2023 ஆம் ஆண்டிற்கான குறுங்கால முதலீடுகளாவன ரூபா. 1090.2 மில். களுடன் ஒப்பிடும் போது 2022 இல் ரூபா. 985.7 மில்லியன்கள் ஆகும். இது தொடர்பான தகவல்கள் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களில் குறிப்பு 12 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

**ஒதுக்கங்கள்**

நிறுவனத்தின் ஒதுக்குகளை பிரதிநிதித்துவப்படுத்தி 31.12.2023 இல் நிறுத்தி வைத்த இலாபங்கள் ரூபா. 1844.7 மில். மற்றும் அரி மர ஒதுக்குகள் 237.8 மில்லியன்களும் மற்றும் மோட்டார்

வாகனங்களின் மீள்மதிப்பீட்டு ஒதுக்கு ரூபா. 97.9 மில்லியன்கள் ஆகும்.

ஒதுக்கல்களில் நகர்வுகளும் ஆக்கக்கூறுகளும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உரிமையாண்மை மாற்றல் கூற்றுக்களின் கீழ் விபரிக்கப்பட்டுள்ளன.

**வரிவிதிப்பு**

நிறுவனத்திற்கு பொருந்தக்கூடிய வரிவிதிப்பு பற்றிய மேலதிக விபரங்கள் மற்றும் வரிவிதிப்பு இலாபங்களுடன் கணக்கியல் இலாபங்களை சரிசெய்தல் என்பவை தொடர்பாக தகவல்கள் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களில் பக்கம் 68 முதல் 69 வரை குறிப்பு 24 இல் விபரிக்கப்பட்டுள்ளது.

**கூறப்பட்ட மூலதனம்**

31.12.2023 இல் மொத்த கூறப்பட்ட மூலதனமாக ரூபா. 200,000,010. இது சாதாரண பங்குகள் 20,000,001 சாதாரண பங்குகள் உட்பட பொன்னான பங்கொன்றையும் உள்ளடக்கியுள்ளது. வருடத்துக்கும் பங்கு வழங்கள்கள் எதுவும் இடம்பெறவில்லை.

**மூலதனக்கடப்பாடுகளும் வருநிகழ்வான பொறுப்புக்களும்.**

வருநிகழ்வான பொறுப்புக்கும் மூலதனக் கடப்பாடுகளும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களில் குறிப்பு இல. 28 இல் விபரிக்கப்பட்டுள்ளன

**ஐந்தொகை திகதிக்கு பின்னரான நிகழ்வுகள்.**

ஐந்தொகை திகதிக்கு பின்னர் நிறுவனத்தில் பொருள் ரீதியான தாக்கத்தினை ஏற்படுத்தக் கூடிய குறிப்பு இல. 25.2 இல் குறிப்பிடப்பட்டுள்ளதற்கு புறம்பாக வேறெந்த நிகழ்வுகளும் இடம்பெறவில்லை.

**ஒப்பந்தங்களில் பணிப்பாளர்களின் ஆர்வங்கள்**

நிறுவனங்களுடனான ஒப்பந்தங்களில் குறிப்பு 26 கு மேலதிகமாக பணிப்பாளர்கள் நேரடியான அல்லது மறைமுகமான ஆர்வங்களை கொண்டிருக்கவில்லை.

**பணிப்பாளர்களின் பங்குகள்**

நிறுவனத்தின் பணிப்பாளர்களோ அல்லது அவர்களின் வாழ்க்கை துணையினரோ பங்குகள் எதனையும் வைத்திருக்கவில்லை.

**தொழில்வாய்ப்பு**

நிறுவனமானது வேலைவாய்ப்பு உள்ளிட்ட அதனுடன் தொடர்புடைய தெரிவுசெய்தல், பயிற்சி, பதவி உயர்வு, ஒழுக்காற்று நடவடிக்கைகள் ஆகியவற்றில் சமமான வாய்ப்பு கொள்கையினை நடைமுறைப்படுத்தி வருவதுடன் நிறுவனத்தின் தெரிவுகள் யாவும் நிறுவனத்தின் நீடுறுதியான நன்மையை கருத்தில்கொண்டு அரசாங்கத்தின் விதிகள் மற்றும் ஒழுக்கு விதிகளுக்கு ஏற்ப தகுதியின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்படுகின்றன. நிறுவனம் பால்நிலை, இனத்துவம், சமயம், திருமண அந்தஸ்த்து அரசியல் அபிப்பிராயம் மற்றும் உடல் ரீதியான அங்கவீனம் ஆகியவற்றினை கருத்தில் கொள்ளாது நிறுவனத்தின் நலனுக்கு இயைபுற்று சமமான வாய்ப்பு எனும் கொள்கையை பின்பற்றி வருகின்றது.

**நியதிச்சட்ட கொடுப்பனவு**

பணிப்பாளர்கள் அவர்களது அறிவுக்கு எட்டிய வகையில் நிறுவனத்தினால் செலுத்தப்பட வேண்டிய சகல வரிகள், தீர்வைகள், கொடுப்பனவுகள், நிறுவனத்தின் ஊழியர்கள் சார்பில் அவர்களுக்காக

செலுத்தப்பட வேண்டிய கொடுப்பனவுகள் வரிகள் போன்றவற்றையும் ஏனைய நிறுவனங்களினால் செலுத்தப்பட வேண்டிய சகல நியதிச்சட்ட கொடப்பனவுகளையும் ஐந்தெகை திகதியில் உள்ளவாறாக செலுத்தியுள்ளனர், அல்லது பொருத்தமானவாறாக அதற்கான ஏற்பாடுகளை வழங்கியுள்ளனர்.

**கணக்காய்வாளர்கள்**

2023 ஆம் ஆண்டுக்கான கணக்குகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தின் மூலம் கணக்காய்வு செய்யப்பட்டது. கணக்காய்வாளர் கருத்துக்கள் நிதிக்கூற்றுக்களில் பக்கம் 39 - 42 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

**வருடாந்த பொதுக்கூட்டம்**

வருடாந்த பொதுக்கூட்டமானது 2023 ஆகஸ்ட் 23 ஆம் திகதி மு.ப 11 அளவில் JEDB கட்டடம், இல. 55/78இ வோக்ஷோல் தெரு, கொழும்பில் நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

வருடாந்த பொதுக்கூட்டத்துக்கான அறிவித்தல், பெறுகைப்படிவம் பக்க இல. 89,90 இல் இணைக்கப்பட்டுள்ளன.

வரையறுக்கப்பட்ட சிலாபம் பெருந்தோட்ட நிறுவனத்தின் பணிப்பாளர் சபைக்காகவும் அதன் சார்பிலும்

............................................................................

**திரு. ஆர்.டப்.எம்.ஜே.எஸ்.ஆர். பெரேரா**
(தலைவர் / பிரதான நிறைவேற்று அதிகாரி)

CORPORATE ADVISORY SERVICES (PRIVATE) LIMITED
PV 3796
SEC/1017/93
Secretaries

பெரு நிறுவன ஆலோசனை சேவைகள் தனியார் நிறுவனம்
செயலாளர்கள் - சிலா/ பெருந்தோட்ட நிறுவனம்

கொழும்பு

# பணிப்பாளர் சபையின் பொறுப்புக்கள் தொடர்பான அறிக்கை

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் நிதி அறிக்கைப்படுத்தல் தொடர்பில் தாம் கொண்டுள்ள பொறுப்பை சிலாபம் பெருந்தோட்ட நிறுவனத்தின் பணிப்பாளர் சபை ஏற்றுக்கொள்கின்றது. நிறுவனத்தின் கணக்காய்வாளரான கணக்காய்வாளர் தலைமையகம், பொறுப்புக்கள் தொடர்பில் தங்களது அறிக்கையில் சுருக்கமாக விளக்கியுள்ளனர்.

இவ்வறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள 2023 டிசம்பர் 31 ஆந் திகதி முடிவடையும் வருடத்திற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு தர நியமங்களுக்கு இணங்கத் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அது தொடர்பான விளக்கங்கள் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க வெளிப்படுத்தியுள்ளது.

பொருத்தமான கணக்கீட்டு கொள்கைகளை தொடர்ச்சியாக பயன்படுத்தி, பொருத்தமான கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பதை பனிப்பாளர்கள் உறுதிப்படுத்துகின்றனர். இத்தர நியமங்கள் மாற்றமடையும் சந்தர்ப்பங்கள் ஏதும் இருப்பின் அவற்றை உரியமுறையில் சுட்டிக்காட்டி அதற்கான நியாயங்கள் விளக்கப்பட்டுள்ளன. இந் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது எடுக்கப்பட்ட தீர்மானங்களும் மதிப்பீடுகளும் சரியானவை எனவும் உண்மையானவை எனவும் உறுதிப்படுத்துகின்றனர்.

நிறுவனத்தின் நிதி நிலமையை துள்ளியமாக காட்டுவதற்கான நிதி அறிக்கைகளை தயாரிப்பதற்கான போதுமான கணக்கீட்டு பதிவுகளை நிறுவனம் பராமரிக்கின்றது என்பதை பனிப்பாளர் சபையினர் பொறுப்பேற்று உறுதிப்படுத்துகின்றனர் ஆண்டறிக்கையில் காட்டப்பட்டுள்ள 31 டிசம்பர் 2023 இற்கான நிதிக்கூற்றுக்கள் மூலம் நிறுவனத்தின் நாளாந்த செயற்பாடுகள் உண்மையான முறையிலும் நியாமான முறையிலும் மேற்கொள்ளப்படுகின்றன என்று பணிப்பாளர் சபைப் உறுதிப்படுத்துகின்றது.

நிறுவனத்தின் உள்ளக நிர்வாகத் தொகுதி தொடர்பான முழுமையான பொறுப்பு பணிப்பாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. திரவத்தன்மை தொடர்பான பிழையான கூற்றுக்கள் மற்றும் மோசடிகளை முழுமையாக நடைமுறைப்படுத்தி உள்ளகச் சுருக்கம், உள்ளகக் கணக்காய்வு, நிதிமற்றும் வேறு நிர்வாக முறைகள் மூலம் ஏற்படக்கூடிய திரவத் தன்மை தொடர்பான பிழையான கூற்றுக்கள் மற்றும் மோசடிகளை அல்லது நியாயமான காலத்தினுள் அறிந்து கொள்வதற்கு முடியுமான முறையில் அனைத்துச் சொத்துக்களையும் பாதுகாப்பதற்கும் கொடுக்கல் வாங்கல்களை உரியமுறையில் காட்டுவதற்கு முடியுமான முறையில் தயாரிக்கப்பட்டுள்ளன என்றும் உறுதிப்படுத்துகின்றது.

எதிர்வரும் பலவருடங்களில் நிறுவனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாகப் பேணி வருவதற்கான போதியளவான வளங்கள் காணப்படுகின்றன எனவும் நிதிக்கூற்றுகளை தயாரிக்கும் போது தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு தொடர்ச்சியாக பின்பற்றவேண்டும் எனவும் பணிப்பாளர் சபை கருதுகின்றது.

நிறுவனத்தின் கணக்காய்வாளர்களான கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம் - பட்டயக் கணக்காளர்கள் தனது பொறுப்பை மேற்கொள்வதற்கு அவசியமான அனைத்துத் தகவல்களையும் ஒத்துழைப்பையும் பணிப்பாளர் சபை வழங்கியது

கணக்காய்வாளர்கள் அனைத்து நிதிக் கூற்றுக்களையும் நிதி அறிக்கைகளையும் உரிய தரவுகளையும் பரிசீளித்து தங்களது சுதந்திரமான கருத்துக்களைச் சமர்ப்பித்துள்ளனர். அவ்வறிக்கை இதில் உள்ளடக்கப்படட்டுள்ளது.

நிறுவனம் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது செலுத்த வேண்டியிருந்து கண்டறியப்பட்ட அனைத்து வரிகளும் நிறுவனத்தின் ஊழியர்களுக்குச் செலுத்த வேண்டிய கொடுப்பனவுகளும் நிறுவனம் செலுத்தவேண்டிய ஏனைய நியதிச்சட்ட கொடுப்பனவுகளும் செலுத்தி முடிக்கப்பட்டுள்ளன அல்லது செலுத்துவதற்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளன என பணிப்பாளர்கள் உறுதியளிக்கின்றனர்.

CORPORATE ADVISORY SERVICES (PRIVATE) LIMITED
PV 3796
SEC/1017/93

Secretaries

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,
பெரு நிறுவன ஆலோசணை சேவைகள் தனியார் நிறுவனம்
செயலாளர்கள் - வரை. சிலாபாம் பெருந்தோட்ட நிறுவனம்

**பீஏல்/சீ/சீபீஎல்/01/2023/02** 2024 யூலை24 ஆம் திகதி.

**தலைவர்,**
**சிலாபம் பிளான்டேஷன் லிமிட்டட்**

**சிலாபம் பிளான்டேஷன் லிமிட்டட்டின் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனையசட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12 ஆவது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

சிலாபம் பிளான்டேஷன் லிமிட்டட்டின் (“கம்பனி”) 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கான தகவல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் உள்ளடங்கிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் **2007** இன் **07** ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலமைப்பின் 154(6) உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

கம்பனியின் நிதிக்கூற்றுக்களினால் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

### 1.3 கம்பனியின் 2023 வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய தகவல்கள்

இந்த கணக்காய்வு அறிக்கையின் திகதிக்குப் பின்னர் எனக்குப் பெற்றுத் தருவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற கம்பனியின் 2023 வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள இருப்பினும், நிதிக்கூற்றுக்கள் மற்றும் அது தொடர்பான எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிராத தகவல்கள் ஏனைய தகவல்கள் என்பதன் பொருள்படும். இந்த ஏனைய தகவல்களுக்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது அபிப்பிராயத்தில் ஏனைய தகவல்கள் உள்ளடக்கப்படாததுடன், நான் அது தொடர்பாக எவ்விதத்திலும் சான்றுப்படுத்தல் அல்லது அபிப்பிராயமொன்றை கூறவில்லை.

நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கணக்காய்வு தொடர்பாக, எனது பொறுப்பானது மேலே இனங்காணப்பட்ட ஏனைய தகவல்களை பெறக்கூடியதாக இருக்கும் போது வாசிப்பு மற்றும் அவ்வாறு மேற்கொள்ளும் போது ஏனைய தகவல்கள் நிதிக்கூற்றுக்களுடன் அல்லது கணக்காய்வின் போது அல்லது வேறு வகைகளில் பெறப்பட்ட எனது அறிவிற்கெட்டியதன் பிரகாரம் பொருண்மையான வகையில் பொருந்தவில்லையா என்பதனை கவனத்திற்கொள்வதேயாகும்.

கம்பனியின் 2023 வருடாந்த அறிக்கையை வாசிக்கும் போது அதில் பொருண்மையான பிழையான குறிப்பிடுதல் காணப்படுவதாக நான் முடிவிற்கு வந்தால், சரி செய்வதற்காக ஆளுகைக்குட்பட்ட தரப்பினருக்கு அந்த விடயங்கள் தொடர்பாடல் படுத்தப்படல் வேண்டும். மேலும் சரி செய்யப்படாத பிழையான குறிப்பிடுதல்கள் காணப்பட்டால் அவை அரசியலமைப்பின் 154(6) அரசியலமைப்பின் பிரகாரம் என்னால் காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் அறிக்கையில் உள்ளடக்கப்படும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது கம்பனி தொடர்ந்தியங்கும் ஆற்றலினை தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாக காணப்படுவதோடு முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாதவிடத்து செயற்பாடுகளை இடைநிறுத்த நடவடிக்கை மேற்கொண்டால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையில் கணக்குகள் வைத்திருத்தல் மற்றும் கம்பனியின் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதலும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பாக பரிசீலனை மேற்கொள்ளும் பொறுப்பு, ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் மேற்கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக்கூடியவாறு வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் முறையாக பேணப்படுதல் வேண்டும்.

### 1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டுமொத்தமான நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.
- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக நிதியத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியுள்ளதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் பேணியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கல்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் ஆளுகைக்குட்பட்ட தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டது.

## 2. ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் மற்றும் 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.1.1 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163(2) பிரிவில் மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் கணக்காய்விற்குத் தேவையான அனைத்து தகவல்களும்

வெளிப்படுத்தல்களும் என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் எனது பரிசோதனையிலிருந்து தோன்றும் வகையில் முறையான நிதி அறிக்கைகளை கம்பனி பேணி வந்திருந்தது.

2.1.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிட்டுள்ள தேவைப்பாட்டின் பிரகாரம் கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய வருடத்துடன் ஒத்திருந்தது.

2.1.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(i)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபார்சுகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.2 பின்பற்றப்பட்ட நடைமுறைகள் அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்ட சான்றுகள் பொருண்மையான விடயங்களுக்கான வரையறைகளுக்குள் பின்வருவன சொல்லக்கூடிய அளவிற்கு வேறு எதுவும் எனது கவனத்திற்கு உட்பட்டிருக்கவில்லை.

2.2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க கம்பனியின் அங்கத்தவர்கள் எவருக்கும் கம்பனி சம்பந்தப்பட்ட ஏதேனும் உடன்படிக்கை சம்பந்தமாக நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ வழமையான வணிக செயற்பாடுகளுக்குப் புறம்பாக தொடர்புகள் காணப்படுகின்றமையை குறிப்பிடுதல்.

2.2.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஊ) பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க ஏதாவது தொடர்புபட்ட எழுத்திலான சட்டங்களுக்கு அல்லது கம்பனியின் நிருவாக சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுக்கு இணங்கியொழுகாதமையை குறிப்பிடல்.

2.2.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(எ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டின் பிரகாரம் கம்பனியின் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் இணங்காதாக நடவடிக்கை மேற்கொண்டிருப்பதாக,

2.2.4 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டிக்கிணங்க கம்பனியின் வளத்தை சிக்கனமாக, வினைத்திறனாக மற்றும் ஆக்கபூர்வமாக கால வரையறைக்குள் உரிய சட்டங்கள், விதிகளுக்கு இணங்க பெறுகைக்குட்படுத்தி பாவனைக்குட்படுத்தபட்டிராமை.

டபிள்யூ.பீ.சீ. விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

## முற்றடக்கிய வருமானக் கூற்று

| 31 டிசம்பர் முடிவடைந்த ஆண்டுக்கான | குறிப்பு | 2023<br>ரூபா. | 2022<br>ரூபா. |
|---|---|---|---|
| வருமானம் | 19 | 899,693,759 | 975,106,419 |
| விற்பனை கிரயம் | 20 | (671,910,856) | (520,940,365) |
| **மொத்த இலாபம்** | | **227,782,903** | **454,166,053** |
| இலாபம்/நட்டம் (உயிரியல் ஆதனங்களுக்கான சந்தை பெறுமதி) | 7.3 | 10,145,544 | 15,025,382 |
| ஏனைய தொழிற்பாட்டு வருமானம் மற்றும் கிடைப்பனவுகள் | 21 | 94,014,156 | 181,535,982 |
| நிர்வாக மற்றும் பொது செலவுகள் | 22 | (205,069,246) | (229,027,818) |
| தொழிற்பாட்டு நடவடிக்கைகள் மூலமான இலாபம் | | 126,873,356 | 421,699,599 |
| நிதி வருமானம் | 23 | 237,386,004 | 135,874,424 |
| நிதிச் செலவுகள் | 23.1 | (61,652,953) | (43,693,022) |
| **வரிக்கு முன் இலாபம்** | | **302,606,407** | **513,881,001** |
| வரிச் செலவுகள் (ஒதுக்கங்கள்) | 24 | (70,868,847) | (20,411,125) |
| **ஆண்டுக்கான இலாபம்** | | **231,737,560** | **493,469,876** |
| **ஏனைய முற்றடக்க வருமானம்** | | | |
| திட்டவட்டமான ஊழியப் பயன் திட்ட மதிப்பீட்டு பெறுகை / (இழப்பு) | 16 | (21,265,292) | 21,063,086 |
| மோட்டார் வாகனங்களின் மீள்மதிப்பீட்ட இலாபம் | | (923,148) | (562,333) |
| **வரிக்கு பின் ஆண்டுக்கான மொத்த முற்றடக்கிய வருமானம்** | | **209,549,120** | **513,970,629** |
| பங்கொன்றுக்கான அடிப்படை உழைப்பு (ரூபா.) | 25.1.2 | **11.59** | **24.67** |

கழிக்கப்பட வேண்டியவைகள் அடைப்புக்குறிகளுக்குள் காட்டப்பட்டுள்ளன.

41 முதல் 74 வரையான பக்கங்களில் உள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புகள் என்பன நிதிக்கூற்றுக்களின் ஒரு பகுதியாகும் என்பதைக் கவனத்திற் கொள்ளவும்

**சிலாபம்**
**மார்ச் 21, 2024**

## நிதி நிலைமைக் கூற்று

| 31 டிசம்பர் அன்று | குறிப்பு | 2023 ரூபா. | 2022 ரூபா. |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறை அல்லாத சொத்துக்கள்** | | | |
| JEDB தோட்டங்களின் வெற்றுக் காணிகளுக்கான குத்தகை உரிமை | 04 | 105,374,496 | 60,356,373 |
| JEDB தோட்டங்களின் குத்தகைக்குப் பெறப்பட்ட ஆதனம்,பொறி,உபகரணம் (காணிப் பயன்பாட்டு உரிமை மற்றும் குத்தகையிலான உயிரியல் ஆதனங்கள் தவிர) | 05 | 769,468 | 769,468 |
| JEDB பெருந்தோட்டங்களின் குத்தகை கொள்ளப்பட்ட உயிரியல் ஆதனங்கள் | 05.1 | 27,162,119 | 10,939,028 |
| குத்தகை சொத்துக்களை முன்னேற்றுதல் | 6 | 1,073,815,205 | 1,028,825,198 |
| உயிரியல் ஆதனங்கள் - கால்நடைகள் | 7.1 | 25,544,815 | 25,779,100 |
| நுகரத்தக்க உயிரியல் ஆதனங்கள் | 7.2 | 139,297,920 | 138,313,825 |
| குத்தகையில்லாத ஆதனம், பொறி, உபகரணங்கள் | 08 | 201,427,046 | 193,729,753 |
| ஏனைய நிதிச் சொத்துக்கள் | 11.1 | 17,550,384 | 17,810,643 |
| பிற்போடப்பட்ட வரிச்சொத்துக்கள் / (பொறுப்புக்கள்) | 14 | | |
| | | 1,590,941,452 | 1,476,523,388 |
| **நடைமுறை சொத்துக்கள்** | | | |
| உயிரியல் ஆதனங்களின் உற்பத்தி | 9.1 | 25,993,440 | 30,194,568 |
| இருப்புக்கள் | 9.2 | 148,934,886 | 195,288,282 |
| விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள் | 9.3 | 16,004 | 4 |
| வியாபார மற்றும் ஏனைய கிடைப்பனவுகள் | 10 | 139,052,094 | 127,630,321 |
| அரசாங்க தொழில்முயற்சிகளுக்கான கடன் வசதிகள் | 11 | | |
| ஏனைய நிதிச் சொத்துக்கள் | 11.1 | 7,300,268 | 6,159,131 |
| ஏனைய நடை முறை சொத்துக்கள் | | 1,316,343 | 1,226,458 |
| குறுங்கால முதலீடுகள் | 12 | 1,090,243,489 | 985,660,947 |
| கையிருப்பாகவும் வங்கியிலும் உள்ள காசு | | 43,794,899 | 67,349,035 |
| | | 1,456,651,425 | 1,413,508,745 |
| **மொத்த சொத்துக்கள்** | | **3,047,592,877** | **2,890,032,133** |
| **உரிமையாண்மையும் பொறுப்புக்களும்** | | | |
| **மூலதனமும் ஒதுக்கங்களும்** | | | |
| கூறப்பட்ட மூலதனம் | 13 | 200,000,010 | 200,000,010 |
| நிறுத்தி வைத்த உழைப்புக்கள் | | 1,844,717,949 | 1,833,592,353 |
| மீள்மதிப்பீட்டு ஒதுக்கங்கள் ((Timber) மரங்கள், வாகனங்களின் மீள்மதிப்பீடு) | | 334,884,314 | 321,460,790 |
| **மொத்த உரிமையாண்மை** | | **2,379,602,273** | **2,355,053,153** |
| **நடைமுறையல்லாப் பொறுப்புக்களும் பிற்போடப்பட்ட வருமானங்களும்** | | | |
| கடன்கள் மற்றும் இரவல்களுக்கான வட்டி | 14 | 93,175 | 314,474 |
| பிற்போடப்பட்ட வரிப்பொறுப்புக்கள் | 15 | 10,088,526 | 9,775,811 |
| பிற்போடப்பட்ட கொடைகள் மற்றும் மானியங்கள் | 16 | 92,025,543 | 69,807,963 |
| ஓய்வுதியப் பயன் கடப்பாடுகள் | 17 | 157,243,235 | 92,505,957 |
| JEDB/SLSPC பெருந்தோட்ட குத்தகைக் கொடுப்பனவுப் பொறுப்புக்கள் | | 259,450,479 | 172,404,205 |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| வியாபார மற்றும் ஏனைய சென்மதிகள் | 18 | 360,835,121 | 344,602,287 |
| வருமான வரி சென்மதிகள் | | 44,768,673 | 15,272,989 |
| கடன்கள் மற்றும் இரவல்களுக்கான வட்டி | 18.1 | - | - |
| JEDB/SLSPC பெருந்தோட்ட குத்தகைக் கொடுப்பனவுப் பொறுப்புக்கள் | 17 | 2,936,331 | 2,699,498 |
| | | 408,540,125 | 362,574,774 |
| **மொத்த உரிமையாண்மை மற்றும் பரிப்புக்கள்** | | **3,047,592,877** | **2,890,032,133** |

41 முதல் 74 வரையான பக்கங்களில் உள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புகள் என்பன நிதிக்கூற்றுக்களின் ஒரு பகுதியாகும் என்பதைக் கவனத்திற் கொள்ளவும்

**உறுதிப்படுத்துதல்**

.............................

**திரு. ஆர்.எம்.ஆர்.பீ. ரத்நாயக்க**
சிரேஷ்ட கணக்காளர்

நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமான முன்னிலைப்படுத்தல் என்பன பணிப்பாளர் சபையின் பொறுப்பாகும்.
வரையறுக்கப்பட்ட சிலாபம் பெருந்தோட்ட நிறுவனத்தின் பணிப்பாளர் சபைக்காகவும் அவர்கள் சார்பாகவும் அங்கீகாரமளிக்கப்பட்டு ஒப்பமிடப்பட்டது.

.............................

**திரு. ஆர்.டப்.எம்.ஜே.எஸ்.ஆர். பெரேரா.**
(தலைவர் / பிரதான நிறைவேற்று அதிகாரி)

.............................

**திரு. டப்.டப்.ஏ.என்.டீ.ஏ பிரனாந்து**
(பணிப்பாளர்)

**சிலாபம்**

**மார்ச் 21, 2024**

## உரிமையாண்மைக் கூற்று

**31 டிசம்பர் 2022 முடிவடைந்த ஆண்டுக்கானது**

| விபரம் | கூறப்பட்ட மூலதனம் ரூபா. | Timber மர ஒதுக்குகள் ரூபா. | மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் ரூபா. | திரண்ட இலாபம் ரூபா. | மொத்தம் ரூபா. |
|---|---|---|---|---|---|
| **2021 சனவரி 1 அன்று இருந்தவாறான மீதி** | **200,000,010** | 204,901,015 | 98,523,971 | 1,417,657,528 | 1,921,082,524 |
| 2020 ஆம் ஆண்டுக்கான பங்கிலாபம் | | | | (80,000,000) | (80,000,000) |
| ஆண்டுக்கான இலாபம் | | | | 493,469,876 | 493,469,876 |
| ஏனைய முற்றடக்க வருமானங்கள் | | | | 20,500,753 | 20,500,753 |
| மர (Timber) ஒதுக்கத்துக்கு மாற்றப்பட்டது. (7.2) | | 18,598,138 | | (18,598,138) | |
| மோட்டார் வாகன மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்துக்கு மாற்றப்பட்ட பிற்போடப்பட்ட வரிச் சீராக்கங்கள் | | | (562,333) | 562,333 | |
| **2021 டிசம்பர் 31 அன்று இருந்தவாறான மீதி** | **200,000,010** | **223,499,152** | **97,961,638** | **1,833,592,353** | **2,355,053,153** |
| 2022 ஆம் ஆண்டுக்கான பங்கிலாபம் | | | | (125,000,000) | (125,000,000) |
| 2023 ஆம் ஆண்டுக்கான இடைக்கால பங்கிலாபம் | | | | (60,000,000) | (60,000,000) |
| ஆண்டுக்கான இலாபம் | | | | 231,737,560 | 231,737,560 |
| ஏனைய முற்றடக்க வருமானங்கள் | | | | (22,188,440) | (22,188,440) |
| மர (Timber) ஒதுக்கத்துக்கு மாற்றப்பட்டது. | | 14,346,672 | | (14,346,672) | |
| மோட்டார் வாகன மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்திற்கு மாற்றப்பட்ட பிற்போடப்பட்ட வரிச்சீராக்கங்கள். | | | (923,148) | 923,148 | |
| **மொத்த முற்றடக்க வருமானங்கள்** | 200,000,010 | **237,845,824** | **97,038,490** | **1,844,717,949** | **2,379,602,273** |
| **2022 டிசம்பர் 31 அன்று உள்ளவாறான மீதி** | **200,000,010** | **237,845,824** | **97,038,490** | **1,844,717,949** | **2,379,602,273** |

கழிக்கப்பட வேண்டியவைகள் அடைப்புக்குறிகளுக்குள் காட்டப்பட்டுள்ளன.

41 முதல் 74 வரையான பக்கங்களில் உள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புகள் என்பன நிதிக்கூற்றுக்களின் ஒரு பகுதியாகும் என்பதைக் கவனத்திற் கொள்ளவும்

**சிலாபம்**
**மார்ச் 21, 2024**

## காசுப்பாய்ச்சல் கூற்று

| 31 டிசம்பர் முடிவடைந்த ஆண்டுக்கான | 2023<br>ரூபா. | 2022<br>ரூபா. |
|---|---|---|
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்தான காசுப்பாய்ச்சல்கள்** | | |
| வரிக்கு முன்னரான இலாபம் | 302,606,407 | 513,881,001 |
| **சீராக்கங்கள்:** | | |
| - பெறுமானத் தேய்வுகள் / பெறுமான இழப்புக்கள் | 64,398,037 | 55,403,094 |
| - நன்கொடைகளுக்கான பெறுமான இழப்புக்கள் | (554,766) | (260,774) |
| - நிதிச் செலவு | 61,652,953 | 43,693,022 |
| - நிதி வருமானம் | (237,386,004) | (135,874,424) |
| - திட்டவட்டமான பயன்திட்டச் செலவுகளுக்கான ஏற்பாடுகள் | 17,718,645 | 16,194,064 |
| - ஆதனம், பொறி, உபகரண அகற்றல் மூலமான இலாபங்கள் | (18,280) | |
| - நுகரத்தக்க உயிரியல் ஆதனங்களின் பெறுகை∴(இழப்பு) | (10,145,544) | (15,025,382) |
| - அரிமரங்களின் அகற்றல் மூலமான இலாபங்கள் | (13,120,109) | (26,136,409) |
| - தென்னை மரங்களின் அகற்றல் மூலமான இலாபங்கள் | (23,143,644) | (33,353,764) |
| - ஊழியர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கான ஊக்கக்கொடுப்பனவு ஒதுக்கீடு | 42,495,327 | 93,000,000 |
| - மூலதன சொத்துக்களுக்கான சேத இழப்பு கொடுப்பனவு | 3,657,715 | - |
| - WIP கொண்டு செல்லல் மற்றும் ஏனைய சீராக்கங்கள் | 298,023 | 1,092,564 |
| | 208,458,759 | 512,612,991 |
| **மாற்றங்கள்** | | |
| - கையிருப்புக்கள் | 46,353,395 | (36,112,540) |
| - பால் உற்பத்திக் கால்நடைகள் | 234,285 | (10,877,300) |
| - வியாபார மற்றும் ஏனைய வருமதிகள் | (1,711,944) | (114,360) |
| - ஏனைய நடைமுறை சொத்துக்கள் | (89,885) | (444,690) |
| - வியாபார மற்றும் ஏனைய சென்மதிகள் | 7,751,553 | (12,212,675) |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகள் மூலம் உருவான காசு** | 260,996,163 | 452,851,425 |
| - அரசாங்க குத்தகைகளுக்காக செலுத்தப்பட்ட வட்டி | (48,773,567) | (41,830,254) |
| - விசேட பயன்திட்டக் கிரயங்களின் கொடுப்பனவு | (16,766,357) | (6,551,448) |
| - செலுத்தப்பட்ட நிதிச் செலவுகள் | (50,728) | (106,118) |
| - கிடைக்கப்பெற்ற நிதி வருமானங்கள் | 216,189,231 | 96,309,432 |
| - வருமான வரிக் கொடுப்பனவுகள் | (34,602,322) | (5,123,325) |
| - ஊழியர்கள், தொழிலாளர்களுக்கான ஊக்கத்தொகை | (93,000,000) | (92,985,110) |
| - பெருமதியான மர விற்பனை மூலம் கிடைக்கப்பெற்ற வருமானம் | 27,837,885 | 29,086,906 |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகள் மூலமான தேறிய காசு** | 311,830,306 | 431,651,508 |
| **முதலீட்டு நடவடிக்கைகள் மூலமான காசுப்பாய்ச்சல்** | | |
| - ஆதனம், பொறி மற்றும் உபகரண சேர்த்தல்கள் | (45,509,472) | (70,827,576) |
| - துறைசார் அபிவிருத்திச் செலவு | (69,376,432) | (54,549,180) |
| - தென்னை மர விற்பனை மூலமான வருமானம் | 23,143,644 | 33,353,764 |
| - ஊழியர் கடன் வழங்கள் | (9,381,800) | (14,619,000) |
| - ஊழியர் கடன் மீளப்பெறல்கள் | 8,500,922 | 6,139,543 |
| - குறுங்கால முதலீடுகள் | (15,144,708) | (101,245,101) |
| - ஆதனம், பொறி, உபகரண அகற்றல்கள் மூலம் கிடைக்கப்பெற்றவை | 53,291 | |
| **முதலீட்டு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்திய தேறிய காசுப்பாய்ச்சல்** | (107,714,556) | (201,747,549) |
| **நிதி நடவடிக்கைகள் மூலமான காசுப்பாய்ச்சல்** | | |
| - பங்கிலாப செலுத்தல்கள் | (130,000,000) | |
| - நிதிக் குத்தகைகளின் நிலுவை∴முற்கொடுப்பனவு மற்றும் மூலதன மீளச்செலுத்தல்கள் | (9,099,533) | (13,874,818) |
| - மூலதன செலவுகளுக்காக கிடைக்கப்பெற்ற நன்கொடைகள் | 867,481 | 2,807,530 |
| - ஆண்டின் போது செலுத்தப்பட்ட கடன் | - | (5,794,000) |
| **நிதி நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்பட்ட தேறிய காசுப்பாய்ச்சல்** | (138,232,052) | (16,861,288) |
| **காசு மற்றும் அதற்குச் சமனானவற்றில் ஏற்பட்ட தேறிய (அதிகரிப்புஃகுறைவு)** | 65,883,699 | 213,042,671 |
| **அ.** காசு மற்றும் அதற்குச் சமனானவற்றின் வருட ஆரம்ப மீதி | 536,595,722 | 323,553,051 |
| **ஆ.** காசு மற்றும் அதற்குச் சமனானவற்றின் வருட இறுதி மீதி | **602,479,421** | **536,595,722** |
| **குறிப்பு - அ** | | |
| காசு மற்றும் அதற்குச் சமனானவற்றின் வருட ஆரம்ப மீதி | | |
| குறுங்கால முதலீடுகள் | 469,246,687 | 306,310,537 |
| கையிலுள்ள காசு மற்றும் வங்கி மீதி | 67,349,035 | 17,242,514 |
| | **536,595,722** | **323,553,051** |
| **குறிப்பு - ஆ** | | |
| காசு மற்றும் அதற்குச் சமனானவற்றின் வருட இறுதி மீதி | | |
| குறுங்கால முதலீடுகள் | 558,684,521 | 469,246,687 |
| கையிலுள்ள காசு மற்றும் வங்கி மீதி | 43,794,899 | 67,349,035 |
| | **602,479,421** | **536,595,722** |

கழிக்கப்பட வேண்டியவைகள் அடைப்புக்குறிகளுக்குள் காட்டப்பட்டுள்ளன.

47 முதல் 86 வரையான பக்கங்களில் உள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புகள் என்பன நிதிக்கூற்றுக்களின் ஒரு பகுதியாகும் என்பதைக் கவனத்திற் கொள்ளவும்

**சிலாபம் மார்ச் 21, 2024**

## 1 கூட்டுநிறுவனத் தகவல்கள்

### 1.1 அறிக்கையிடும் நிறுவனம்

#### 1.1.1 உருவாக்கமும் சட்டக் கட்டமைப்பும்

வரையறுக்கப்பட்ட சிலாபம் பெருந்தோட்ட நிறுவனமானது 1987 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க அரச கூட்டுத்தாபனத்தாபனங்கள் அல்லது அரசுக்கு சொந்தமான தொழில் முயற்சிகளை பொதுக் கம்பனிகளாக்கும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க 1982 ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கூட்டிணைக்கப்பட்டு சட்ட நியதிப்படுத்தப்பட்ட (2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் மீளப் பதிவு செய்யப்பட்டது) ஒரு பொறுப்பு வரையறுக்கப்பட்ட நிறுவனமாகும்.

நிறுவனத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகமானது இலக்கம் 165, புத்தளம் வீதி, சிலாபம் என்னும் முகவரியில் அமைந்திருக்க, அதன் பெருந்தோட்டங்கள் சிலாபம், குருநாகல், கம்பஹா ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ளன.

#### 1.1.2 பிரதான செயற்பாடுகளும் தொழிற்பாடுகளின் தன்மையும்

தெங்குப் பயிர்ச்செய்கை, கொப்பரா உற்பத்தி மற்றும் தேங்காய், கொப்பரா விற்பனை என்பனவே இவ்வருடத்தில் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட முக்கிய செயற்பாடுகள் ஆகும்.

#### 1.1.3 தாய் நிறுவனம் மற்றும் உச்ச தாய் நிறுவனம்

நிறுவனத்தின் தாய் நிறுவனம் இலங்கை அரசாங்கமாகும

### 1.2 வெளியிடுவதற்கான அங்கீகாரம் அழிக்கபட்டுள்ள திகதி

வரையறுக்கப்பட்ட சிலாபம் பெருந்தோட்ட நிறுவனத்தின் 31 டிசம்பர் 2023 அன்று முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், 21.03.2024 அன்று பணிப்பாளர் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக வெளியிடுவதற்கு அங்கீகரிக்கப்பட்டது.

## 2 தயாரிப்பதற்கான அடிப்படை

### 2.1 இணக்கப்பாட்டுக் கூற்று

இந் நிதிக்கூற்றுக்களானவை, இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தால் வழங்கப்பட்டுள்ள இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுடனான (SLFRS/LKAS) இணக்கப்பாட்டை வலியுறுத்தும், 1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, இலங்கைக் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டம் மற்றும் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கு இணக்கமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன.

### 2.2 அளவீட்டுக்கான அடிப்படை

நிதிக் கூற்றுக்களுக்கான 04, 05, 06 ஆம் குறிப்புக்களில் விபரிக்கப்பட்டவாறு மீள்மதிப்பிடப்பட்ட JEDB/SLSPC பெருந்தோட்டங்களின் குத்தகைச் சொத்துக்கள் தவிர்ந்த அனைத்து விடயங்களிலும் இந் நிதிக்கூற்றுக்கள் வரலாற்றுக் கிரய எண்ணக்கருவுக்கு இணக்கமான அடிப்படையிலேயே தயாரிக்கப்பட்டுள்ளன. பொருத்தமான இடங்களில் விசேடமான கொள்கைகள் தொடர்ந்து வரும் குறிப்புக்களில் விளக்கப்பட்டுள்ளதுடன், நிதிக்கூற்றுக்களில் பணவீக்கக் காரணிகள் தொடர்பில் எதுவித செம்மையாக்கமும் மேற்கொள்ளப்படவில்லை.

### 2.3 தொழிற்பாட்டு மற்றும் முன்னிலைப்படுத்தல் நாணயம்

நிதிக் கூற்றுக்கள் நிறுவனத்தின் தொழிற்பாட்டு மற்றும் முன்னிலைப்படுத்தல் நாணயமான இலங்கை ரூபாய்களில் (Rs.) முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன. இலங்கை ரூபாய்களில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள அனைத்து நிதித் தகவல்களும் கிட்டிய ரூபாய்களில் வழங்கப்பட்டுள்ளன.

### 2.4 மதிப்பீடுகள் மற்றும் சுயதீர்ப்புக்களின் பயன்பாடு

SLFRS/LKAS நியமங்களுக்கு இணங்கி நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தலில், கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் சொத்துக்கள், பரிப்புக்கள், வருமானம் மற்றும் செலவினங்களின் அறிக்கையிடப்பட்ட தொகைகள் முதலியவற்றின் பிரயோகத்தின் மீது செல்வாக்கு செலுத்தக்கூடிய சுயதீர்ப்புக்கள், மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்களை முகாமைத்துவம் மேற்கொள்ளுமாறு தேவைப்படுத்தப்படுகின்றன.

மதிப்பீடுகள் மற்றும் அடிப்படை எடுகோள்கள் ஆகியன தொடர்ச்சியான முறையில் மீளாய்வுக்கு உட்படுத்தப்படுகின்றன. கணக்கீட்டு மதிப்பீடுகளுக்கான மீளாய்வானது அக் காலப்பகுதியை மாத்திரம் பாதிக்கும் எனில், அந்த மீளாய்வு மேற்கொள்ளப்பட்ட காலப்பகுதியிலும், பாதிப்புக்கு உள்ளாகும் எதிர்கால காலப்பகுதிகளுக்கும் ஏற்பிசைவு செய்யப்படும்.

### 2.5 தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு

நிறுவனத்தின் முகாமைத்தவமானது, நிறுவனத்தின் தொடர்ந்து இயங்கும் தன்மைக்கான இயலுமை தொடர்பான மதிப்பீடு ஒன்றை மேற்கொண்டுள்ளதுடன், நிறுவனம் கட்புலனாகக்கூடிய எதரிகாலத்துக்குத் தொடர்ந்து இயங்கக்கூடிய வகையில் வளங்களைக் கொண்டுள்ளதாகத் திருப்தியடைந்துள்ளது. மேலும், நிறுவனம் தொடர்ந்தியங்கும் தன்மையுடன் செயற்படுவதற்கான இயலுமை மீது கணிசமான சந்தேகங்களை ஏற்படுத்தக்கூடிய பொருண்மைத்தன்மை வாய்ந்த நிச்சயமற்றதன்மை தொடர்பான எந்த ஒரு விடயம் தொடர்பிலும் முகாமைத்துவம் அறிந்திருக்கவில்லை. ஆகவே, நிதிக்கூற்றுக்கள் தொடர்ச்சியான முறையில் தொடர்ந்தியங்கும் தன்மையின் அடிப்படையில் தயாரிக்கப்படும்.

### 2.6 ஒப்பீட்டுத் தகவல்கள்

கணக்கீட்டுக் கொள்கைகள் நிறுவனத்தினால் தொடர்ச்சியான முறையில் பிரயோகிக்கப் பட்டுள்ளதுடன், பிரத்தியேகமாகக் குறிப்பிடப்பட்டு அவசியமான இடங்களில் நடைமுறை ஆண்டின் தொகைகளுக்கு இணங்கும் வகையில் முன்னைய ஆண்டுகளின் தொகைகள் மற்றும் சொற்றொடர்கள் மீள ஒழுங்கமைக்கப்படாதவிடத்து, அக் கொள்கைகள் முன்னயை வருடங்களில் பயன்படுத்தப்பட்ட கொள்கைகளுக்கு நிலைமாறாது காணப்படுகின்றன.

### 2.7 அறிக்கையிடல் திகதிக்குப் பின்னான நிகழ்வுகள்

அறிக்கையில் திகதிக்குப் பின்னர் நிகழும் அனைத்துப் பொருண்மைத்தன்மை வாய்ந்த நிகழ்வுகளும் கருத்தில் கொள்ளப்பட்டு, பொருத்தமான இடங்களில் சீராக்கங்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் நிதிக் கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 3 குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகளின் சுருக்கம்

### 3.1 சொத்துக்கள் மற்றும் அவற்றின் மதிப்பீட்டின் அடிப்படைகள்

நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைச் சொத்துக்களாக வகைப்படுத்தப்பட்டுள்ள சொத்துக்களானவை காசு மற்றும் அறிக்கையிடல் திகதியில் இருந்து ஒரு வருட காலம் அல்லது நிறுவனத்தின் சாதாரண தொழிற்பாட்டு சுற்றோட்டம் ஆகியவற்றில் குறைவான காலப்பகுதியினுள் காசாகத் தேறச் செய்யப்படத்தக்க சொத்துக்களாகும். நடைமுறை சொத்துக்கள் தவிர்ந்த சொத்துக்களானவை, நிறுவனம் அறிக்கையிடல் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்கு மேற்பட்ட காலத்துக்கு வைத்திருக்க எதிர்பார்க்கும் சொத்துக்களாகும்.

### 3.1.1 ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

#### 3.1.1.1 ஏற்பிசைவு மற்றும் அளவீடு

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் போன்று சொத்துக்களுடன் தொடர்புடைய, எதிர்கால பொருளாதார நன்மைகள் நிறுவனத்துக்குள் உற்பாய்ச்சப்படும் நிகழ்தகவு இருக்குமாயின் கண்டுகொள்ளப்பட்டு, சொத்துக்களின் கிரயங்கள் நம்பகத்தன்மையுடன் அளவிடப்படும்.

ஆதனம், பொறி மற்றும் உபகரண உருப்படிகளானவை அவற்றின் கிரயத்தில் (அல்லது வெற்றுக் காணியின் குத்தகை உரிமை எனின், மதிப்பீட்டுப் பெறுமதியில்) திரண்ட பெறுமானத் தேய்வுகள் மற்றும் திரண்ட சேத இழப்பு நட்டங்கள் எவையேனுமிருப்பின், கழிக்கப்பட்ட பெறுமதியில் அளவிடப்படும்.

**(அ) சொந்த சொத்துக்கள்**

சொத்தொன்றின் கொள்வனவுடன் நேரடியாக இணைக்கக் கூடியதாக இருக்கின்ற செலவீனங்களை ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கிரயம் உள்ளடக்குகின்றது. சுயமாக நிர்மாணிக்கப்பட்ட சொத்துக்களின் கிரயம் மூலப்பொருட் கிரயம் மற்றும் நேர் ஊழியம் மற்றும் அச் சொத்திலிருந்து எதிர்பார்த்த பயன்பாட்டுக்காக அச்சொத்தை செயற்படும் நிலைமைக்கு கொண்டு வருவதற்காக இணைப்புச் செய்யக் கூடிய ஏதேனும் செலவுகள் என்பவற்றை உள்ளடக்குகின்றது. தொடர்புடைய உபகரணத்தின் தொழிற்பாட்டுடன் தொடர்புடையதாக இருக்கின்ற கொள்வனவு செய்யப்பட்ட மென்பொருள் உபகரணத்தின் ஒரு பகுதியாக மூலதனமாக்கப்படுகின்றது.

உரிய கால எல்லையில் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் முக்கியமான பகுதிகள் மீளமைப்புச் செய்யப்பட வேண்டி இருக்கின்ற போது, அவ்வாறான சொத்துக்களை குறிப்பிட்ட பயன்படு ஆயுட்காலம் மற்றும் பெருமானத் தேய்வுடன் நிருவனம் தனித்துவமான சொத்துக்களாக அங்கிகரிக்கின்றது. அவ்வாறே, பாரிய மேற்பார்வையொன்று மேற்கொள்ளப்படுகின்ற போது, அங்கிரிப்புக்கான பிரமானங்கள் திருப்திப்படுத்தப்படுமாயின் பிரதி வைப்பொன்றாக பொறி மற்றும் உபகரணத்தின் முன்கொண்டு செல்லும் தொகையாக அதன் கிரயம் அங்கிகரிக்கப்படுகின்றது. ஏற்பட்ட செலவாக விபரமான வருமான கூற்றில் சகல பிற திருத்த மற்றும் பராமரிப்புச் செலவீனங்கள் அங்கிகரிக்கப்படுகின்றன.

மூலதன குறைவேலையானது முதல் பயன்பாட்டின் போது அல்லது சொத்து தொழிற்படத் தொடங்குகின்ற நேரத்தில் உரிய சொத்துக் கணக்குகளுக்கு மாற்றப்படுகின்றன.

முன்கொண்டு செல்லப்படுகின்ற பெறுமதியை மீட்டுக் கொள்ள முடியாத அவ்வாறான நிகழ்வுகள் அல்லது மாற்றங்கள் தொடர்பான சூழ்நிலைகளை வெளிப்படுத்தும்போது சொத்து இழப்பு தொடர்பாக ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் முன்கொண்டு செல்லும் பெறுமதி மீளாய்வு செய்யப்படுகின்றன.

மோட்டார் வாகனங்கள் தொடர்ச்சியாக மீள் மதிப்பீடு செய்யப்படுகின்ற போது. 2020 திசம்பர் 31 ஆம் திகதிய மீள் மதிப்பீட்டு திகதியில் நியாயமான விலையில் முழுமையான சொத்து வகைகள் மீள் மதிப்பீடு செய்யப்படுகின்றன.

ஏனைய விபரமான வருமானம் மற்றும் சொத்து மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்தில் உரிமையாண்மையுடன் ஏதேனும் மீள்மதிப்பீட்டு மிகை அங்கிகரிக்கப்படுகின்ற போது, வருமானக் கூற்றில் ஏற்கனவே அங்கிகரிக்கபட்டிருக்கின்ற அதே சொத்தின் மீள் மதிப்பீட்டு குறைவு ஒன்றை அது திருப்புகின்ற நிலைமையுடன் தவிர்த்து, வருமானக் கூற்றில் அதிகரிப்பு அங்கிகரிக்கப்படுகின்றது. சொத்து மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்தில் அதே சொத்து அங்கிகரிக்கப்பட்டுள்ள சொத்து மீதான நிலவும் மிகையொன்று அதனை சமநிலைப்படுத்துகின்றவை தவிர்த்து வருமானக் கூற்றில் மீள்மதிப்பீட்டு குறைவொன்று அங்கிகரிக்கப்படுகின்றது.

சொத்தின் மொத்த முன்கொண்டு செல்லும் பெறுமதிக்கு எதிராக மீள் மதிப்பீட்டுத் திகதியில் உள்ளவாறான திரண்ட பெறுமானத் தேய்வு நீக்கப்படுவதுடன் சொத்தின் மீள் மதிப்பீடு செய்யப்பட்ட சொத்துடன் நிகர பெறுமதி மீள குறிப்பிடப்படும். விற்பனையின் போது, விற்கப்படுகின்ற குறிப்பிட்ட சொத்தொன்றுடன் தொடர்புடைய ஏதேனும் மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் நிறுத்தி வைத்த உழைப்புக்கள் ஒதுக்கத்திற்கு மாற்றப்படுகின்றது.

அரசு மதிப்பீட்டு திணைக்களத்தின் மதிப்பீட்டு அறிக்கையின்படி, 2020 டிசம்பர் 31 ஆம் திகதி அன்றுக்கான மோட்டார் வாகனங்களின் மீள்மதிப்பீட்டு பெறுமதிகள் கீழ்வருமாறு.

| விடயம் | 31.12.2020 அன்று தேறிய கொண்டு செல்லப்படும் பெறுமதி | 31.12.2020 அன்று மீள்மதிப்பிடப்பட்ட பெறுமதி | மீள்மதிப்பீட்டு ஒதுக்குகள் ரூபா. |
|---|---|---|---|
| மோட்டார் வாகனங்கள் (மீள்மதிப்பிடப்பட்ட) | 4,987,021.00 | 103,875,000.00 | 98,887,979.00 |

மீள்மதிப்பீடு செய்யப்பட்ட மேற்குறிப்பிடப்பட்ட சொத்துக்களின் 31.12.2023 அன்றுக்கான திரண்ட பெறுமதி நிதிக்கூற்றுக்களில் குறிப்பு இல. 8 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் கீழ்காணப்படும் வாகனங்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட தினத்தில் வாகன திருத்து வேலைகளுக்காக வைக்கப்பட்டிருந்ததனால் மீள்மதிப்பீட்டு திணைக்களம் அவற்றை மீள்மதிப்பீடு செய்யவில்லை. ஆகவே அவ்வாகனங்கள் 2020 டிசம்பர் 31 அன்று குறைந்த திரண்ட பெறுமானத்தேற்வு முறைக்கமைய அளவீடு செய்யப்பட்டுள்ளது.

**கிரயப் பெறுமதியில் இருந்து மொத்த பெறுமானத்தேய்வு கழிக்கப்பட்ட பின்னரான மோட்டார் வாகனங்களின் தகவல்கள் கீழ்வருமாறு**

| வாகன இலக்கம் | வகை | கிரயம் (ரூபா.) | திரண்ட தேய்மானம் | 31.12.2020 அன்று தேறிய புத்தக பெறுமதி |
|---|---|---|---|---|
| Sri 6018 | கை டிராக்டர் | 41,500.00 | 41,499.00 | 1/= |
| NW SC 1607 | கை டிராக்டர் | 104,000.00 | 103,999.00 | 1/= |
| 36 Sri 5418 | டிராக்டர் | 1,661,995.70 | 1,304,777.00 | 357,218.70 |
| 36 Sri 3033 | டிராக்டர் | 467,739.46 | 467,737.46 | 2/= |
| NWRV 0245 | டிராக்டர் டிரைலர் | 152,375.00 | 152,374.00 | 1/= |
| NW UZ 3922 | மோட்டார் வண்டி | 148,925.00 | 148,924.00 | 1/= |
| NW UZ 3655 | மோட்டார் வண்டி | 148,925.00 | 148,924.00 | 1/= |

**(ஆ) குத்தகை சொத்துக்கள்**

நிதிக்குத்தகையின் கீழ் பெறப்பட்ட சொத்துக்கள் (குத்தகைக்கு பெறப்பட்ட சொத்துக்களின் உரிமைக்குக் கிடைக்கத்தக்க கணிசமான பயன்களை பயனுறுதி மிக்க வகையில் மாற்றம் செய்யும்) அவற்றின் சீர்மதிப்பு (நியாயமான பெறுமதி) மற்றும் ஆகக் குறைந்த குத்தகைக் கட்டணங்களின் இற்றைப் பெறுமதி (தற்போதைய பெறுமதி) ஆகியவற்றில் குறைந்த பெறுமதிக்கு சமமாக மூலதனமாக்கல் செய்யப்பட்டு, நிறுவனம் அச்சொத்துக்களை பயன்படுத்துவதற்கு உத்தேசித்திருக்கும் காலப்பகுதி முழுவதிலும் பெறுமானத் தேய்வு அல்லது காலத் தேய்மானம் செய்யப்படும்.

இது தொடர்பில் குத்தகைக்காரருக்குச் செலுத்த வேண்டிய மூலதன (அசல்) பெறுமதியானது ஒரு பரிப்பாகக் காட்டப்பட்டுள்ளது. ஒவ்வொரு நிதியாண்டுக்குமான குத்தகைக் கடப்பாட்டின் வட்டிப் பாகம் குத்தகை முடிவு வரைக்கும், ஒவ்வொரு காலப்பகுதிக்கும் மீதமாகவுள்ள கடப்பாட்டின் நிலுவையில் ஒரு நிலையான கால வீதத்தை ஏற்படத்தக்கூடிய வகையில் அந்தந்த ஆண்டுகளுக்கான முற்றடக்க வருமானக் கூற்றில் பதியப்படும்.

குத்தகை ஆதனங்களின் மீதான விருத்திகளுக்கான கிரயமானது மூலதனமாக்கப்பட்டு, எஞ்சிய குத்தகைக் காலம் அல்லது விருத்திகளின் மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயுட் காலம் ஆகிய இரண்டில் குறைந்த காலப்பகுதிக்கு பெறுமானத் தேய்விடப்படும்.

**3.1.1.2 பிற்பட்ட கிரயங்கள்**

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பாகங்களை மாற்றீடு செய்யும் கிரயமானது, அப்பாகத்துடன் தொடர்புபட்ட எதிர்கால பொருளாதாரப் பயன்கள் நிறுவனத்திற்கு கிடைப்பதற்கான நிகழ்தகவு காணப்பட்டு, அதன் கிரயம் நம்பகமாக அளவிடத்தக்கதாககவும் காணப்படுமாயின், குறித்த ஆதனம், பொறி மற்றும் உபகரண உருப்படியின் கொண்டுசெல்லல் பெறுமதியில் ஏற்பிசைவு செய்யப்படும். மாற்றீடு செய்யப்பட்டு அகற்றப்பட்ட பாகங்கள் கீழே தரப்பட்டுள்ள ஏற்பிசைவு நீக்கல் கொள்கைக்கு இணங்க ஏற்பிசைவு நீக்கப்படும். ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் நாளாந்த பராமரிப்புக் கிரயங்கள் அவை ஏற்படும் போதே இலாபம் அல்லது நட்டத்தில் ஏற்பிசைவு செய்யப்படும்.

**3.1.1.3 ஏற்பிசைவு நீக்கல்**

ஆதனம், பொறி மற்றும் உபகரண உருப்படி ஒன்றின் கொண்டு செல்லும் பெறுமதியானது அது அகற்றப்படும் போது அல்லது அதன் பயன்பாடு அல்லது அகற்றல் மூலம் எதிர்காலப் பொருளாதாரப் பயன்கள் எதுவும் இருக்காது என எதிர்பார்க்கப்படும் போது அது ஏற்பிசைவு நீக்கப்படும். ஏற்பிசைவு நீக்கல் காரணமாக கிடைக்கும் நயங்கள் அல்லது நட்டங்கள் இலாபநட்டங்களில் ஏற்பிசைவு செய்யப்படுவதுடன், அதன் நயங்கள் வருமானமாக வகைப்படுத்தப்பட மாட்டாது.

**3.1.1.4 பெறுமானத் தேய்வு மற்றும் காலத் தேய்மானம்**

**(அ) பெறுமானத் தேய்வு**

பெறுமானத் தேய்வானது ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பாகங்களின் மதிப்பிடப்பட்ட பொருளாதார பயன்தரு ஆயுட்காலம் முழுவதும் நேர்கோட்டு முறையின் அடிப்படையில் முற்றடக்க வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படும். தற்போதைய மற்றும் ஒப்பீட்டுக் காலங்களுக்கான மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயுட்காலம் பின்வருமாறு:

| | வருடங்கள் | வீதம் (%) |
|---|---|---|
| கட்டடங்கள் | 40 | 2.50 |
| பொறி மற்றும் உபகரணம் | 15 | 6.67 |
| தளபாடம் மற்றும் பொருத்துகள் | 10 | 10.00 |
| மோட்டார் வாகனங்கள் | 05 | 20.00 |
| உபகரணங்கள் | 08 | 12.50 |
| நிரந்தர காணி அபிவிருத்தி | 30 | 3.33 |
| வேலி அமைத்தல் | 03 | 33.33 |
| நீர் வழங்கல் | 20 | 5.00 |

ஏதேனும் ஒரு சொத்தின் பெறுமானத் தேய்வானது அது பயன்பாட்டுக்குத் தயாராக உள்ளபோது ஆரம்பிப்பதுடன், அச்சொத்து விற்பனைக்காக வைத்திருக்கப்படும் சொத்தாக வகைப்படுத்தப்படும் போது அல்லது ஏற்பிசைவு நீக்கப்படும் போது பெறுமானத் தேய்வு நிறுத்தப்படும். பெறுமானத் தேய்வு முறை, பயன்தரு ஆயுட்காலம் மற்றும் எச்சப் பெறுமதி ஆகியன அறிக்கையிடும் திகதியில் மீள மதிப்பிடப்பட்டுள்ளதுடன், தேவையேற்படுமிடத்து, பிற்கால விளைவுள்ள வகையில் சீராக்கப்பட்டுள்ளன. JEDB/SLSPC இடமிருந்து கைப்பற்றப்பட்ட நிலத்தின் குத்தகை காலம் 2045 ஆம் ஆண்டில் நிறைவடையும்.

**(ஆ) காலத் தேய்மானம்**

குத்தகைக் காலத்தின் இறுதியில் நிறுவனம் சொத்தின் உரிமையைப் பெற்றுக் கொள்ளும் என்பது நியாயமான அளவில் உறுதிவாய்ந்ததாக இல்லாதவிடத்து, நிதிக் குத்தகையின் கீழ் உள்ள சொத்துக்கள் குத்தகைக் காலம் அல்லது அவற்றையொத்த உரிமை கொள்ளப்பட்டுள்ள சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் ஆகிய இரண்டில் குறைவான காலப்பகுதிக்கு காலத்தேய்வு செய்யப்படும். JEDB/SLSPC இடமிருந்து கையகப்படுத்தப்பட்ட காணிகளின் குத்தகைக் காலமானது 2045 இல் முடிவடையும்.

JEDB/SLSPC இடமிருந்து கையகப்படுத்தப்பட்ட சொத்துக்களுக்கான குத்தகை உரிமையானது எஞ்சியுள்ள குத்தகை காலம் மற்றும் பயன்தரு ஆயுட்காலம் ஆகியவற்றில் குறைவான காலப்பகுதிக்கு சமமான தொகைகளில் காலத்தேய்வு செய்யப்படுவதுடன், தற்போதைய மற்றும் ஒப்பீட்டுக் காலங்களுக்கான மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயுட்காலம் பின்வருமாறு:

JEDB/SLSPC இடமிருந்து கைப்பற்றப்பட்ட சொத்துக்களுக்கான குத்தகை உரிமையானது எஞ்சியுள்ள குத்தகை காலம் மற்றும் பயன்தரு ஆயுட்காலம் ஆகியவற்றில் குறைவான காலப்பகுதிக்கு சமமான தொகைகளில் காலத்தேய்வு செய்யப்படுவதுடன், தற்போதைய மற்றும் ஒப்பீட்டுக் காலங்களுக்கான மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயுட்காலம் பின்வருமாறு:

| | **வருடங்கள்** | **வீதம் (%)** |
|---|---|---|
| வெற்றுக் காணிகளின் குத்தகை உரிமை | 53 | 1.89 |
| காணி அபிவிருத்தி | 30 | 3.33 |
| ஏனைய உரிமையளிக்கப்பட்ட சொத்துக்கள் | 30 | 3.33 |
| கட்டடங்கள் | 25 | 4.00 |
| இயந்திரங்கள் | 15 | 6.67 |
| நீர் வழங்கல் | 20 | 5.00 |

### 3.1.2 உயிரியல் சொத்துக்கள்

#### 3.1.2.1 முதிர்வுற்ற மற்றும் முதிர்வுறாத பயிர்ச்செய்கை

**(அ) அசையா, குத்தகை உயிரியல் சொத்துக்கள் (முதிர்வுற்ற/முதிர்வுறாத பயிர்ச்செய்கை)**

பெருந்தோட்டங்களின் தனியார் மயமாக்கல் காலப்பகுதியில் காணப்பட்ட, இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தின் அவசிய விடய செயற்பாட்டுக் குழுவின் (UITF) விதிமுறைகளுக்கு இணங்க, JEDB/SLSPC பெருந்தோட்டங்களில் நிதிக்குத்தகையில் காணப்பட்ட அசையாத, குத்தகை கொண்ட உயிரியல் சொத்துக்கள் 1992 ஆம் ஆண்டு ஜுன் 11 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வரத்தக்கவாறு முன்விளைவுள்ள வகையில் நிறுவனத்தின் ஏடுகளில் பதியப்பட்டது.

அசையாத, குத்தகை கொண்ட உயிரியல் சொத்துக்களின் காலத்தேய்வானது சொத்துக்களின் மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயுட்காலத்துக்கு நேர்கோட்டு முறையில் முற்றடக்க வருமானக் கூற்றுக்களில் ஏற்பிசைவு செய்யப்படுவதுடன், தற்போதைய மற்றும் ஒப்பீட்டுக் காலங்களுக்கான மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயுட்காலம் பின்வருமாறு:

| | **ஆண்டுகளின் எண்ணிக்கை** | **வீதம் (%)** |
|---|---|---|
| முதிர்வுற்ற பயிர்ச்செய்கை | 30 | 3.33 |

**(ஆ) குத்தகை சொத்துக்களின் விருத்தி (முதிர்வுற்ற/முதிர்வுறாத பயிர்ச்செய்கை)**

பயிர் நடுகை மற்றும் அறுவடை (பயிரிடப்பட்ட பயிர்கள் 8 வருடங்களுக்குப் பின்னர் முதிர்வுறும்) ஆகியவற்றுக்கு இடையில் இடம்பெறும் நிலத் தயார்ப்படுத்தல், புதிய பயிர் விதைத்தல், மீள்விதைத்தல், ஊடுபயிரிடல் மற்றும் உரமிடல் முதலியவற்றுக்கான கிரயமானது முதிர்வுறாத பயிர்ச்செய்கையின் வகைப்படுத்தப்படும். முதிர்வுறாத பயிர்ச்செய்கை நேர்க் கிரயங்களுடன் சுமத்தப்படத்தக்க மேந்தலைச் செலவுகள் கூட்டப்பட்ட பெறுமதியில் காட்டப்பட்டுள்ளன. ஆண்டுக்காலத்தில் கொண்டுசெல்கைகளினுள் உள்ளடக்கப்படும் கொண்டுசெல்லும் உயிரியல் சொத்துக்களின் மீது ஏற்பட்ட செலவினங்கள் (அதாவது: தேங்காய்) முதிர்வுற்ற பயிர்ச் செய்கைக்கு மாற்றப்படும்.

குத்தகை ஆதனங்களின் மீதான விருத்திகளுக்கான தேய்மானமானது, மீதமுள்ள குத்தகை காலம் அல்லது அவ்விருத்திகளின் பயன்தரு ஆயட்காலம் ஆகியவற்றில் குறைவான காலப்பகுதியில் நேர்கோட்டு முறையில் மேற்கொள்ளப்படும்.

நடப்பாண்டில் முதிர்வுற்ற பயிர்ச்செய்கைகளுக்கு மாற்றுவதற்காக வைக்கப்பட்டுள்ள முதிர்வுறாத பயிர்களுக்காக மேற்கொள்ளப்பட்ட கிரயங்கள்(செலவுகள்), ஆண்டிறுதியில் முதிர்வுற்ற பயிர்ச்செய்கைக்கு மாற்றப்பட்டு கீழ்காணுமாறு அவற்றின் பயன்தரு ஆயட்காலங்களுக்கு இணங்க பெறுமானத்தேய்வு அடைகின்றது.

தற்போதைய மற்றும் ஒப்பீட்டுக் காலங்களுக்கான மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயுட்காலம் பின்வருமாறு:

**(பயன்தரு ஆயுட்காலம் முதிர்வுறாத காலப்பகுதிக்கு பின்னர் கணிக்கப்பட்டுள்ளது.)**

| | **முதிர்வுறாத காலப்பகுதி (ஆண்டுகளின் எண்ணிக்கை)** | **ஆயட்காலம் (ஆண்டுகளின் எண்ணிக்கை)** | **பெறுமானத் தேய்வு வீதம் (%)** |
|---|---|---|---|
| தென்னை | 08 | 50 | 2.00 |
| மரமுந்திரிகை | 08 | 25 | 4.00 |
| ட்ராகன் பழம் | 03 | 20 | 5.00 |
| கருவா | 04 | 20 | 5.00 |
| முளகு | 06 | 20 | 5.00 |
| ரம்புட்டான் | 06 | 20 | 5.00 |
| மாங்காய் | 05 | 20 | 5.00 |

**(இ) நுகரத்தக்க உயிரியல் சொத்துக்கள்**

நுகரத்தக்க பலகை மரங்கள் ஆரம்ப ஏற்பிசைவில் அளவிடப்படுவதுடன், ஒவ்வொரு அறிக்கையிடல் காலப் பகுதியின் முடிவிலும் LKAS 41 நியமத்தின் அடிப்படையில் அவற்றின் சீர்மதிப்பில் விற்பனைக்கான செலவினங்கள் கழித்த பெறுமதியில் அளவிடப்படும். இளம் பயிர்களின் சீர்மதிப்பு இக் காலகட்டத்தில் விலை மீது கொண்டிருக்கக் கூடிய தாக்கம் பொருண்மைத் தன்மையற்றதாகக் காணப்படுவதால் கிரயமானது இளம் பயிர்களின் சீர்மதிப்பின் அண்மித்த பெறுமதியாகக் கொள்ளப்படும். பலகை மரங்களின் சீர்மதிப்பானது, பலகைகளின் நடைமுறை சந்தை விலையைக் கருத்தில் கொண்டு கழிவிட்ட காசுப் பாய்ச்சல் முறையை முதிர்விலான மரம் ஒன்றின் எதிர்பார்க்கப்பட்ட பலகை உள்ளீடுகளுக்குப் பிரயோகித்து, சுயாதீன மதிப்பீட்டாளரினால் அளவிடப்படுள்ளது.

நுகரத்தக்க உயிரியல் சொத்துக்களின் சீர்மதிப்பில் விற்பனைக்கான கிரயங்கள் கழிக்கப்பட்ட பெறுமதியிலான ஆரம்ப ஏற்பிசைவில் மற்றும் நுகரத்தக்க உயிரியல் சொத்துக்களின் சீர்மதிப்பில் விற்பனைக்கான கிரயங்கள் கழிக்கப்பட்ட பெறுமதி முறையிலிருந்தான மாற்றங்கள் காரணமாக ஏற்படும் நயங்கள் அல்லது நட்டங்கள் அவை ஏற்பட்ட காலப்பகுதிக்கான இலாப நட்டங்களில் உள்ளடக்கப்படுவதுடன், ஏனைய எடுகோள்கள் யாவும் குறிப்பு 7.2 இல் தரப்பட்டுள்ளன.

கழிவிட்ட காசுப்பாய்ச்சல் முறை கவனத்தில் கொள்ளும் முக்கிய மாறிகள் பின்வருமாறு:

| மாறி | கருத்து |
|---|---|
| நாணய மதிப்பீடு | இலங்கை ரூபாய் (Rs.) |
| மர உள்ளடக்கம் | வேறுபட்ட புவியியல் பிராந்தியங்களில் வளரும் ஒவ்வொரு பயிர்களினதும் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு, மரத்தின் தடிப்பு மற்றும் உயரம் ஆகியவற்றின் அடிப்படையில் மதிப்பிடப்பட்டது.<br><br>இது மரங்களின் அறுவடை தொடர்பான, நிறுவனத்தின் வனவியல் திட்டத்துடன் இணைந்த, நடைமுறையிலுள்ள அனைத்து சட்டரீதியான விதிமுறைகளையும் கவனத்தில் எடுத்தள்ளது. |
| பொருளாதார பயன்தரு ஆயட்காலம் | ஒவ்வொரு பயிர் வகையினதும் சாதாரண வாழ்க்கைப் பரப்பின் அடிப்படையில், நிறுவனத்தின் வனவியல் திட்டத்துடன் இ ை ண ந ் த த ா க மதிப்பிடப்பட்டுள்ளது. |
| விற்பனை விலை | இலங்கையின் தற்போதைய சந்தை விலையின் அடிப்படையில் மதிப்பிடப்பட்டுள்ளது. மரங்களை விற்கத்தகு நிலைமைக்குக் கொண்டு வருவதற்கான அனைத்து நிபந்தனைகளையும் கருத்தில் கொண்டதாகும். |
| கழிவு வீதம் | எதிர்காலக் காசுப் பாய்ச்சல்கள் பின்வரும் வீதங்களில் கழிவிடப்பட்டுள்ளன. |

- 5 அல்லது அதற்கு கீழ் அறுவடை வயது 16%
- 6 தொடக்கம் 15 வருடங்கள் அறுவடை வயது 17%
- 15 அல்லது அதற்கு மேல் அறுவடை வயது 18%

#### 3.1.2.2 பால் உற்பத்திக் கால்நடைகள்

பாலுற்பத்திக் கால்நடைகள் அவற்றின் சீர்மதிப்பில் விற்பனைக்கான கிரயங்கள் கழிக்கப்பட்ட பெறுமதியில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன. பாலுற்பத்திக் கால்நடைகளின் சீர்மதிப்பானது தேசிய கால்நடை அபிவிருத்தி சபையினால் வெளியிடப்பட்டுள்ள சுற்று நிருபத்திற்கு அமைவாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளன.

### 3.1.3 விற்பனைக்காக வைத்திருக்கப்படும் நடைமுறையல்லா சொத்துக்கள்

பாவனைக்காக அல்லாது விற்பனை மூலம் மீளப்பெற எதிர்பார்த்து வைத்திருக்கப்படும் நடைமுறையல்லாச் சொத்துக்கள், விற்பனைக்காக வைத்திருக்கப்படும் நடைமுறையல்லாச் சொத்துக்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. விற்பனைக்காக வைத்திருக்கப்படுவதாக வகைப்படுத்தப்பட முன்னர் இச் சொத்துக்கள் அவற்றின் கொண்டு செல்லல் பெறுமதி அல்லது சீர்மதிப்பில் விற்பனைக்கான கிரயங்கள் கழிக்கப்பட்ட பெறுமதி ஆகியவற்றில் குறைந்த பெறுமதியில் அளவிடப்பட்டிருந்தன. விற்பனை அதிகளவு நிகழ்தகவு இருந்து, தற்போதைய நிலைமையில் சொத்து உடனடியாக விற்பனை செய்வதற்குத் தயாராக இருப்பின் மாத்திரமே நடைமுறையல்லாச் சொத்துக்கள் விற்பனைக்காக வைத்திருக்கப்படுவதாக வகைப்படுத்தப்படும்.

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் விற்பனைக்காக வைத்திருக்கப்படுவதாக வகைப்படுத்தப்பட்டால், அவை பெறுமானத்தேய்வு அல்லது காலத்தேய்வு செய்யப்பட மாட்டாது.

### 3.1.4 இருப்புக்கள்

இருப்புக்களானவை, காலங்கடந்த மற்றும் மெதுவாக நகரும் இருப்புக்களுக்கான பொருத்தமான கழிப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டு, கிரயம் அல்லது மதிப்பிடப்பட்ட தேறத்தக்க நிகர பெறுமதி ஆகியவற்றில் குறைந்த பெறுமதியில் அளவிடப்படும். தேறத்தக்க நிகர பெறுமதி இருப்புக்களை அவற்றின் தற்போதுள்ள நிலைமையில் இருந்து தேறச் செய்வதற்கான அல்லது நிலைமாற்றுவதற்கான கிரயங்கள் கழிக்கப்பட்ட பின்னரான, சாதாரண வணிக நிலைமைகளில் இருப்புக்களை விற்பனை செய்யத்தக்க பெறுமதி ஆகும்.

இறுப்புக்களை தற்போதை நிலைக்கு கொண்டுவருவதற்காக மேற்கொள்ளப்பட்ட கிரயங்கள் கீழ்காணும் சூத்திரங்களுக்கு அமைய கணிப்பிடப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| **நுகர்வுக்கான மற்றும் உதிரி உள்ளீட்டு பொருட்கள்** | உண்மையான கிரயத்தில் FIFO அடிப்படையில் |
| **வளரும் பயிர்கள் - நாற்றுக்கள்** | நேர் மூலப்பொருள், நேர் ஊழியம் மற்றும் நேரடியாக ஒதுக்கீடு செய்யப்படத்தக்க மேந்தலைகளின் கிரயம் ஆகியவற்றில் |
| **அறுவடைசெய்யப்பட்ட பயிர்கள்** | உயிரியல் சொத்துக்களினால் இருந்த அறுவடை செய்யப்பட்ட விவசாய உற்பத்திகள் சீர்மதிப்பில் இருந்து அறுவடை செய்யப்பட்ட இடத்திலேயே விற்பனை செய்வதற்கான செலவுகள் கழிக்கப்பட்ட பெறுமதியில் அளவீடு செய்யப்படும்.<br><br>பூரணமாக அல்லது பகுதியாக நிறைவு செய்யப்பட்ட விவசாய உற்பத்திகள் அவற்றுக்கான நிலைமாற்றல் கிரயத்தினை சீர்மதிப்புடன் சேர்த்த பெறுமதியில் அளவீடு செய்யப்படும். |
| **கால்நடைகள்** | பால்தரும் கால்நடைகள் அவற்றின் சீர்மதிப்பிலிருந்து விற்பனைக்கான கிரயங்கள் கழிக்கப்பட்ட பெறுமதியில் அளவீடு செய்யப்படும். கால்நடைகள் அவற்றின் சீர்மதிப்பானது தேசிய கால்நடை அபிவிருத்தி சபையினால் வெளியிடப்பட்ட சுற்றுநிருபத்திற்கு அமைய தீர்மானிக்கப்படும். |

**3.1.4.1 உயிரியல் சொத்துக்கள் மீது வளர்க்கப்படுகின்ற அறுவடை செய்யக் கூடிய விவசாய உற்பத்தி**

இலங்கை கணக்கீட்டு நியம் 41 இற்கு ஏற்ப, விற்பனைக் கிரயத்தைக் கழித்து நியாயப் பெறுமதியில் சுமக்கும் தாவரங்களின் விவசாய உற்பத்தியை கம்பனி அங்கிகரிக்கின்றது. ஒவ்வொரு அறிக்கையிடும் கால முடிவில் இலாபம் அல்லது நட்டத்துடன் அவ்வாறான விவசாய உற்பத்திகளின் நியாயப் பெறுமதி மாற்றம் அங்கிகரிக்கப்படுகின்றது.

இந்த நோக்கத்திற்காக, உடனடியான முன்னைய சுழற்சியில் அறுவடையின் கடைசி அறுவடை நாளின் அடிப்படையில் ஒரு அறுவடை சுழற்சிக்கு மட்டுப்படுத்துவதன் மூலம் ஒவ்வொரு பயிர் வகையின் அறுவடை சுழற்சியின் அடிப்படையில் அறுவடை செய்யப்படும் விவசாய உற்பத்தியின் தொகை மதிப்பிடப்படுகின்றது. மேலும், அறுவடை சுழற்சியின் 50 சதவீதமான பயிர் மதிப்பீட்டுக்கு கருதப்படுகின்றது. அறுவடைசெய்யக் கூடிய விவசாய உற்பத்தியின் மதிப்பீட்டுக்காக, பின்வரும் விலை சூத்திரங்களை கம்பனி பயன்படுத்துகின்றது.

தேங்காய் - தேங்காய் பறித்தல் மற்றும் போக்குவரத்து முதலிய கிரயங்கள் கழித்த நியாயமான பெறுமதி.

**3.1.5 நிதிச் சாதனங்கள்**

**3.1.5.1 ஏற்பிசைவு மற்றும் மற்றும் ஆரம்ப அளவீடு**

வியாபார வருமதிகள் அவை உருவாக்கப்படும் போதே ஆரம்ப ஏற்பிசைவு செய்யப்படுகின்றன. ஏனைய அனைத்து நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதிப் பரிப்புக்கள் யாவும் அத்தகைய சாதனத்தின் ஒப்பந்த ஏற்பாடுகளுக்கான ஒரு தரப்பினராக நிறுவனம் மாறும்போதே ஆரம்ப ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

ஒரு நிதிச் சொத்து (ஒரு கணிசமான நிதியிடல் மூலக்கூறினைக் கொண்டிராத வியாபார வருமதியாக இல்லாதவிடத்து) அல்லது நிதிப் பரிப்பானது ஆரம்பத்தில், ஒரு இலாபநட்டங்கள் ஊடான சீர்மதிப்பில் அளவிடப்படுபவை அல்லாத சாதனங்களுக்கு, சீர்மதிப்புடன் அதன் கையகப்படுத்தல் அல்லது வழங்கலின் போது நேரடியாக சாட்டுதல் செய்யத்தக்க ஊடுசெயல் கிரயங்கள் இணைந்த பெறுமதியில் அளவிடப்படுகிறது. கணிசமான நிதியிடல் மூலக்கூறினைக் கொண்டிராத வியாபார வருமதி ஒன்று ஆரம்பத்தில் ஊடுசெயல் விலையில் அளவிடப்படுகிறது.

**3.1.5.2 வகைப்படுத்தல் மற்றும் பிற்கால அளவீடு**

**3.1.5.2.1 நிதிச் சொத்துக்கள்**

**I) ஜனவரி 01, 2018 முதல் பிரயோகிக்கத்தக்க கொள்கை**

ஆரம்ப ஏற்பிசைவில், கடனழிவு செய்யப்பட்ட கிரயத்தில் அளவிடப்படுவது, முற்றடக்க வருமானங்கள் ஊடான சீர்மதிப்பில் அளவிடப்படும் - கடன் முதலீடுகள், ஏனைய முற்றடக்க வருமானங்கள் ஊடான சீர்மதிப்பில் அளவிடப்படும் - உரிமையாண்மை முதலீடுகள் அல்லது இலாப நட்டங்கள் ஊடான சீர்மதிப்பில் அளவிடப்படுபவை என வகைப்படுத்தப்படும்.

நிறுவனமானது நிதிச் சொத்துக்களை முகாமை செய்யும் தனது வணிக மாதிரியை மாற்றியிருக்காதவிடத்து, ஏற்பிசைவின் பின்னரான காலங்களில் நிதிச் சொத்துக்கள் மீள வகைப்படுத்தப்படுவதில்லை. அவ்வாறு வணிக மாதிரி மாற்றப் பட்டிருந்தால், அந்த வணிக மாதிரி மாற்றத்தைத் தொடர்ந்து வரும் முதலாவது அறிக்கையிடல் காலப்பகுதியின் முதலாவது நாளில் நிதிச் சொத்துக்கள் மீள வகைப்படுத்தப்படும்.

நிதிச் சொத்து ஒன்று பின்வரும் நிபந்தனைகளைத் திருப்தி செய்வதுடன், இலாப நட்டங்கள் ஊடான சீர்மதிப்பில் அளவிடப்படுவது எனக் குறித்தொதுக்கப்பட்டிராத போது, கடனழிவு செய்யப்பட்ட பெறுமதியில் அளவிடப்படும்:

- ஒப்பந்தக் காசுப் பாய்ச்சல்களை சேகரிக்கும் நோக்கினைக் கொண்ட வணிக மாதிரியினால் வைத்திருக்கப்படல், அத்துடன்
- குறித்த திகதிகளில் அதன் ஒப்பந்த நியதிகள் முற்றிலும் அசல் தொகைகளின் மீள் செலுத்துகை மற்றும் மீதமுள்ள அசல் தொகை மீதான வட்டி ஆகியவற்றினால் மாத்திரமான காசுப் பாய்ச்சல் அதிகரிப்புக்களை வழங்குதல்.

கடன் முதலீடு ஒன்று பின்வரும் நிபந்தனைகளைத் திருப்தி செய்வதுடன், இலாப நட்டங்கள் ஊடான சீர்மதிப்பில் அளவிடப்படுவது எனக் குறித்தொதுக்கப்பட்டிராத போது, இலாப நட்டங்கள் ஊடான சீர்மதிப்பில் அளவிடப்படும்:

- ஒப்பந்தக் காசுப் பாய்ச்சல்களை சேகரித்தல் மற்றும் நிதிச் சொத்துக்களை விற்பனை செய்தல் ஆகியவற்றின் மூலம் தமது நோக்கினைத் திருப்தி செய்யும் வணிக மாதிரியினால் வைத்திருக்கப்படல், அத்துடன்
- குறித்த திகதிகளில் அதன் ஒப்பந்த நியதிகள் முற்றிலும் அசல் தொகைகளின் மீள் செலுத்துகை மற்றும் மீதமுள்ள அசல் தொகை மீதான வட்டி ஆகியவற்றினால் மாத்திரமான காசுப் பாய்ச்சல் அதிகரிப்புக்களை வழங்குதல்.

வா்த்தக நோக்கத்திற்காக வைத்திருக்கப்படாத உரிமையாண்மை சாதனம் ஒன்றின் ஆரம்ப ஏற்பிசைவில், கம்பனியானது முதலீட்டின் சீர்மதிப்பில் ஏற்படும் பிற்கால மாற்றங்களை முற்றடக்க வருமானங்களில் முன்னிலைப்படுத்துவது என மீளப்பெற முடியாத தெரிவு ஒன்றினை மேற்கொள்ளலாம். இத் தெரிவானது ஒவ்வொரு முதலீடாக தனித்தனியாக மேற்கொள்ளப்படும்.

கடனழிவு செய்யப்பட்ட பெறுமதியில் அளவிடப்படும் அல்லது முற்றடக்க வருமானங்கள் ஊடான சீர்மதிப்பில் அளவிடப்படும் என வகைப்படுத்தப்படாத அனைத்து நிதிச் சொத்துக்களும் மேலே விபரிக்கப்பட்டவாறு இலாபநட்டங்கள் ஊடான சீர்மதிப்பில் அளவிடப்படும். இது அனைத்து உய்த்தறி நிதிச் சொத்துக்களையும் உள்ளடக்கும். ஆரம்ப ஏற்பிசைவில், குழுமமானது, ஏனைய நிலைமைகளில் கடனழிவு செய்யப்பட்ட பெறுமதியில் அல்லது ஏனைய முற்றடக்க வருமானங்கள் ஊடான சீர்மதிப்பில் மதிப்பிடப்படுவதற்கான நிபந்தனைகளினைப் பூர்த்தி செய்யும் நிதிச் சொத்துக்களை இலாபநட்டங்கள் ஊடான சீர்மதிப்பில் அளவிடுவதானது ஏனைய சந்தா்ப்பங்களில் ஏற்படத்தக்க கணக்கியல் இணக்கமின்மையினை கணிசமான அளவினால் குறைக்கும் அல்லது நீக்கும் எனில், அவ்வாறு இலாப நட்டங்கள் ஊடான சீர்மதிப்பில் அளவிடுவதாக மீளப்பெற முடியாத வகையில் தெரிவு செய்யும்.

**அ) வணிக மாதிரி மதிப்பீடு:**

நிறுவனமானது நிதிச் சொத்துக்கள் ஓா் முதலீட்டுத் தொகுதி மட்டத்தில் வைத்திருக்கப்படும் வணிக மாதிரியின் நோக்கங்கள் தொடா்பான மதிப்பீட்டை மேற்கொள்ளும். ஏனெனில், இது வணிகமானது முகாமை செய்யப்படும் மற்றும் முகாமைக்குத்

தகவல் வழங்கப்படும் முறையினை சிறப்பாகப் பிரதிபலிக்கும். கருத்தில் கொள்ளப்படும் தகவல்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கும்:

- குறிப்பிடப்பட்ட கொள்கைகள் மற்றும் முதலீட்டுத் தொகுதிக்கான நோக்கங்கள் அத்துடன் நடைமுறையிலுள்ள கொள்கைகளின் தொழிற்பாடு. இவை முகாமையினது தந்திரோபாயமானது ஒப்பந்த வட்டி வருமானம் உழைத்தலின் மீது நோக்கினைக் கொண்டுள்ளதா, குறிப்பிட்ட வட்டி வீத தொகுதி ஒன்றினைப் பராமரித்தல், நிதிச் சொத்துக்களின் காலப்பகுதியினை தொடர்புபட்ட ஏதேனும் பரிப்புக்களின் அல்லது எதிர்பார்க்கப்பட்ட காசுப் பாய்ச்சல்களின் அல்லது சொத்துக்களின் விற்பனை ஊடாக தேரச் செய்யப்பட்ட காசுப் பாய்ச்சல்களின் காலப்பகுதியுடன் இணக்கப்படுத்துதல் முதலியவற்றை உள்ளடக்கும்.
- முதலீட்டுத் தொகுதியின் செயற்றிறன் மீளாய்வு செய்யப்படும் மற்றும் நிறுவத்தின் முகாமைத்துவத்திற்கு அறிக்கையிடப்படும் முறை
- வணிக மாதிரியின் செயற்றிறனைப் பாதிக்கும் இடர்கள் (அத்துடன் வணிக மாதிரியினுள் வைத்திருக்கப்படும் நிதிச் சொத்துக்கள்) மற்றும் அந்த இடர்கள் முகாமை செய்யப்படும் முறை
- முன்னைய காலப்பகுளிலான நிதிச் சொத்துக்களின் விற்பனை தொடர்பான மீடிறன் எண்ணிக்கைகள், அளவு மற்றும் காலப்பகுதிகள், அத்துடன் அத்தகைய விற்பனைக்காக காரணம் மற்றும் எதிர்கால விற்பனை நடவடிக்கைகள் தொடர்பான எதிர்பார்க்கை.

ஏற்பிசைவு நீக்கலுக்குத் தகமை பெறாத ஊடுசெயல்களில் மூன்றாம் தரப்பினருக்கான நிதிச் சொத்துக்களின் மாற்றல்கள் இந் நோக்கத்துக்காக, குழுமத்தின் சொத்துக்களுக்கான தொடர்ச்சியான ஏற்பிசைவுக் கொள்கைக்கு இணக்கமான வகையில் விற்பனைகளாகக் கருதப்படவில்லை.

வர்த்தகத்துக்காக வைத்திருக்கப்படும் அல்லது முகாமை செய்யப்பட்டு, அவற்றின் செயற்றிறன் சீர்மதிப்பின் அடிப்படையில் மதிப்பிடப்படும் நிதிச் சொத்துக்கள் இலாப நட்டங்கள் ஊடான சீர்மதிப்பில் அளவிடப்படும்.

**பிற்கால அளவீடு மற்றும் வருமானம் மற்றும் நட்டங்கள்:**

| | |
|---|---|
| இலாப நட்டங்கள் ஊடான சீர்மதிப்பில் அளவிடப்படும் நிதிச் சொத்துக்கள் | இச் சொத்துக்கள் பிற்காலத்தில் சீர்மதிப்பில் அளவிடப்படும். வட்டி அல்லது பங்கு இலாப வருமானங்கள் உள்ளடங்கலான நிகர ஆதாயங்கள் மற்றும் நட்டங்கள் இலாபநட்டங்களில் ஏற்பிசைவு செய்யப்படும். |
| கடனழிவு செய்யப்பட்ட கிரயத்தில் அளவிடப்படும் நிதிச் சொத்துக்கள் | இச் சொத்துக்கள் பிற்காலத்தில் விளைவுள்ள வட்டி வீதத்தினைப் பயன்படுத்தி கடனழிவு செய்யப்பட்ட பெறுமதியில் அளவிடப்படும். கடனழிவுப் பெறுமதியானது சேத இழப்பு நட்டங்களினால் குறைக்கப்படும். வட்டி வருமானம் மற்றும் சேத இழப்பு ஆகியன இலாப நட்டங்களில் ஏற்பிசைவு செய்யப்படும். ஏற்பிசைவு நீக்கலிலான ஏதேனும் ஆதாயங்கள் அல்லது நட்டங்கள் இலாபநட்டங்களில் ஏற்பிசைவு செய்யப்படும். |
| ஏனைய முற்றடக்க வருமானங்கள் ஊடான சீர்மதிப்பில் அளவிடப்படும் கடன் முதலீடுகள் | இச் சொத்துக்கள் பிற்காலங்களில் சீர்மதிப்பில் அளவிடப்படும். விளைவுள்ள வட்டி வீதத்தினைப் பயன்படுத்திக் கணிப்பிடப்பட்ட வட்டி வீதம் மற்றும் சேத இழப்பு ஆகியன இலாப நட்டங்களில் ஏற்பிசைவு செய்யப்படும். ஏனைய ஆதாயங்கள் மற்றும் இழப்புக்கள் ஏனைய முற்றக்க வருமானங்களில் ஏற்பிசைவு செய்யப்படும். ஏற்பிசைவு நீக்கலில், ஏனைய முற்றடக்க வருமானங்களில் திரட்டப்பட்ட ஆதாயங்கள் மற்றும் இழப்புக்கள் இலாப நட்டங்களுக்கு மீள வகைப்படுத்தப்படும். |
| ஏனைய முற்றடக்க வருமானங்கள் ஊடான சீர்மதிப்பில் அளவிடப்படும் உரிமையாண்மை முதலீடுகள் | இச் சொத்துக்கள் பிற்காலங்களில் சீர்மதிப்பில் அளவிடப்படும். பங்கு இலாபமானது தெளிவான முறையில் முதலீட்டின் பகுதி ஒன்றினை மீளப் பெறுவதைப் பிரதிநிதித்துவம் செய்யாத போது பங்கு இலாபமானது இலாப நட்டங்களில் வருமானமாக ஏற்பிசைவு செய்யப்படும். ஏனைய நிகர ஆதாயங்கள் மற்றும் இழப்புக்கள் ஏனைய முற்றடக்க வருமானங்களில் ஏற்பிசைவு செய்யப்படுவதுடன், எப்போதுமே இலாப நட்டங்களுக்கு மீள வகைப்படுத்தப்படாது. |

**3.1.5.2.2 நிதிப் பொறுப்புக்கள்**

**1. வகைப்படுத்தல், பிற்கால அளவீடுகள் மற்றும் ஆதாயங்கள் மற்றும் இழப்புக்கள்**

நிதிப் பரிப்புக்கள் கடனழிவு செய்யப்பட்ட பெறுமதியில் அளவிடப்படுபவை அல்லது இலாப நட்டங்கள் ஊடான சீர்மதிப்பில் அளவிடப்படுபவை என வகைப்படுத்தப்படும். நிதிப் பரிப்பு ஒன்று விற்பனைக்காக வைத்திருக்கப்படுவதாக, அது ஒரு உய்த்தறி சாதனமாக அல்லது ஆரம்ப ஏற்பிசைவில் அது அவ்வாறு குறித்தொதுக்கப்பட்டிருப்பின், அது இலாப நட்டங்கள்

ஊடான சீர்மதிப்பில் அளவிடப்படுவது என வகைப்படுத்தப்படும். இலாப நட்டங்கள் ஊடான சீர்மதிப்பிலான நிதிப் பரிப்புக்கள் சீர்மதிப்பில் அளவிடப்படுவதுடன், வட்டிச் செலவினங்கள் உள்ளடங்கலான நிகர ஆதாயங்கள் அல்லது இழப்புக்கள் இலாப நட்டங்களில் ஏற்பிசைவு செய்யப்படும். ஏனைய நிதிப் பரிப்புக்கள் விளைவுள்ள வட்டி வீதத்தைப் பயன்படுத்திப் பிற்காலத்தில் கடனழிவு செய்யப்பட்ட பெறுமதியில் அளவிடப்படும். வட்டிச் செலவினங்கள் மற்றும் அந்நிய நாணய ஆதாயங்கள் மற்றும் இழப்புக்கள் ஆகியன இலாப நட்டங்களில் ஏற்பிசைவு செய்யப்படும். ஏற்பிசைவு நீக்கலிலான ஏதேனும் ஆதாயங்கள் அல்லது இழப்புக்களும் இலாப நட்டங்களில் ஏற்பிசைவு செய்யப்படும்.

**3.1.5.3 ஏற்பிசைவு நீக்கல்**

**3.1.5.3.1 நிதிச் சொத்துக்கள்**

நிதிச் சொத்து ஒன்றிலிருந்தான காசுப் பாய்ச்சல்களுக்கான ஒப்பந்த உரிமைகள் காலாவதியாகும் போது அல்லது ஒப்பந்தக் காசுப் பாய்ச்சல்களைப் பெறுவதற்கான அதன் உரிமையினை, உரிமைத்துவத்தின் கணிசமான அளவில் அனைத்து இடர்கள் மற்றும் வெகுமதிகளும் மாற்றப்படும் அல்லது உரிமைத்துவத்துக்கான கணிசமான அளவிலான அனைத்து இடர்கள் மற்றும் வெகுமதிகளை கம்பனி மாற்றம் செய்யவோ அல்லது வைத்திருக்கவோ செய்யாது, நிதிச் சொத்தின் மீது அது கட்டுப்பாட்டினைக் கொண்டிராத வகையில் விளையும் ஊடுசெயல் ஒன்றில் மாற்றும் போது நிதிச் சொத்தினை நிறுவனம் ஏற்பிசைவு நீக்கும்.

நிறுவனத்தின் நிதிநிலைமைக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்பட்டுள்ள சொத்துக்களை மாற்றும் ஆனால் மாற்றப்பட்ட சொத்தின் அனைத்து அல்லது கணிசமான அளவிலான அனைத்து இடர்கள் மற்றும் வெகுமதிகளை தன்வசம் தொடர்ந்தும் வைத்திருக்கும் வகையில் மாற்றம் செய்யும் ஊடுசெயலினுள் உள்நுழைகிறது. இவ்வாறான நிலைமைகளில், மாற்றப்பட்ட சொத்துக்கள் ஏற்பிசைவு நீக்கப்படுவதில்லை.

**3.1.5.3.2 நிதிப் பொறுப்புக்கள்**

நிதிப் பொறுப்பு ஒன்றின் ஒப்பந்தக் கடப்பாடுகள் தீர்க்கப்பட்டதும் அல்லது இரத்துச் செய்யப்பட்டதும் அல்லது காலாவதியானதும் கம்பனி நிதிப் பரிப்பினை ஏற்பிசைவு நீக்கும். அத்துடன் கம்பனி நிதிப் பரிப்புக்களின் நியதிகள் மாற்றம் செய்யப்பட்டதுடன், மாற்றம் செய்யப்பட்ட பரிப்பின் காசுப் பாய்ச்சல்கள் கணிசமான அளவில் வேறுபட்டுக் காணப்படும் வேளைகளிலும் ஏற்பிசைவை நீக்குவதுடன், இத்தகைய வேளைகளில் மாற்றம் செய்யப்பட்ட நியதிகளின் அடிப்படையில் ஓர் புதிய நிதிப் பரிப்பு சீர்மதிப்பில் ஏற்பிசைவு செய்யப்படும்.

நிதிப் பொறுப்பு ஒன்றின் ஏற்பிசைவு நீக்கலில், முடிவுறுத்தப்பட்ட கொண்டு செல்லல் பெறுமதி மற்றும் செலுத்தப்பட்ட கைமானம் ஆகியவற்றுக்கு இடையிலான வேறுபாடானது (மாற்றப்பட்ட காசல்லாத சொத்துக்கள் மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட பரிப்புக்கள் உள்ளடங்கலாக) இலாபநட்டங்களில் ஏற்பிசைவு செய்யப்படும்.

**3.1.5.4 எதிர்த் தீர்த்தல்**

நிறுவனம் சட்டரீதியாக வலுமிக்கதாக்கத்தக்க உரிமையினைக் கொண்டுள்ளதுடன், அவற்றை நிகர அடிப்படையில் தீர்க்கவோ அல்லது ஒரே நேரத்தில் சொத்துக்களைத் தேறலடையச் செய்து பரிப்புக்களைச் செலுத்துவதற்கோ விருப்பத்தினைக் கொண்டுள்ள போது மாத்திரமே நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதிப் பரிப்புக்கள் எதிர்த் தீர்க்கப்படும்.

**3.1.5.5 சேத இழப்பு – நிதிச் செத்துக்கள்**

**உய்த்தறியா நிதிச் சொத்துக்கள்**

**3.1.5.5.1 நிதிச் சாதனங்கள் மற்றும் ஒப்பந்த சொத்துக்கள்**

வியாபார வருமதிகளுக்கான இழப்பு ஒதுக்குதொகைகள் வாழ்நாள் எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்பிற்கு சமமான தொகையிலேயே எப்போதுமே அளவிடப்படும்.

நிதிச் சொத்து ஒன்றின் கடன் இழப்பானது ஆரம்ப ஏற்பசைவில் இருந்து கணிசமாக அதிகரித்துள்ளதா என்பதைத் தீர்மானிக்கும் போதும், எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்பைத் தீர்மானிக்கும் போதும் கம்பனி தேவையற்ற கிரயங்கள் இன்றிக் கிடைக்கத்தக்கதாகவுள்ளதும் பொருத்தமானதுமான நியாயமான மற்றும் ஆதரவு வழங்கத்தக்க தகவல்களைக் கருத்தில் கொள்ளும். இது கம்பனியின் வரலாற்றுத் தகவல் அடிப்படையிலான மற்றும் முன்னோக்கிய தகவல்கள் உள்ளடங்கலான கடன் மதிப்பீடு ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்த அளவுரீதியான மற்றும் பண்புரீதியான பகுப்பாய்வுகளை உள்ளடக்கும். நிதிச் சொத்து ஒன்று 365 நாட்களுக்கு மேற்பட்டதாகக் காணப்படின், கடன் இடர் கணிசமாக அதிகரித்து உள்ளதாகக் கம்பனி அனுமானம் மேற்கொள்ளும்.

நிதிச் சொத்தானது தவறுகையானதாகப் பின்வரும் சந்தர்ப்பங்களில் நிறுவனம் கருதிக் கொள்ளும்:

- நிறுவனமாகவே பிணைச் சொத்தை (ஏதேனும் வைத்திருக்கப்பட்டால்) தேறலடையச் செய்தல் முதலிய மாற்று வசூலிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளாது, கடன்படுனர் நிறுவனத்துக்கான தமது கடன் கடப்பாட்டை முழுமையாக தீர்ப்பதற்கான சாத்தியம் தென்படாமை, அல்லது
- வாழ்நாள் எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்பானது நிதிச் சாதனம் ஒன்றின் எதிர்பார்க்கப்பட்ட ஆயுட் காலமீறான அனைத்து சாத்தியமான தவறுகை நிகழ்வுகளினதும் விளைவான எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்பாக இருத்தல்.

12 மாத எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்பானது அறிக்கையிடல் திகதியின் பின்னான 12 மாத காலத்தினுள் (அல்லது சாதனத்தின் எதிர்பார்க்கப்பட்ட ஆயுள் 12 மாதங்களை விடக் குறைவாயிருப்பின், அத்தகைய குறைந்த காலப்பகுதி) சாத்தியமான தவறுகை நிகழ்வுகளிலிருந்து விளைவாகும் எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்புக்களின் பகுதியாகும்.

எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்பை மதிப்பிடுவதில் கருத்தில் கொள்ளப்படும் உயர்ந்தபட்சக் காலப்பகுதியானது நிறுவனமானது கடன் இழப்புக்கு உட்பட்டதாக அமையும் உயர்ந்தபட்ச ஒப்பந்தக் காலப்பகுதியாகும்.

**3.1.5.5.2 எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்பின் அளவீடு**

எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்பானது கடன் இழப்புக்களின் நிகழ்தகவு நிறையேற்றப்பட்ட மதிப்பீடாகும். கடன் இழப்புக்கள் அனைத்துக் காசுப் பற்றாக்குறைகளதும் நிகழ்காலப் பெறுமதியில் அளவிடப்படும் (அதாவது, ஒப்பந்தத்தின் படியாக உரிமத்துக்குக் கிடைக்கத் தக்கதாகவுள்ள காசுப் பாய்ச்சல்களுக்கும் நிறுவனம் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கும் காசுப் பாய்ச்சல்களுக்கும் இடையிலான வேறுபாடாகும்).

எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்புக்கள் நிதிச் சொத்தின் விளைவுள்ள வட்டி வீதத்தில் கழிவீடு செய்யப்படும்.

#### 3.1.5.5.3 கடன் சேத இழப்பு செய்யப்பட்ட நிதிச் சொத்துக்கள்

ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும், கடனழிவு செய்யப்பட்ட கிரயத்தில் கொண்டு செல்லப்பட்ட நிதிச் சொத்துக்கள் மற்றும் ஏனைய முற்றடக்க வருமானங்கள் ஊடான சீர்மதிப்பிலான கடன் பிணையங்கள் ஆகியன கடன் சேத இழப்பு செய்யப்படும். நிதிச் சொத்தின் மதிப்பிடப்பட்ட எதிர்காலக் காசுப் பாய்ச்சல்களின் மீது ஒரு பாதக விளைவுள்ள தாக்கத்தினைக் கொண்ட ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நிகழ்வுகள் இடம்பெற்றிருப்பின், நிதிச் சொத்து ஒன்று கடன் சேத இழப்பு செய்யப்பட்டதாகக் கருதப்படும்.

நிதிச் சொத்து ஒன்று கடன் சேத இழப்பு அடைந்துள்ளது என்பதற்கான சான்றுகள் பின்வரும் அவதானிக்கத்தக்க தரவுகளை உள்ளடக்கும்:

- கடன்படுனர் அல்லது வழங்குனரது கணிசமான நிதிசார் சிக்கல்நிலை
- தவறுகை அல்லது 180 நாட்கள் கடந்திருத்தல் முதலிய ஒப்பந்த முறிவு
- நிறுவனம் வேறு வழிகளில் கருத்தில் எடுக்க முடியாத காரணத்தினால் நிறுவனத்தினால் கடன் அல்லது முற்பணம் மீள்கட்டமைக்கப்படுதல்
- கடன்படுனர் முறிவடைநிலை அல்லது நிதிசார் மீளொழுங்கமைத்தல் ஏற்பாடு ஒன்றுக்கு வரவர சாத்தியமாயிருத்தல், அல்லது
- நிதிசார் இடர்பாடுகள் காரணமாக பிணையத்துக்கான உத்வேகம் மிக்க சந்தை தோற்றமற்றுப் போதல்

#### 3.1.5.5.4 நிதிநிலைமைக் கூற்றில் எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்புக்கான ஒதுக்குதொகையை முன்னிலைப்படுத்தல்

நிதிச் சொத்துக்களுக்கான இழப்பு ஒதுக்குதொகையானது கடனழிவு செய்யப்பட்ட பெறுமதியில் அளவிடப்படுவதுடன், சொத்தினது மொத்த கொண்டு செல்லல் பெறுமதியிலிருந்து கழிக்கப்படும்.

#### 3.1.5.5.5 பதிவழித்தல்

நிறுவனமானது நிதிச் சொத்தினை முழுமையாகவோ அல்லது அதன் ஒரு பகுதியையோ மீளப் பெறுவதற்கான நியாயமான எதிர்பார்ப்புக்களைக் கொண்டிராத போது நிதிச் சொத்தின் மொத்தக் கொண்டு செல்லல் பெறுமதியானது பதிவழிக்கப்படும். தனிநபரான வாடிக்கையாளர்களைப் பொறுத்தவரையில், நிதிச் சொத்து 180 நாட்களுக்கு மேற்பட்டதாயின், ஒத்த சொத்துக்களின் மீளப்பெறுகையின் வரலாற்று அனுபவங்களின் அடிப்படையில் அவர்களது மொத்தக் கொண்டு செல்லும் பெறுமதியைப் பதிவழிப்பு செய்யும் கொள்கையினைக் நிறுவனம் கொண்டுள்ளது. நிறுவன ரீதியான வாடிக்கையாளர்களுக்கு, மீளப் பெறுவதற்கான நியாயமான எதிர்பார்ப்பு உள்ளதா என்பதன் அடிப்படையில் பதிவழிப்பின் காலப்பகுதி மற்றும் தொகை ஆகியன தொடர்பான மதிப்பீடு ஒன்றை தனித்தனியாக மேற்கொள்ளும். புதிவழிக்கப்பட்ட தொகையிலிருந்து கணிசமான மீளப்பெறலைக் நிறுவனம் எதிர்பார்கவில்லை. எனினும், பதிவழிக்கப்பட்ட நிதிச் சொத்துக்கள் நிறுவனத்தின் வருமதியாகவுள்ள தொகைகளை மீளப்பெறுவதற்கான படிமுறைகளுக்கு இணக்கமாக, இன்னமும் சேகரித்தலுக்கான வலுவுள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படத் தக்கவையாகும்.

### 3.2.1 நிதி இடர் முகாமைத்துவ நோக்கங்கள் மற்றும் கொள்கைகள்

வியாபார மற்றும் ஏனைய சென்மதிகள் மற்றும் சென்மதி வருமான வரி ஆகியவையே நிறுவனத்தின் முக்கிய நிதிப் பரிப்புக்களாகும். இந் நிதிப் பரிப்புக்களின் முக்கிய நோக்கம் நிறுவனத்தின் செயற்பாட்டுக்கான நிதியிடல் ஆகும். நிறுவனமானது அரச வணிக முயற்சிகளுக்கு வழங்கப்பட்ட கடன்கள், வியாபார மற்றும் வருமதிகள் மற்றும் வியாபார நேரடியாக செயற்பாட்டின் மூலம் கிடைக்கும் காசு மற்றும் குறுங்கால வைப்புக்கள் ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

எனவே நிறுவனம் நிதிச் சாதனங்களை பயன்படுத்தும் போது கடன் இடர்கள், திரவத்தன்மை இடர்கள், நாணயமாற்று இடர்கள் மற்றும் வட்டி வீத இடர்கள் ஆகியவற்றுக்கு முகங்கொடுக்கும்.

இக்குறிப்பு நிறுவனம் முகங்கொடுக்கும் இவ்வாறான இடர்கள் மற்றும் அவற்றை மதிப்பிட்டு முகாமை செய்வதற்கான நிறுவனத்தின் நோக்கங்களினாலும் கொள்கைகளையும் விளக்குகின்றன.

#### 3.2.1.1 கடன் இடர்

கடன் கொடுக்கப்பட்டுள்ள வாடிக்கையாளரொருவர் அல்லது தொடர்புடைய ஒரு பிரிவினர் தமது ஒப்பந்தத்தை கட்டுறுப்புக்களை கடைப்பிடிக்கத் தவறும் போது நிறுவனத்திற்குக் கிடைக்க வேண்டியவை கிடைக்காமல் செல்வதால் ஏற்படும் நிதி நட்டமாவதுடன் முக்கியமாக இது நிறுவனத்தின் வாடிக்கையாளர்களிடம் இருந்தான வருமதி காரணமாக ஏற்படலாம்.

#### 3.2.1.2 திரவத்தன்மை இடர்

திரவத்தன்மை இடர் என்பது நிறுவனம் காசு அல்லது மற்றொரு நிதிச் சொத்து மூலம் தீர்க்கப்பட வேண்டிய தனது நிதிப் பரிப்புகளுடன் தொடர்புடைய கடமைகளை சந்திப்பதில் சிரமத்தை எதிர்கொள்ளும் இடர் ஆகும்.

திரவத்தன்மையை நிர்வகிப்பதற்கான நிறுவனத்தின் அணுகுமுறையானது, இயல்பான மற்றும் கட்டாய நிலைமைகளின் கீழ், ஏற்றுக்கொள்ள முடியாத இழப்புக்கள் அல்லது நிறுவனத்தின் புகழை சேதப்படுத்தும் இடரின்றி, எப்போதுமே அதன் பரிப்புகளைத் தீர்க்க போதுமான திரவத்தன்மையைக் கொண்டு இருப்பதை உறுதி செய்வதாகும்.

### 3.2.2 ஊழியர் நலன்கள்

#### (ய) திட்டவட்டமான பங்களிப்பு திட்டங்கள் - சேமலாப நிதி மற்றும் நம்பிக்கை நிதி

ஒரு திட்டவட்டமான பங்களிப்பு திட்டம் என்பது நிறுவனம் ஒரு குறிப்பிட்ட நிலையான பங்களிப்பை தனியானதொரு உரிமத்துக்கு செலுத்தி, மேலதிக தொகைகளை செலுத்துவதற்கான சட்டபூர்வமான அல்லது ஆக்கபூர்வமான கடமைகளைக் கொண்டிராத, வேலைவாய்ப்புக் காலத்துக்குப் பின்னான ஒரு பயன் திட்டமாகும், அனைத்து ஊழியர்களையும் உள்ளடக்கிய சேமலாப மற்றும் நம்பிக்கை நிதியத்துக்கான பங்களிப்புகளுக்கான கடப்பாடுகளானவை, இலாப நட்டங்களில் ஒரு செலவினமாக ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

நிறுவனம் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு ஊழியர்களின் திரண்ட சம்பளத்தில் 12% இனையும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு ஊழியர்களின் திரண்ட சம்பளத்தில் 3மூ இனையும் பங்களிப்பு செய்கிறது.

**(ழ) திட்டவட்டமான பயன் திட்டங்கள்**

திட்டவட்டமான பயன் திட்டம் என்பது திட்டவட்டமான பங்களிப்பு திட்டம் தவிர்ந்த ஒரு வேலைவாய்ப்புக் காலத்தின் பின்னான பயன் திட்டமாகும். திட்டவட்டமான பயன் திட்டங்களின் கிரயம், புள்ளிவிபர மதிப்பீடுகளைப் பயன்படுத்தி தீர்மானிக்கப்படுகிறது. புள்ளிவிபர மதிப்பீடுகளானவை கழிவிடல் வீதம், எதிர்கால சம்பள அதிகரிப்புக்கள் மற்றும் ஊழியர் புரள்வு ஆகியன பற்றிய எடுகோள்களுடன் தொடர்புபடுகின்றது. இத்தகைய கடப்பாடுகளின் நீண்டகாலத்தன்மை காரணமாக, இத்தகைய மதிப்பீடுகள் குறிப்பிடத்தக்க நிச்சயமற்ற தன்மைக்கு உட்பட்டவை. மதிப்பீடுகளில் பயன்படுத்தப்படும் முக்கிய அனுமானங்களின் விவரங்கள் குறிப்பு 16 இல் உள்ளன.

இக் கடப்பாட்டின் பரிப்பானது இலங்கை வங்கியுடன் நிலையான வைப்புக்களில் வெளிவாரியாக நிதியிடப்பட்டுள்ளது.

## 3.3 பிற்போடப்பட்ட வருமானங்கள்

**கொடைகள் மற்றும் மானியங்கள்**

கொடைகள் கிடைக்கப்பெறும் என்பதுடன், அனைத்து இணைக்கப்பட்ட நிபந்தனைகளும் இணங்கப்படும் என்பதற்கான நியாயமான உறுதிப்பாடு காணப்படும் போது அரச கொடைகள் ஏற்பிசைவு செய்யப்படும். கொடை ஒரு செலவினத்துடன் தொடர்புபடும் போது, அது கொடையினை அது ஈடு செய்ய எதிர்பார்க்கப்படும் செலவினங்களுக்கு ஒரு முறையான அடிப்படையில் இணைக்கப்படுவதற்கு அவசியமான முறையில் அக் காலப்பகுதியிலேயே அது வருமானமாக ஏற்பிசைவு செய்யப்படுகிறது. கொடை ஒரு சொத்துடன் தொடர்புபடும் போது, அது ஒரு பிற்போடப்பட்ட வருமானமாக ஏற்பிசைவு செய்யப்பட்டு, தொடர்புடைய சொத்தின் எதிர்பார்க்கப்படும் பயன்தரு ஆயுட் காலத்தில் சமமான அளவில் தொகைகளில் வருமானமாக அனுமதிக்கப்படும்.

ஆதனம், பொறி, உபகரணங்கள் தொடர்புபட்ட கொடைகள் ஆரம்பத்தில் பிற்போடப்பட்டு, பயன்தரு ஆயுட் காலத்தில் ஒரு சீரான முறையில் பின்வருமாறு வருமானமாக அனுமதிக்கப்படுகிறது:

சொத்துக்கள் அவற்றின் பயன்தரு ஆயுள் அல்லது மீதமுள்ள குத்தகைக் காலங்கள் ஆகியவற்றில் குறைந்ததில் காலத் தேய்மானம் செய்யப்படுகின்றன.

| | |
|---|---|
| கட்டடங்கள் | 40 வருடங்கள் |
| நீர் வழங்கல் | 20 வருடங்கள் |
| மோட்டார் வாகனங்கள் | 05 வருடங்கள் |
| தளபாடங்களும் பொருத்துக்களும் | 10 வருடங்கள் |
| உபகரணங்கள் | 08 வருடங்கள் |

## 3.4 வருமானங்கள் மற்றும் செலவினங்கள்

வருமானக் கூற்றின் முன்னிலைப்படுத்தல் நோக்கத்திற்காக, நிறுவனத்தின் செயற்பாடுகளின் மூலகங்கள் தொடர்பாக நியாயான பிரதிநிதித்துவப்படுத்தலைக் காட்டும் செலவின முறைத் தொழின்முறை பயன்படுத்தப்படுகின்றது.

### 3.4.1 வருமான ஏற்பிசைவு

வருமானம் ஏற்பிசைவு செய்யப்படுமா? எவ்வளவு மற்றும் எப்போது என்பதைத் தீர்மானிப்பதற்கான முற்றடக்கமான சட்டகம் ஒன்றினை SLFRS 15 நியமம் வழங்குகிறது. இந் நியமம் LKAS 18 வருமானம், LKAS 11 நிர்மாண ஒப்பந்தங்கள் மற்றும் தொடர்புபட்ட வியாக்கியானங்களைப் பதிலீடு செய்துள்ளது. SLFRS 15 நியமத்தின் கீழ், வாடிக்கையாளர் பொருட்கள் அல்லது சேவைகளின் கட்டுப்பாட்டினைப் பெற்றுக் கொள்ளும் போதே வருமானம் ஏற்பிசைவு செய்யப்படும். கட்டுப்பாட்டின் மாற்றத்தின் நேரகாலத்தினைத் தீர்மானித்தல் - ஓர் குறித்தகாலப் புள்ளியிலா அல்லது காலப் பரப்பிலா என்பது சுயதீர்ப்பை மேற்கொள்ளத் தேவைப்படுத்தும்.

வருமானமானது வாடிக்கையாளர் ஒருவருடனான ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கைமானத்தின் அடிப்படையில் அளவிடப்படும். கம்பனியானது வருமானத்தினை பொருட்கள் மற்றும் சேவைகளின் கட்டுப்பாட்டினை வாடிக்கையாளருக்கு உரிமம் உரித்துள்ளதாக எதிர்பார்க்கும் தொகையில் மாற்றும்போது ஏற்பிசைவு செய்யும். வருமானமானது மிகப் பிரதானமாக, தேங்காய் மற்றும் கொப்பரைகளின் விற்பனையினை உள்ளடக்கும்.

01 சனவரி 2018 முதல் விளைவுக்கு வந்துள்ள SLFRS 15 நியமத்தின்படி, வருமான ஏற்பிசைவுக்காக கம்பனி ஐந்து படிமுறை மாதிரி அடிப்படையிலான கோட்பாட்டினைப் பின்பற்றுகிறது. அதன்படியாக, பின்வரும் மூலப்பிரமாணங்கள் அனைத்துமே திருப்தி செய்யப்பட்டதும், வருமானமானது ஏற்பிசைவு செய்யப்படும்:

- ஒப்பந்தத்துக்கான தரப்புக்கள் ஒப்பந்தத்தினை அங்கீகரித்தல்
- மாற்றப்படவேண்டிய பொருட்கள் அல்லது சேவைகள் தொடர்பாக இரு தரப்பினதும் உரிமைகளை உரிமத்தினால் அடையாளம் காணத்தக்கதாக இருத்தல்
- மாற்றப்படவேண்டிய பொருட்கள் அல்லது சேவைகள் தொடர்பான கொடுப்பனவு நியதிகளை உரிமத்தினால் அடையாளம் காணத்தக்கதாக இருத்தல்
- ஒப்பந்தமானது ஓர் வாத்தக உட்பொருளைக் கொண்டிருத்தல்
- வாடிக்கையாளருக்கு மாற்றப்படவுள்ள பொருட்கள் அல்லது சேவைகளுக்கு மாற்றாக தமக்கு உரித்தாகவுள்ள கைமானத்தினை உரிமம் சேகரித்துக் கொள்வது நிகழ்தகவு மிக்கதாகக் காணப்படல்.

ளுடுகுசுளு 15 நியமத்தினைப் பிரயோகித்ததன் மூலமான விளைவினால் கம்பனியின் நிதிக் கூற்றுக்களில் கணிசமான தாக்கங்கள் ஏற்படவில்லை.

ய) ஆதனம், பொறி மற்றும் உபகரண உருப்படி ஒன்றின் முடிவுறுத்தல் மூலமான ஆதாயங்கள் அல்லது இழப்புக்கள் ஆகியன நிகர விற்பனை வருமானத்தினை ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் கொண்டு செல்லல் பெறுமதியுடன் ஒப்பிடுவதன் மூலம் தீர்மானிக்கப் படுவதுடன், அவை நிதிக் கூற்றுக்களின் “ஏனைய தொழிற்பாட்டு வருமானங்கள்” பிரிவினுள் ஏற்பிசைவு செய்யப்படும்.

டி) ஏனைய வருமானங்கள் அட்டுறு அடிப்படையில் ஏற்பிசைவு செய்யப்படும்.

### 3.4.2 செலவுகள்

வியாபாரங்களை நடாத்திச் செல்லும்போது ஏற்படும் எல்லா செலவினங்களும் ஆதனம், பொறி, உபகரணங்களை வினைத்திறனாகப் பராமரிப்பதற்கு ஏற்படும் அனைத்து செலவினங்களும் வருடத்தின் இலாப (நட்ட) கணிப்பீட்டின் போது வருமானத்திற்கு எதிராக அறவிடப்படும்.

### 3.5 வருமான வரி

வருமான வரியானது தற்போதைய வரி மற்றும் பிற்போடப்பட்ட வரி ஆகியவற்றை உள்ளடக்கும். உரிமையாண்மையில் நேரடியாக ஏற்பிசைவு செய்யப்படும் உருப்படி ஒன்று உரிமையாண்மையில் ஏற்பிசைவு செய்யப்படும் போது அதனுடன் தொடர்புடையது தவிர்ந்த அளவுக்கு வரிச் செலவுகள் இலாபநட்டங்களில் ஏற்பிசைவு செய்யப்படும்.

**(a) தற்போதைய வரி**

தற்போதைய வரி என்பது நடைமுறை வருடத்தின் வரி விதிக்கத்தகு வருமானத்தில், அறிக்கையிடல் திகதியில் சட்டமாக்கப்பட்டுள்ள வரி வீதத்தினைப் பயன்படுத்தி, முன்னைய ஆண்டுகளுக்காக வரிகள் தொடர்பான சீராக்கத்தையும் மேற்கொண்டு நடைமுறை ஆண்டில் செலுத்தத் தக்கதாக உள்ள வரியின் அளவு ஆகும்.

வருமான வரிக்கான ஏற்பாடானது நிதிக் கூற்றுக்களில் அறிக்கையிடப்பட்ட வருமான மற்றும் செலவின மூலகங்களின் அடிப்படையில் அமைந்ததாகவும், உள்நாட்டு இறைவரித் திணைக்களச் சட்டத்தின் மற்றும் அதன் திருத்தங்களின் ஏற்பாடுகளுக்கு அமைவாக கணிக்கப்பட்டதாகவும் காணப்படும்.

**(b) பிற்போடப்பட்ட வரி**

பிற்போடப்பட்ட வரியானது சொத்துக்கள் மற்றும் பரிப்புக்கள் தொடர்பான நிதி அறிக்கையிடல் நோக்கங்களுக்கான கொண்டு செல்லல் பெறுமதி மற்றும் வரி நோக்கங்களுக்காக கொண்டு செல்லல் பெறுமதி ஆகுியவற்றுக்கு இடையிலான தற்காலிக வேறுபாடுகளுக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு, ஐந்தொகை முறையைப் பயன்படுத்தி ஏற்பிசைவு செய்யப்படும். பின்வரும் தற்காலிக வேறுபாடுகளுக்காகப் பிற்போடப்பட்ட வரி ஏற்பிசைவு செய்யப்படுவதில்லை: கணக்கியல் அல்லது வரியியல் இலாபத்தின் மீது எதுவித தாக்கத்தையும் கொண்டிருக்காத வணிக இணைப்பு அல்லாத கொடுக்கல் வாங்கல் ஒன்றிலான சொத்துக்கள் மற்றும் பரிப்புக்களின் ஆரம்ப ஏற்பிசைவு மற்றும் கட்புலனாகக்கூடிய எதிர்காலத்தில் மீளப்பெறக்கூடியதல்லாத சாத்தியமான அளவுக்கு சேய்க் கம்பனிகளின் மீதான முதலீடுகள். மேலும், நன்மதிப்பின் ஆரம்ப ஏற்பிசைவில் ஏற்படும் வரிவிதிக்கத்தகு தற்காலிக மாற்றங்களுக்கு பிற்போடப்பட்ட வரி ஏற்பிசைவு செய்யப்படுவதில்லை. பிற்போடப்பட்ட வரியானது தற்காலிக வேறுபாடுகள் மீள்பெறுகையின் போது பிரயோகிக்கத்தக்கதான, அறிக்கையிடல் திகதியில் சட்டமாக்கப்பட்டுள்ள அல்லது கணிசமான அளவில் சட்டமாகவுள்ள வரி வீதத்தின் அடிப்படையிலேயே கணிக்கப்படும். பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் மற்றும் பரிப்புக்கள், நடைமுறை வரிச் சொத்துக்கள் மற்றும் பரிப்புக்களை எதிர்த் தீர்த்தல் செய்வதற்கான சட்டவலுத் தன்மையுள்ள உரிமை ஒன்று காணப்படுவதுடன் அவை அதே வகையான வரிவிதிப்பு அதிகாரசபையின் வரியாகவும் அதே காலத்துக்கானதாகவும் காணப்படுமிடத்து, எதிர்த் தீர்க்கப்படலாம்.

தற்காலிக வேறுபாட்டைப் பயன்படுத்தத்தக்க எதிர்கால வரிவிதிக்கத்தகு இலாபங்கள் காணப்படத்தக்க நிகழ்தகவின் அளவுக்கே பிற்போடப்பட்ட வரிச் சொத்து ஏற்பிசைவு செய்யப்படும். பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் மீளாய்வு செய்யப்படுவதுடன், தொடர்புபட்ட வரிப் பயன் கிடைக்கத்தகாத நிகழ்தகவின் அளவினால் குறைக்கப்படும்.

சேய்க் கம்பனிகள் மற்றும் துணைக் கம்பனிகளின் பங்கிலாப வருமானத்தில் நிறுத்தி வைக்கப்படும் வரியானது ஒன்றித்த வருமானக் கூற்றில் செவலினமாக ஏற்பிசைவு செய்யப்படுவதுடன், தொடர்புபட்ட பங்கிலாபங்களை செலுத்துதற்கான பரிப்பானது ஏற்பிசைவு செய்யப்படும்.

### 3.6 கணக்கியல் கொள்கைகள் மற்றும் வெளிப்பாடுகளில் மாற்றங்கள்

LKAS 41 & 16 எல் திருத்தம் - அறுவடை செய்யக்.கூடிய விளைபொருட்கள் தாங்கி உயிரியல் சொத்துக்களில் வளர்கின்றன.

LKAS 16 கான திருத்தங்கள் முறையே, ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள் மற்றும் LKAS 41 வேளாண்மை, அறுவடைக்கு முன்னர் அதன் நுகரத்தக்க பயிர்களில் இருந்து ஆலைகளில் இருந்து வெவ்வேறாக விற்க குறைந்த செலவில், தாவரங்களில் வளரும் விவசாய விளைபொருட்களை சந்தை விலையில் அங்கீகரிக்க வேண்டும். ஆரம்ப அங்கீகாரத்திற்குப் பிறகு, நுகரத்தக்க தாவரங்களில் வளரும் அத்தகைய விளைபொருட்களின் சந்தை பெறுமதியில் ஏற்படும் மாற்றங்கள் ஒவ்வொரு அறிக்கையிடல் காலத்தின் முடிவிலும் இலாபம் அல்லது இழப்பில் அறியப்படும். அதன்படி நிறுவனம் இத்திருத்தங்களை நிதிக்கூற்றுக்களில் பின்னோக்கி பயன்படுத்தியது.

### 3.7 துறைசார் அறிக்கையிடல்

நிறுவனத்தின் வெவ்வேறு வியாபாரத் துறைகள் தொடர்பான தகவல்கள் துறைசார் அறிக்கையில் உள்ளடங்குகின்றது. தோட்டங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ள புவியியல் அமைப்புக்கள் பிரகாரம் வியாபாரத் துறைகள் தீர்மானிக்கப்பட்டுள்ளது. துறைசார் செயற்பாடுகள் நிதிக்கூற்றுக்களில் குறிப்பு 26 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. பெருந்தோட்டங்களின் புவியியல் ரீதியான அமைப்புக்கள் கீழ்க்காட்டப்பட்டுள்ளன.

| குழு 1 பெருந்தோட்டங்கள் | குழு 2 பெருந்தோட்டங்கள் |
|---|---|
| சிலாப பிரதேசம் | பிங்கிரிய பிரதேசம் |
| பளுகஸ்வெவ பெருந்தோட்டம் | திவுலபிட்டிய பிரதேசம் |
| தம்பபன்னி பிரதேசம் | மாதம்பை பிரதேசம் |
| மங்கள எளிய பிரதேசம் | நிக்கவரடிய பிரதேசம் |

## நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

**31 டிசம்பர் 2023 ஆம் ஆண்டு முடிவடைந்த ஆண்டுக்கானது**

### 04. JEDB பெருந்தோட்ட வெற்றுக் காணிகளின் குத்தகை உரிமைகள்

| | | 2023<br>ரூபா. | 2022<br>ரூபா. |
|---|---|---|---|
| JEDB பெருந்தோட்ட காணிகளின் குத்தகை உரிமைகள் | 04.1 | 57,540,567 | 60,356,373 |
| JEDB பளை தோட்ட காணிகளின் குத்தகை உரிமைகள் | 04.2 | 47,833,929 | |
| | | **105,374,496** | **60,356,373** |

### 04. துநுனுட பெருந்தோட்டங்களின் வெற்றுக்காணிகளின் குத்தகை உரிமைகள

அனைத்துப் பெருந்தோட்டங்களுக்குாக 53 வருட கால குத்தகைகள் கைச்சாத்திடப்பட்டுள்ளது. இவ் அனைத்துக் குத்தகைகளும் நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்ட தினமான 1992 ஜுன் 22 இலிருந்து அமுலுக்கு வரும் வகையில் செயற்படுத்தப்படும். இவ்வனைத்து பெருந்தோட்டங்களுக்கும் உரித்தான காணி மீதான குத்தகையிலான உரிமையானது, இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தின் அவசிய விடய செயற்பாட்டுக் குழுவின் (UITF) இது தொடர்புபட்ட விதிமுறைகளுக்கு இணங்க, 1992 ஜுன் 22 அன்று நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்ட தினத்திலிருந்து உடனடியாகவே புத்தகங்களுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. இந்த நோக்கத்திற்காக, 1995 மார்ச் 08 அன்று இடம்பெற்ற பணிப்பாளர் சபையின் கூட்டத்தில் இவ்வெற்றுக் காணிகளை, நிறுவனத்தை ஸ்தாபிப்பதற்கு முன்பாக திரு. டீ. ஆர் விக்ரமசிங்க வினால் மதிப்பிடப்பட்ட மதிப்பீடுகள் மீள்மதிப்பீடு செய்ய தீர்மானிக்கப்பட்டது.

1992 ஜுன் 22 அன்று இச்சொத்துக்கள் ஐந்தொகைக்கு கொண்டு செல்லப்பட்ட பின் 53 வருடங்களுக்கு சமமான அடிப்படையில் பெறுமான இழப்பு செய்யப்படுவதுடன், இவ் அறிக்கையிடப்பட்ட திகதியிலான எஞ்சியுள்ள குத்தகைக் காலம் 22..5 வருடங்களாகும்.

| | மொத்த கொண்டு செல்லும் பெறுமதி | | |
|---|---|---|---|
| | 31.12.2023<br>அன்று<br>ரூபா. | சேர்ப்பனவு /<br>(அகற்றல்)<br>ரூபா. | 31.12.2022<br>அன்று<br>ரூபா. |
| வெற்றுக்காணிகளின் மீதான குத்தகை உரிமை | **142,188,257** | **(314,030.00)** | **142,502,287** |

| | Amortization | | | |
|---|---|---|---|---|
| | 31.12.2023<br>அன்று<br>ரூபா. | ஆண்டுக்கான<br>அகற்றல்கள்<br>ரூபா. | ஆண்டுக்கான<br>ரூபா. | 31.12.2023<br>அன்று<br>ரூபா. |
| வெற்றுக்காணிகளின் மீதான குத்தகை உரிமை | **84,647,690** | **(182,904)** | **2,684,680** | **82,145,914** |

| | கொண்டு செல்லும் பெறுமதி | |
|---|---|---|
| | 31.12.2023<br>அன்று<br>ரூபா. | 31.12.2022<br>அன்று<br>ரூபா. |
| வெற்றுக்காணிகளின் மீதான குத்தகை உரிமை | **57,540,567** | **60,356,373** |

### 04.2 JEDB பளை தோட்ட காணிகளின் குத்தகை உரிமைகள்

(அ) பளை தோட்டம் 30 ஆண்டுகளுக்கு குத்தகை ஒப்பந்த அடிப்படையில் பெறப்பட்டுள்ளது. பளை தோட்டத்தின் குத்தகை உரிமையானது: 2023 பெபரவரி 09 தினத்துக்கு ஏடுகளில் பதியப்பட்டுள்ளது. இச் சொத்தானது 2023 பெபரவரி 09 அன்று ஐந்தொகையில் பதியப்பட்டு அன்றிலிருந்து 30 வருடங்களுக்கு சமகால அடிப்படையில் காலத்தேய்மானம் செய்யப்படும்.

(ஆ) "முனமலை ஐயங்கல் தோட்டம், விஸ்வலிங்கம் தோட்டம், மற்றும் காசிப்பளைகாணி தோட்டம் ஆகிய தோட்டங்கள் 30 ஆண்டுகளுக்கு குத்தகை ஒப்பந்த அடிப்படையில் பெறப்பட்டுள்ளது. இத்தோட்டங்களின் குத்தகை உரிமையானது: 2023 அப்ரேல் 26 தினத்துக்கு ஏடுகளில் பதியப்பட்டுள்ளது.

இச் சொத்தானது 2023 அப்ரேல் 26 அன்று ஐந்தொகையில் பதியப்பட்டு அன்றிலிருந்து 30 வருடங்களுக்கு சமகால அடிப்படையில் காலத்தேய்மானம் செய்யப்படுவதோடு அறிக்கையிடும் தினத்துக்கு மிகுதி இருக்கும் காலம் 29 வருடங்களும் 4 மாதங்களும் ஆகும்.

எவ்வாறாயினும் இச்சொத்துக்களை மாற்றும் போது, கணக்கியல் பதிவுகளுக்கு புத்தகப் பெறுமதி எதுவும் இல்லை. எனவே முனமலை ஐயங்கல் தோட்டம், விஸ்வலிங்கம் தோட்டம், மற்றும் காசிப்பளைகாணி தோட்டங்களின் நிலமதிப்பு குத்தகை வாடகை மற்றும் எதிர்கால தள்ளுபடி விலை 12.5% அடிப்படையில் மதிப்பிடப்பட்டது.

| | மொத்த கொண்டு செல்லும் பெறுமதி | |
|---|---|---|
| | 31.12.2023 அன்று ரூபா. | 31.12.2022 அன்று ரூபா. |
| வருட ஆரம்பத்தில் | - | - |
| சேர்ப்பனவு | 49,101,423 | - |
| வருட இறுதியில் | 49,101,423 | - |

| | பெறுமான இழப்பு | | |
|---|---|---|---|
| | 31.12.2023 அன்று ரூபா. | ஆண்டுக்கான ரூபா. | 01.01.2023 அன்று ரூபா. |
| வெற்றுக்காணிகளின் மீதான குத்தகை உரிமை | **1,267,494** | **1,267,494** | **-** |

| | கொண்டு செல்லும் பெறுமதி | |
|---|---|---|
| | 31.12.2023 அன்று ரூபா. | 31.12.2022 அன்று ரூபா. |
| வெற்றுக்காணிகளின் மீதான குத்தகை உரிமை | **47,833,929** | **-** |

**31 டிசம்பர் 2023 ஆம் ஆண்டு முடிவடைந்த ஆண்டுக்கானது**

## 05. JEDB பெருந்தோட்டத்தின் குத்தகையில் பெற்ற அசையா சொத்துக்கள் (காணி மீதான குத்தகை உரிமை மற்றும் குத்தகையில் பெற்ற உயிரியல் ஆதனங்கள் தவிர)

பெருந்தோட்டங்களின் தனியார் மயமாக்கல் காலப்பகுதியில் காணப்பட்ட, இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தின் அவசிய விடய செயற்பாட்டுக் குழுவின் (UITF) விதிமுறைகளுக்கு இணங்க, இத்தோட்டங்களில் நிதிக்குத்தகையில் காணப்பட்ட அனைத்து அசையாச் சொத்துக்களும் 1992 ஆம் ஆண்டு ஜூன் 22 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வரத்தக்கவாறு முன்விளைவுள்ள வகையில் நிறுவனத்தின் ஏடுகளில் பதியப்பட்டது. இந்த நோக்கத்திற்காக, பணிப்பாளர் சபை 1995 மார்ச் 8 ஆம் திகதி இடம்பெற்ற சபைக் கூட்டத்தில், நிறுவனம் ஆரம்பிக்கப்பட்ட நாளின் அடுத்துவரும் தினத்தில் JEDB/SLSPC இன் ஏடுகளில் காணப்படும் புத்தகப் பெறுமதியிலேயே எடுக்கப்படுவதற்குத் தீர்மானம் மேற்கொண்டது. இச்சொத்துக்கள் 1992 ஜூன் 22 ஆம் திகதி ஐந்தொகைக்கு கொண்டுவரப்பட்டதுடன், 2022 டிசம்பர் 31 ஆம் திகதி வரையான அசையாத பெருந்தோட்டச் சொத்துக்களின் பெறுமான இழப்புக்கான ஏற்பாடுகள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| மதிப்பீட்டில் | காணி மீதான அபிவிருத்தி ரூபா. | ஏனைய சொந்தமான சொத்துக்கள் ரூபா. | கட்டடங்கள் ரூபா. | இயந்திரங்கள் ரூபா. | நீர் வழங்கள் ரூபா. | 2023 ரூபா. | 2022 ரூபா. |
|---|---|---|---|---|---|---|---|
| மூலதனமாக்கப்பட்ட பெறுமதி | 841,193 | 1,002,944 | 25,356,498 | 530 | 4,026,236 | 31,227,401 | 31,227,401 |
| **பெறுமான இழப்பு** | | | | | | | |
| ஜனவரி 01 அன்று | 71,725 | 1,002,944 | 25,356,498 | 530 | 4,026,236 | 30,457,933 | 30,441,110 |
| ஆண்டுக்கான பெறுமான இழப்பு | - | - | | - | - | - | 16,823 |
| டிசம்பர் 31 அன்று | 71,725 | 1,002,944 | 25,356,498 | 530 | 4,026,236 | 30,457,933 | 30,457,933 |
| **கொண்டு செல்லும் பெறுமதி** | **769,467.50** | - | - | - | - | **769,468** | **769,468** |

## 05.1. JEDB பெருந்தோட்டங்களின் உயிரியல் சொத்துக்களின் குத்தகை உரிமை

| | | 2023 ரூபா. | 2022 ரூபா. |
|---|---|---|---|
| 5.1.1 | JEDB உயிரியல் சொத்துக்களின் குத்தகை உரிமை | 9,051,201 | 10,939,028 |
| 05.1.2 | JEDB பளை தோட்ட உயிரியல் சொத்துக்களின் குத்தகை உரிமை | 18,110,918 | - |
| | | **27,162,119** | **10,939,028** |

## 05.1. JEDB பெருந்தோட்டங்களின் வெற்றுக்காணிகளின் குத்தகை உரிமைகள்

| | 2023 ரூபா. | 2022 ரூபா. |
|---|---|---|
| **மீள்மதிப்பீடு** | | |
| | 78,277,446 | 78,790,334 |
| முதிர்ந்த பயிர்ச்செய்கை | (429,210.90) | (512,888) |
| அகற்றல் சீராக்கம் | **77,848,235** | **78,277,446** |
| | 67,338,419 | 65,810,019 |
| 01 ஜனவரி அன்று | 1,887,827 | 2,041,287 |
| ஆண்டுக்கான பெறுமான இழப்பு | (429,211) | (512,888) |
| அகற்றல் சீராக்கம் | **68,797,035** | **67,338,419** |
| **31 டிசம்பர் அன்று** | | |
| **கொண்டு செல்லும் பெறுமதி** | **9,051,201** | **10,939,028** |

பெருந்தோட்டங்கள் குத்தகை அடிப்படையில் நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்ட போது காணப்பட்ட முதிர்வுறாத பயிர்கள் மீதான முதலீடுகள் (1992 ஜூன் 22 இல் உள்ளவாறாக மீள்மதிப்பிடப்பட்டு) முதிர்வுறாத பயிர்களின் கீழ் காட்டப்பட்டுள்ளதுடன், அறிக்கையிடப்படும் தினத்தில் அவை அனைத்தும் முதிர்வுற்ற பயிர்களுக்கு மாற்றப்பட்டுள்ளன. மேலும், நிறுவனத்தினால் முதிர்வுற்ற மற்றும் முதிர்வுறாத பயிர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் தனித்தனியாக, குறிப்பு இலக்கம் 7.1 குத்தகை கொள்ளப்பட்ட ஆதனம் மீதான விருத்திகள் இல் (முதிர்வுற்ற/முதிர்வுறாத பயிர்கள்) காட்டப்பட்டுள்ளன. இம் முதிர்வுற்ற.்.முதிர்வுறாத பயிர்கள் இலங்கைக் கணக்கீட்டு நியமம் 41 "விவசாயம்" இன் கீழ் குத்தகையிலான உயிரியல் சொத்துக்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

### 05.1.2. JEDB பளை தோட்ட உயிரியல் சொத்துக்களின் குத்தகை உரிமை

JEDB மற்றும் சிலா. பெருந்தோட்ட நிறுவனம் குத்தகை ஒப்பந்தம் மூலம் பளை தோட்டத்தில் உள்ள (முதிர்ந்த) உயிரியல் சொத்துக்கள் 2023 பெபரவரி 09 முதல் பெறப்பட்ட பின்னர் நிறுவனத்தின் ஏடுகளில் பதியப்பட்டுள்ளது. இச்சொத்துக்கள் 30 வருடங்களுக்கு சமகால அடிப்படையில் காலத்தேய்மானம் செய்யப்படும்.

எவ்வாறாயினும் இச்சொத்துக்களை மாற்றும் போது, கணக்கியல் பதிவுகளுக்கு புத்தகப் பெறுமதி எதுவும் இல்லை. எனவே பளை தோட்டத்தின் இவ் உயிரியல் சொத்துக்களாவன நிலமதிப்பு குத்தகை வாடகை மற்றும் எதிர்கால தள்ளுபடி விலை 12.5மூ அடிப்படையில் மதிப்பிடப்பட்டது.

| | 2023<br>ரூபா. | 2022<br>ரூபா. |
|---|---|---|
| **பளை தெங்கு நில பெறுமதி** | | |
| வருட ஆரம்பத்தில் | - | - |
| ஆண்டுக்குள் சேர்ப்பனவுகள் | 18,666,656 | |
| **வருட இறுதியில்** | **18,666,656** | - |
| ஜனவரி 01 அன்று | - | - |
| ஆண்டுக்கான காலத்தேய்மானம் | 555,738 | - |
| அகற்றல் சீராக்கங்கள் | | |
| டிசம்பர் 31 அன்று | **555,738** | - |
| **கொண்டு செல்லல் பெறுமதி** | **18,110,918** | - |

### 06 குத்தகை சொத்துக்களுக்கான விருத்தி (உயிரியல் சொத்துக்கள்)

| | | முதிர்வுற்ற பயிர்ச்செய்கை | | | | |
|---|---|---|---|---|---|---|
| **கிரயம்** | முதிர்வுறாத பயிர்ச் செய்கை<br>ரூபா. | தென்னை<br>ரூபா. | மரமுந்திரிகை<br>ரூபா. | ஏனையவை<br>ரூபா. | 2023<br>ரூபா. | 2022<br>ரூபா. |
| வருட ஆரம்பத்தில் உள்ளவாறு: | 237,365,906 | 811,456,212 | 100,026,612 | 7,968,053 | 1,156,816,784 | 1,102,278,731 |
| சேர்ப்பனவுகள் | 59,035,164 | | - | | 59,035,164 | 54,538,053 |
| முதிர்வுறாதவைகளில் இருந்து மாற்றல் | | 55,790,869 | - | - | 55,790,869 | 109,982,407 |
| முதிர்வுற்றவைகளுக்கு மாற்றல் | (55,790,869) | - | - | - | (55,790,869) | (109,982,407) |
| சொத்துக்களின் சேத இழப்பு | - | (3,777,233) | - | - | (3,777,233) | - |
| வருட இறுதியில் உள்ளவாறு: | **240,610,201** | **863,469,849** | **100,026,612** | **7,968,053** | **1,212,074,715** | **1,156,816,784** |
| **பெறுமானத்தேய்வு** | | | | | | |
| வருட ஆரம்பத்தில் உள்ளவாறு: | | 77,449,327 | 48,517,474 | 2,024,784 | 127,991,586 | 109,562,644 |
| ஆண்டுக்கான தேய்மானம் | | 16,177,586 | 4,001,064 | 398,403 | 20,577,053 | 18,428,942 |
| சொத்துக்களின் சேத இழப்பு | | (250,644) | | - | (250,644) | - |
| வருட இறுதியில் உள்ளவாறு: | | **93,376,269** | **52,518,538** | **2,423,187** | **148,317,995** | **127,991,586** |
| **கொண்டு செல்லல் பெறுமதி** | **240,610,201** | **770,093,579** | **47,508,074** | **5,544,866** | **1,063,756,720** | **1,028,825,198** |
| **மூலதன குறைவேலை** | | | | | | |
| ஜனவரி 01 அன்று | | | | | - | - |
| ஆண்டுக்குள் சேர்ப்பனவுகள் | | | | | 10,058,485 | - |
| ஆண்டுக்குள் மூலதனமாக்கப்பட்டவை, வெளி மாற்றல் | | | | | - | - |
| டிசம்பர் 31 அன்று | | | | | 10,058,485 | - |
| **கொண்டு செல்லல் பெறுமதி** | | | | | **1,073,815,205** | **1,028,825,198** |

## நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

**31 டிசம்பர் 2023 ஆம் ஆண்டு முடிவடைந்த ஆண்டுக்கானது**

**குறிப்பு:**

இவை நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்ட திகதியிலிருந்துவரும் முதிர்வுறாத மற்றும் முதிர்வுற்ற பெருந்தோட்ட பயிர்கள் மீதான முதலீடுகள் ஆகும். பெருந்தோட்டக் குத்தகை அடிப்படையில் கையகப்படுத்தப்பட்ட சொத்துக்கள் (பெருந்தோட்டப் பயிர்கள் உட்பட) நிதிக்கூற்றுக்களில் குறிப்பு 4, 5 மற்றும் 6 இல் காட்டப்பட்டுள்ளன. மேலும் குத்தகை அடிப்படையில் கையகப்படுத்தப்பட்ட முதிர்வுறாத பயிர்ச்செய்கைகளின் மீதான முதலீடுகள் இக் குறிப்புக்களில் காட்டப்பட்டுள்ளன. அவ்வாறான பயிர்கள் முதிர்வுறும் போது, முதிர்வுற்ற நிலைமைக்கு கொண்டு வருவதற்காக மேற்கொள்ளப்பட்ட மேலதிக முதலீடு இக்குறிப்பின் பிரகாரம் முதிர்வுராதவற்றில் இருந்து முதிர்வுற்ற பிரிவிற்கு மாற்றப்படும். இதேபோன்றதோர் குறிப்பு 6 இன் பிரகாரம் JEDB/SLSPC இனால் பொறுப்பேற்கப்பட்ட, இதே பெருந்தோட்டம் மீதான குத்தகைக்கு முன்னரான முதலீட்டின் முதிர்வுறாதவைகளிலிருந்து முதிர்வுற்றவைகளுக்கான மாற்றம் குறிப்பு இலக்கம் 5.1 இன் கீழ் செய்யப்படும்.

இலங்கைக் கணக்கீட்டு நியமம் 41 இன் கீழான, உயிரியல் சொத்துக்களை அவற்றின் சீர்மதிப்பில் விற்பனைக்கான கிரயத்தைக் குறைத்த பெறுமதியில் ஏற்பிசைவு செய்வதற்கான தேவைப்பாடானது, 2012 மார்ச் 02 ஆம் திகதி இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தினால் வழங்கப்பட்ட விதிமுறையினால் வலுவிழக்க செய்யப்பட்டுள்ளது. அதன்படியாக, நிறுவனம் குத்தகையிலான உயிரியல் சொத்துக்களை இலங்கைக் கணக்கீட்டு நியமம் 16 ஆதனம், பொறி, உபகரணங்கள் நியமத்தைப் பயன்படுத்தி அளவிடத் தெரிவு செய்துள்ளது.

பயிரிடுகை செலவுகளுக்கு நிதியீட்டம் செய்வதற்கு பிரத்தியேகமான கடன்கள் பெறப்படவில்லை. ஆகையால், ஆண்டின் போது முதிர்வுறாத பயிர்களின் கீழ் கடன் கிரயங்கள் மூலதனமாக்கல் செய்யப்படவில்லை. (2023-இல்லை)

### 07.1 உயிரியல் சொத்துக்கள் - கால்நடைகள்

| | | 2023<br>ரூபா. | 2022<br>ரூபா. |
|---|---|---|---|
| பாற்பண்ணை கால்நடைகள் | 07.1.1 | 10,221,915 | 9,507,450 |
| ஏனைய கால்நடைகள் | 07.1.2 | 15,322,900 | 16,271,650 |
| | | **25,544,815** | **25,779,100** |

### 07.1.1 பாற்பண்ணை கால்நடைகள்

| | முதிர்வுறாத பசுக்கள் (கன்றுகள் / கன்னிப் பசுக்கள்)<br>ரூபா. | முதிர்வுற்ற பசுக்கள் (பால் தரும் / தராத)<br>ரூபா. | 2023<br>ரூபா. | 2022<br>ரூபா. |
|---|---|---|---|---|
| ஜனவரி 01 அன்று உள்ளவாறாக | 231,800 | 9,275,650 | 9,507,450 | 8,144,710 |
| ஆண்டுக்கான சேர்ப்பனவுகள் | 166,000 | | 166,000 | 37,210 |
| சீரமதிப்பில் ஆண்டுக்கான நலன் / (இழப்பு) | 912,888 | (112,189) | 800,699 | 3,371,630 |
| பௌதீக மாற்றங்களினாலான பெறுமதி அதிகரிப்பு / குறைவு | (30,468) | 200,779 | 170,311 | 149,672 |
| ஏனைய தோட்டங்களில் இருந்தான உள் இடமாற்றல் | | 1,228,865 | 1,228,865 | (2,126,446) |
| இறப்பு/விற்பனை | | (1,651,410) | (1,651,410) | (69,326) |
| **டிசம்பர் 31 அன்று உள்ளவாறாக** | **1,280,220** | **8,941,695** | **10,221,915** | **9,507,450** |

பாற்பண்ணையில் உள்ள கால்நடைகள் அவற்றின் சந்தை பெறுமதியில் இருந்து விற்பனைக்கான கிரயங்கள் கழிக்கப்பட்ட பெறுமதியில் அளவிடப்படும். கால்நடைகளின் சந்தை பெறுமதி தேசிய கால்நடை அபிவிருத்தி சபையினால் வெளியிடப்பட்ட சுற்றுநிருபத்தின் படி நிர்ணயிக்கப்படும்.

### 07.1.2 ஏனைய கால்நடைகள் (உயிரியல் சொத்துக்கள்)

| | எருமை மாடுகள்<br>ரூபா. | கரத்தை கட்டும் மாடுகள்<br>ரூபா. | காளை மாடுகள்<br>ரூபா. | செம்மறி / ஆடுகள்<br>ரூபா. | பசுக்கள்<br>ரூபா. | 2023<br>ரூபா. | 2022<br>ரூபா. |
|---|---|---|---|---|---|---|---|
| ஜனவரி 01 அன்று உள்ளவாறாக | 8,100,000 | 3,172,150 | 299,700 | 4,522,000 | 177,800 | 16,271,650 | 6,757,090 |
| ஆண்டுக்கான சேர்ப்பனவுகள் | 294,125 | | - | 251,200 | | 545,325 | 459,660 |
| பௌதீக மாற்றங்களினாலான பெறுமதி அதிகரிப்பு / குறைவு | 87,042 | | | | | 87,042 | |
| உள் மற்றும் வெளி இடமாற்றம் | (1,228,865) | | | - | | (1,228,865) | 2,126,446 |
| இறப்பு/.விற்பனை | (849,992) | (293,850) | | (1,024,300) | (13,000) | (2,181,142) | (1,814,938) |
| சந்தை பெறுமதியில் ஆண்டுக்கான நலன்/(இழப்பு) | 978,140 | (181,000) | 58,050 | 908,100 | 65,600 | 1,828,890 | 8,743,392 |
| | **7,380,450** | **2,697,300** | **357,750** | **4,657,000** | **230,400** | **15,322,900** | **16,271,650** |

## நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

**31 டிசம்பர் 2023 ஆம் ஆண்டு முடிவடைந்த ஆண்டுக்கானது**

### 7.2 நுகரத்தக்க உயிரியல் சொத்துக்கள் - அரி மர (Timber) பயிர்ச்செய்கை

| | | 2023 ரூபா. | | | 2022 ரூபா. | |
|---|---|---|---|---|---|---|
| | முதிர்வுறாத | முதிர்வுற்ற | மொத்தம் | முதிர்வுறாத | | முதிர்வுறாத |
| ஜனவரி 01 அன்று மீதி | 761,480 | 137,552,345 | 138,313,825 | 750,354 | 134,503,285 | 135,253,639 |
| அபிவிருத்தி / முதலீடு மூலமான அதிகரிப்பு | 282,784 | | 282,783.57 | 11,126 | | 11,126 |
| உள் மற்றும் வெளி இடமாற்றம் | | - | - | | - | - |
| சந்தை பெறுமதி மாற்றங்கள் மூலம் | | 14,346,672 | 4,346,672 | | 18,598,138 | 18,598,138 |
| அடையாளம் காணப்பட்ட இலாபம் (நட்டம்) | | | | | | |
| அரிமர அறுவடை குறைவு காரணமான | | (13,645,361) | (13,645,361) | | (15,549,078) | (15,549,078) |
| **31 டிசம்பர் அன்று மீதி** | **1,044,263.91** | **138,253,656** | **139,297,920** | **761,480** | **137,552,345** | **138,313,825** |

நுகரத்தக்க உயிரியல் ஆதனங்கள் தோட்டங்களில் வளரும் அரி மரங்களையும் உள்ளடக்கும். முதிர்ச்சி அடையாத மரங்களின் கிரயமானது, அண்ணளவான சீரமதிப்பாகக் கொள்ளப்படுகிறது. மிகக் குறிப்பாக, நிலத்தில் சிறிய உயிரியல் மாற்றம் ஏற்பட்டு, அவ் உயிரியல் மாற்றத்தின் விலை மீதான தாக்கமானது பொருண்மையற்றதாக உள்ள போது இவ்வாறு கொள்ளப்படும்.

மதிப்பீடானது இலங்கை மதிப்பீட்டாளர் நிறுவனத்தின் இணைப்பாளர் திரு. ஏ.ஏ.எம்.பாதிஹ் இனால், கழிவிட்ட காசுப்பாய்ச்சல் (DCF) முறையைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளது. மரங்களின் சீரமதிப்பை அளவிடுவதற்காக அனைத்து தோட்டங்களையும் உள்ளடக்கிய ஒரு பௌதீக பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

**மதிப்பீட்டில் பயன்படுத்தப்பட்ட முக்கிய எடுகோள்கள்**

1. அரச மரக் கூட்டுத்தாபனத்தின், அரியப்பட்ட மரங்களுக்கான விலைப் பட்டியலை அடிப்படையாக கொள்ளல்
2. பின்பற்றப்பட்ட விலைகளாவன, கிரயங்கள் கழிக்கப்பட்ட பின்னரான நிகர விலை ஆகும்.
3. கழிவுக் காரணி வீதம்
   - அறுவடைக்கான வயது 5 அல்லது 5 வருடங்களுக்கு கீழ் 16%
   - அறுவடைக்கான வயது 6-15 வருடங்கள் 17%
   - அறுவடைக்கான வயது 15 வருடங்களுக்கு மேல் 18%
4. முதிர்வுக்கான காலம் 30 வருடங்களாக மதிப்பிடப்பட்டுள்ளது.

தேறிய நிகழ்காலப் பெறுமதியினை அடிப்படையாகக் கொண்டு, வெளிவாரி மதிப்பீட்டு மாதிரிகளில் முன்னிலைப் படுத்தப்பட்டுள்ள மதிப்பீடுகள், அரி மரங்களின் நீண்ட கால சுரண்டல்களைக் கருத்தில் கொண்டு அமைந்துள்ளது. உயிரியல் சொத்துக்களின் சீரமதிப்பிலான மதிப்பீட்டில் மாறிகளின் தளம்பல் தன்மையினால் காணப்படும் நிச்சமற்ற நிலைமை காரணமாக சீரமதிப்பானது அவற்றின் தேறத்தக்க பெறுமதிகளில் இருந்து வேறுபடலாம். பணிப்பாளர் சபையானது பொருட் சந்தைகள் பெரிதும் தளம்பல்களுக்கு உள்ளாவதால் நீண்ட கால விலை முற்கணிப்புகள் பெருமளவுக்கு எதிர்வுகூற முடியாதவையாக இருக்கும் என்னும் கருத்தைக் கொண்டுள்ளனர்.

அரிமரங்கள் தொடர்பாக, நிறுவனமானது பின்வரும் இடர்களுக்கு முகம் கொடுக்க நேர்ந்துள்ளது.

**விதிமுறைசார் மற்றும் சுற்றுச்சூழல் இடர்**

நிறுவனமானது இலங்கையின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டுக் காணப்படுகிறது. தேசிய சுற்றாடல் மற்றும் ஏனைய சட்ட திட்டங்களுக்கு இணங்கி செயற்படும் நோக்கில், சுற்றுச்சூழல் தொடர்பான கொள்கைகள் மற்றும் கோட்பாடுகளை நிறுவனம் நிறுவியுள்ளது. முகாமைத்துவமானது சுற்றுச்சூழல் இடர்களை இணங்கண்டு, நிறுவனத்தில் காணப்படும் முறைமைகள் அவற்றை சரியான வகையில் முகாமை செய்வதற்குப் போதியதாக உள்ளனவா என்பதை உறுதி செய்யும் நோக்கில் கிரமமான மீளாய்வுகளை மேற்கொண்டு வருகின்றது.

**கேள்வி மற்றும் நிரம்பல் இடர்**

நிறுவனம் மரங்களின் விலை மற்றும் விற்பனை அளவுகள் என்பவற்றின் தளம்பல்களால் ஏற்படும் இடருக்கு முகம்கொடுக்க நேர்ந்துள்ளது. நிறுவனமானது சாத்தியமா போது சந்தையில் காணப்படுகின்ற கேள்வி மற்றும் நிரம்பல் நிலைமைகளுக்கு ஏற்ப அறுவடைகளை சீராக்குவதன் மூலம் இந்த இடரைக் கையாளும். முகாமைத்துவம் கிரமமான முறையில் தொழில்துறையின் போக்கினை ஆய்வு செய்வதன் மூலம் நிறுவனத்தின் விலையிடல் கட்டமைப்பு சந்தையுடன் ஒத்துப்போகின்றதா என்பதையும் திட்டமிடப்பட்ட அறுவடை அளவுகள் எதிர்ப்பார்க்கப்பட்ட கேள்வி நிலைமைக்கு ஸ்திரமானதாக உள்ளதா என்பதையும் உறுதி செய்து கொள்கின்றது.

**காலநிலை மற்றும் ஏனைய இடர்கள்**

நிறுவனத்தின் அரி மரங்கள் காலநிலை மாற்றங்கள், நோய்கள், காட்டுத்தீ மற்றும் ஏனைய இயற்கைக் காரணிகள் முதலான இடர்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

### 7.3 சீர்மதிப்பில் உயிரியல் சொத்துக்களின் பெறுமதி மாற்றங்கள்

| | 2023 ரூபா. | 2022 ரூபா. |
|---|---|---|
| நுகரத்தக்க உயிரியல் சொத்துக்களின் சந்தை பெறுமதி மாற்றங்கள் (குறிப்பு 7.2) | 14,346,672 | 18,598,138 |
| நுகரத்தக்க உயிரியல் சொத்துக்களின் உற்பத்தி சந்தை பெறுமதி மாற்றங்கள் (குறிப்பு 9.1) | (4,201,128) | (3,572,756) |
| | **10,145,544** | **15,025,382** |

## 08. குத்தகையில்லா ஆதனம், பொறி, உபகரணங்கள்

| | கட்டடங்கள் ரூபா. | பொறி இயந்திரங்கள் ரூபா. | மோட்டார் வாகனங்கள் ரூபா. | உபகரணம் ரூபா. | தளபாடம் பொறுத்துகள் ரூபா. | வேலி அமைத்தல் ரூபா. | நீர் வழங்கள் ரூபா. | 2023 ரூபா. | 2022 ரூபா. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **கிரயம் / மதிப்பீடு** | | | | | | | | | |
| ஜனவரி 01 அன்று | 54,081,799 | 8,902,837 | 121,892,921 | 72,037,138 | 14,030,037 | 36,482,634 | 44,918,463 | 352,345,830 | 285,058,196 |
| சேர்க்கைகள் | 1,063,996 | - | 3,399,000 | 5,735,685 | 705,840 | 6,446,925 | 30,508,653 | 47,860,099 | 67,287,635 |
| மாற்றல்/அகற்றல் | - | - | - | (71,800) | - | - | (21,800) | (93,600) | - |
| விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ளவைக்கு மாற்றல் | | | (40,000) | | | | | (40,000) | - |
| மீள்மதிப்பீட்டுக்கு மாற்றல் | | | - | | | | | - | - |
| மீள்மதிப்பீடு | | | - | | | | | - | - |
| 31 டிசம்பர் அன்று | 55,145,795 | 8,902,837 | 125,251,921 | 77,701,023 | 14,735,877 | 42,929,559 | 75,405,316 | 400,072,329 | 352,345,830 |
| **பெறுமான தேய்வு** | | | | | | | | | |
| ஜனவரி 01 அன்று | 14,876,105 | 5,088,542 | 46,222,903 | 51,432,543 | 10,101,945 | 28,598,692 | 6,529,693 | 162,850,424 | 130,623,104 |
| ஆண்டுக்கான பெறு. தேய்வு | 1,353,907 | 560,469 | 23,928,750 | 4,466,887 | 644,447 | 3,755,633 | 2,715,152 | 37,425,245 | 32,227,320 |
| மாற்றல்/அகற்றல் | - | - | - | (18,509) | - | - | (2,180) | (20,689) | - |
| மீள்மதிப்பீடு காரணமாக மாற்றல் | | | - | | | | | - | - |
| விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ளவைக்கு மாற்றல் | | | (24,000) | | | | | (24,000) | - |
| 31 டிசம்பர் அன்று | 16,230,012 | 5,649,011 | 70,127,653 | 55,880,922 | 10,746,392 | 32,354,325 | 9,242,665 | 200,230,980 | 162,850,424 |
| **தேறிய பெறுமதி** | | | | | | | | **199,841,349** | **189,495,407** |
| **மூலதனக் குறைவேலை இறுப்புக்கள்** | | | | | | | | | |
| ஜனவரி 01 அன்று | | | | | | | | 4,234,346 | 1,786,968 |
| ஆண்டுக்காலத்திலான சேர்ப்பனவுகள் | | | | | | | | 1,262,982 | 4,014,942 |
| ஆண்டுக் காலத்தில் மூலதனமாக்கப்பட்டு மாற்றப்பட்டவை மற்றும் வெளி இடமாற்றல் | | | | | | | | 3,911,631 | 1,567,564 |
| டிசம்பர் 31 அன்று | | | | | | | | 1,585,697 | 4,234,346 |
| **கொண்டு செல்லல் பெறுமதி** | | | | | | | | **201,427,046** | **193,729,753** |

**குறிப்பு :**

மேலே காட்டப்பட்ட சொத்துக்கள், நிறுவனம் ஆரம்பித்த தினமான 11.06.1992 அன்று வர்த்தமானி அறிவித்தலின் படி பொறுப்பேற்ற அசையும் சொத்துக்கள் மற்றும் நிறுவனத்தினால் அதன் உருவாக்கத்தின் போது முதலிடப்பட்ட அனைத்து உருவச்சொத்துக்கள் ஆகும். பெருந்தோட்டக் குத்தகைகளாகப் பெறப்பட்ட சொத்துக்கள் தொடர்பான விடயங்கள் குறிப்பு 4, 5 இல் காட்டப்பட்டுள்ளன.

மேலும், நிதிக்குத்தகையின் கீழான JEDB / SLSPC தோட்டங்களின் அசையாச் சொத்துக்கள் (குத்தகையில் வைத்திருக்கப்படும் ஆதனங்கள் தவிர்ந்த) மற்றும் முதிர்ந்த அல்லது முதிர்வுறாத தோட்டங்கள் தவிர்ந்த 1992 ஜூன் 11 அன்று கையகப்படுத்தப்பட்ட உருவச் சொத்துக்களின் மதிப்பீடுகளானவை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் மற்றும் ஜனதா பெருந்தோட்ட அபிவிருத்தி சபை ஆகியவற்றிலிருந்து அத் திகதியில் பெறப்பட்ட பெறுமதிகளின் அடிப்படையில் அமைந்துள்ளன. இந்த மதிப்பீடுகள் ஒவ்வொரு தனித்தனியான சொத்துக்களுக்குமாக எமக்கு வழங்கப்படவில்லை.

## நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

**31 டிசம்பர் 2023 ஆம் ஆண்டு முடிவடைந்த ஆண்டுக்கானது**

### 09. நுகரத்தக்க உயிரியல் சொத்துக்களின் உற்பத்தி மற்றும் இறுப்புக்கள்

### 09.1 நுகரத்தக்க உயிரியல் சொத்துக்களின் உற்பத்தி

| | 2023 ரூபா. | 2022 ரூபா. |
|---|---|---|
| வருட ஆரம்பத்தில் / முன் குறிப்பிட்டது | 30,194,568 | 33,767,324 |
| நியாயமான மதிப்பில் குறைந்த விற்பனை செலவு மாற்றம் | (4,201,128) | (3,572,756) |
| ஆண்டு இறுதியின் போது | **25,993,440** | **30,194,568** |

### 09.2 இருப்புக்கள்

| | | |
|---|---|---|
| உள்ளீட்டு மூலப்பொருட்கள் | 17,786,147 | 4,248,975 |
| வளரும் பயிர்கள் - நாற்றுக்கள் | 59,792,042 | 85,583,455 |
| அறுவடை செய்யப்பட்ட பயிர்கள் | 46,964,375 | 83,550,121 |
| நுகரத்தக்கவை மற்றும் உதிரிப் பாகங்கள் | 24,392,322 | 21,905,731 |
| | 148,934,886 | 195,288,282 |
| | **148,934,886** | **195,288,282** |

### 9.3 விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள சொத்துக்ககள்

| | | |
|---|---|---|
| மொத்த கொண்டு செல்லப்படும் பெறுமதி | 400,450 | 400,450 |
| கழி: திரண்ட பெறுமாகத் தேய்வு | 400,446 | 400,446 |
| கொண்டு செல்லல் பெறுமதி | 16,004 | 4 |

#### 9.3.1 விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள சொத்துக்ககளின் கொண்டு செல்லல் பெறுமதி

| சொத்து | வாகன இல. | கிரயம். | பெ. தேய்வு | கொண்டு செல்லல் பெறுமதி |
|---|---|---|---|---|
| Hand Tractor | NW SC 1610 | 104,000 | 103,999 | 1 |
| Hand Tractor and trailer | NW SC 1611 | 145,500 | 145,498 | 2 |
| Motor Cycle | NW GB 7012 | 150,950 | 150,949 | 1 |
| Hand Tractor | NW SC 1609 | 40,000 | 24,000 | 16,000 |
| | | **440,450** | **424,446** | **16,004** |

### 10. வியாபார மற்றும் ஏனைய வருமதிகள்

| | 2023 ரூபா. | 2022 ரூபா. |
|---|---|---|
| உற்பத்திக் கடன்பட்டோர் | 40,529,623 | 18,254,360 |
| ஊழியர் கடன்பட்டோர் | 3,179,173 | 4,690,429 |
| ஏனைய கடன்பட்டோர் | 96,342,840 | 105,605,404 |
| தேங்காய்த் தும்பு செயற்திட்டம் | 13,325,233 | 13,325,233 |
| | **153,376,870** | **141,875,427** |
| தேங்காய்த் தும்பு செயற்திட்டத்திற்கான சேத இழப்பு ஒதுக்கம் | (13,325,233) | (13,325,233) |
| அறவிட முடியாக் கடன்களுக்கான சேத இழப்பு ஒதுக்கம் | (568,587) | (568,587) |
| நிராகரிக்கப்படும் தென்னைகளுக்கான ஏற்பாடு | (430,956) | (351,286) |
| | **139,052,094** | **127,630,321** |

### 11. அரச தொழில் முயற்சிகளுக்கான நிதி வசதிகள்

| | வழங்கப்பட்ட தொகை ரூபா. | 2023 ரூபா. | 2022 ரூபா. |
|---|---|---|---|
| **வருமதியாகவுள்ள கடன்** | | | |
| வரையறுக்கப்பட்ட எல்கடுவை பெருந்தோட்டக் கம்பனி | 20,000,000 | 23,519,452 | 23,519,452 |
| வரை. இலங்கை இறப்பர் உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக் கூ.தாபனம் | 10,000,000 | 10,000,000 | 10,000,000 |
| இலங்கை அரசாங்க பெருந்தோட்டக் கூட்டுத்தானம் | 20,000,000 | 23,610,959 | 23,610,959 |
| பெருந்தோட்ட சொத்துக்கள் மற்றும் தொழில் முயற்சி அபி. அமைச்சு | 15,000,000 | 15,000,000 | 15,000,000 |
| ஜனதா பெருந்தோட்ட அபிவிருத்திச் சபை | 40,000,000 | 47,627,397 | 47,627,397 |
| | **105,000,000** | **119,757,808** | **119,757,808** |
| **கழி:** | | | |
| சேத இழப்பு நட்டம் | (105,000,000) | (119,757,808) | (119,757,808) |
| | - | - | - |

## நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

**31 டிசம்பர் 2023 ஆம் ஆண்டு முடிவடைந்த ஆண்டுக்கானது**

நிறுவனமானது 2010 இல் அரச நிறுவனங்களுக்கு ரூபா. 105 மில்லியன் தொகையான தற்காலிக நிதி வசதியினை வழங்கியுள்ளது. எனினும் 2014 டிசம்பா் 31 வரை இதனை உரிய தரப்பினரிடமிருந்து மீளப்பெற முடியாதிருந்துள்ளதுடன், இக் கடன்தொகை மற்றும் அதற்கான வட்டி உட்பட்ட திரண்ட பெறுமதி ரூபா. 119,757,808 குறித்த நிறுவனங்களிடம் இருந்து வசூலிக்க முடியாமல் இருக்கின்றது. வரையறுக்கப்பட்ட சிலாபம் பெருந்தோட்ட நிறுவனத்தின் பணிப்பாளர் சபையானது 2014 முடிவந்த ஆண்டுக்கான முழுமையாக சேத இழப்புத் தொகை ஏற்பாட்டை மேற்கொள்ளத் தீர்மானத்துள்ளது.

மேற்கூறப்பட்ட அரசாங்க நிறுவனங்களிடமிருந்து 2010 தொடக்கம் 2012 வரை வட்டி வருமானத்தை வசூலிக்க முடியாது போனமையைக் கருத்தில் கொண்டு, வரையறுக்கப்பட்ட சிலாபம் பெருந்தோட்ட நிறுவனத்தின் பணிப்பாளர் சபையானது 2013 ஆம் ஆண்டில் இருந்து வசூலிக்க முடியாத வட்டி வருமானத்தைக் கணக்குகளில் ஏற்பிசைவு செய்வதில்லை எனத் தீர்மானித்துள்ளது. எனினும் 2013 முதல் 2023 வரையான வட்டி வருமானத்தைக் கணக்குகளில் எடுத்துக் கொண்டால், வருமதியாகவுள்ள மொத்தக் கடன்களாக இருந்திருக்கக்கூடிய தொகையான, ரூபா. 190,157,808 தொடர்பான விபரங்கள் கீழ்வருமாறு

| | |
|---|---|
| வரையறுக்கப்பட்ட எல்கடுவை பெருந்தோட்டக் கம்பனி | 41,119,452 |
| வரை. இலங்கை இறப்பர் உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக் கூ.தாபனம் | 10,000,000 |
| இலங்கை அரசாங்க பெருந்தோட்டக் கூட்டுத்தானம் | 41,210,959 |
| பெருந்தோட்ட சொத்துக்கள் மற்றும் தொழில் முயற்சி அபி. அமைச்சு | 15,000,000 |
| ஜனதா பெருந்தோட்ட அபிவிருத்திச் சபை | 82,827,397 |
| | **190,157,808** |

### 11.1 ஏனைய நிதிச் சொத்துக்கள்

| | ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட கடன் ரூபா. | முன் செலுத்திய ஊழியர் பயன்கள் ரூபா. | மொத்தம் ரூபா. |
|---|---|---|---|
| 01.01.2022 அன்று மீதி | 13,846,090 | 1,644,227 | 15,490,317 |
| 2022 ஆண்டில் வழங்கப்பட்ட கடன் | 8,774,477 | 5,844,523 | 14,619,000 |
| 2022 ஆண்டில் மீளபெற்றுக்கொள்ளப்பட்ட கடன் | (4,324,824) | (1,814,719) | (6,139,543) |
| **31.12.2022 அன்று மீதி** | **18,295,743** | **5,674,031** | **23,969,774** |
| 2023 ஆண்டில் வழங்கப்பட்ட கடன் | 6,856,281 | 2,525,519 | 9,381,800 |
| 2023 ஆண்டில் மீளபெற்றுக்கொள்ளப்பட்ட கடன் | (5,440,388) | (3,060,534) | (8,500,922) |
| **31.12.2023 அன்று மீதி** | **19,711,636** | **5,139,016** | **24,850,652** |
| 31.12.2022 அன்று நடைமுறை அல்லாத மீதி | 14,444,542 | 3,366,101 | 17,810,643 |
| 31.12.2022 அன்று நடைமுறை மீதி | 3,851,201 | 2,307,930 | 6,159,131 |
| **31.12.2022 அன்று மீதி** | **18,295,743** | **5,674,031** | **23,969,774** |
| 31.12.2023 அன்று நடைமுறை அல்லாத மீதி | 14,766,454 | 2,783,930 | 17,550,384 |
| 31.12.2023 அன்று நடைமுறை மீதி | 4,945,182 | 2,355,086 | 7,300,268 |
| **31.12.2023 அன்று மீதி** | **19,711,636** | **5,139,016** | **24,850,652** |

நிறுவனம் ஊழியர்களுக்கு 4% என்னும் சலுகை வீதத்தில் கடன்களை வழங்குகிறது. இக்கடனானது முதலாவது கணக்கு வைக்கப்படும் போது சாதாரண பெறுமதியில் கணக்குவைக்கப்படுகின்றது. ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட கடன்களின் சந்தை பெறுமதியானது, எதிர்பார்க்கப்பட்ட எதிர்காலக் காசுப் பாய்ச்சல்களை அதனை ஒத்த கடன்களுக்கான சந்தை வீதத்தைக் கருத்தில் கொண்டு கழிவிடுவதன் மூலம் தீர்மானிக்கப்படும். ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட கடன்களின் கிரயம் மற்றும் சீர்மதிப்பு ஆகியவற்றுக்கு இடையிலான வேறுபாடானது ஊழியர்களுக்கான முன் செலுத்திய பயன்களாக ஏற்பிசைவு செய்யப்படும். ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் வருமதிகளாக வகைப்படுத்தப்பட்டு பின்னர் குறைத்தெழுதிய பெறுமதிகளில் அளவிடப்படும். ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள் பிணையுள்ளவையாகவும் அவற்றின் வட்டி வீதம் பின்வருமாறும் காணப்படும்

**31 டிசம்பர் 2023 ஆம் ஆண்டு முடிவடைந்த ஆண்டுக்கானது**

| | சந்தை வீதம் | சலுகை வீதம் |
|---|---|---|
| 2016 | 11.00% | 5% |
| 2017 | 14.00% | 5% |
| 2018 | 13.00% | 5% |
| 2019 | 12.50% | 5% |
| 2020 | 9.25% | 5% |
| 2021 | 10.25% | 4% (w.e.f 1/9/2021) |
| 2022 | 27.25% | 4% |
| 2023 | 18% | 4% |

## 12. குறுங்கால முதலீடுகள்

| | 2023<br>ரூபா. | 2022<br>ரூபா. |
|---|---|---|
| நிலையான வைப்புக்கள் - இலங்கை வங்கி (3 மாதங்களுக்கு மேல்) | 456,311,445 | 454,968,742 |
| நிலையான வைப்புக்கள் - மக்கள் வங்கி (3 மாதங்களுக்கு மேல்) | 75,247,523 | 61,445,518 |
| **மொத்த ருறுங்கால வைப்புக்கள் 3 மாதங்களுக்கு மேல்** | **531,558,968** | **516,414,260** |
| நிலையான வைப்புக்கள் - இலங்கை வங்கி (3 மாதங்களுக்கு கீழ்) | 361,252,977 | 117,217,808 |
| திறைசேரி கட்டணங்கள், REPO (3 மாதங்களுக்கு கீழ்) | 197,431,544 | 352,028,879 |
| மொத்த ருறுங்கால வைப்புக்கள் 3 மாதங்களுக்கு கீழ் | **558,684,521** | **469,246,687** |
| **முழு மொத்தம்** | **1,090,243,489** | **985,660,947** |

நிறுவனத்தின் பணத்தேவைகளை பொறுத்து, ஒரு மாதம் முதல் பன்னிரண்டு மாதங்கள் வரையிலான பல்வேறு காலகட்டங்களுக்கு குறுங்கால வைப்பு செய்யப்படுகின்றது. மேலும் குறித்த குறுங்கால வைப்பு வீதங்களுக்கு ஏற்ப அதற்கான வட்டியை பெற்றுக்கொள்கின்றது

மேற்கூறப்பட்ட, இலங்கை வங்கியில் உள்ள நிலையான வைப்புக்கள் ரூபா. 69,807,963.00 ஆன பணிக்கொடை பொறுப்புடன் தொடர்புடைய திட்டமிடப்பட்ட சொத்துக்களைக் குறிக்கும்.

## 13. கூறப்பட்ட மூலதனம்

| | | |
|---|---|---|
| ஐளளரநன யனெ குரடடல °யனை ரேஅடிநச ழக ளூயசநள<br>விசேட உரிமைகளுடன், திறைசேரி வைத்திருக்கும்<br>ஒரு தங்கப் பங்கு உட்பட்ட சாதாரண பங்குகள் | 20,000,001 | 20,000,001 |

**வழங்கி முழுமையாக செலுத்திய பங்குகளின் எண்ணிக்கை**

| | | |
|---|---|---|
| விசேட உரிமைகளுடன், திறைசேரி வைத்திருக்கும் ஒரு<br>தங்கப் பங்கு உட்பட்ட சாதாரண பங்குகள் | 200,000,010 | 200,000,010 |

கூறப்பட்ட மூலதனமானது, விசேட உரிமைகளைக் கொண்ட ஒரு தங்கப் பங்கு உட்பட்ட, வழங்கப்பட்ட 20,000,001 சாதாரண பங்குகளுக்காக செலுத்தப்பட்ட தொகையினைக் குறிக்கும். 2007 மே 03 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வந்த 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, அதிகாரமளிக்கப்பட்ட பங்கு மூலதனம் மற்றும் முகப் பெறுமதி ஆகிய பதங்கள் அதற்குப் பின்னர் பிரயோகிக்கத் தக்கதாகாது.

## 14. பிற்போடப்பட்ட வரிப் பொறுப்பு / சொத்துக்கள்

| | 2023<br>ரூபா. | 2022<br>ரூபா. |
|---|---|---|
| ஆண்டின் ஆரம்பத்தில் இருந்தவாறு | 314,474 | (314,675) |
| ஆண்டிற்கான பதிவழிக்கப்பட்ட / (ஒதுக்கப்பட்ட) ஏற்பாடு | (1,144,447) | 66,816 |
| சொத்து மீள்மதிப்பீட்டில் பிற்போடப்பட்ட வரி சீராக்கம் | 923,148 | 562,333 |
| ஆண்டிறுதியில் உள்ளவாறு | **93,175** | **314,474** |

## நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

**31 டிசம்பர் 2023 ஆம் ஆண்டு முடிவடைந்த ஆண்டுக்கானது**

| | தற்காலிக மாற்றம் ரூபா. | வரி தாக்கம் 2023 ரூபா. | வரி தாக்கம் 2022 ரூபா. |
|---|---|---|---|
| - ஆதனம் பொறி மற்றும் உபகரணம் | (110,542,626) | (2,456,838.93) | (1,077,595) |
| - முதிர்வுற்ற / முதிர்வுறாத பயிர்கள் | - | | - |
| - நுகரத்தக்க உயிரியல் சொத்துக்கள் | - | | - |
| | | | - |
| - அறவிட முடியாத கடன்களுக்கான சேத இழப்பு ஏற்பாடு | 14,324,776 | 318,371.91 | 129,332 |
| - ஓய்வுவகாலப் பயன் கடப்பாடு | 92,025,543 | 2,045,291.89 | 633,789 |
| முன் கொண்டு செல்லப்பட்ட வரி இழப்புக்கள் | | - | - |
| முன் கொண்டு செல்லப்பட்ட வரிப் பற்றுக்கள் | | - | - |
| **பிற்போடப்பட்ட வரி சொத்து / (பொறுப்பு)** | **(4,192,307)** | **(93,175)** | **(314,474)** |
| தற்காலிக வேறுபாடுகளைக் கணிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்ட வட்டி வீதம் | | 30% | 30% |

